விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 15 ஞாயிற்றுக்கிழமை (01.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 347

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான்

## சிதம்பரம் அதிரடி

(சென்னை)


இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அத்துடன் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைக்க இந்திய அரசு தொடர்ந்தும் முயற்சிக்கும் என இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரின் வாழ்வு ரிமை[illegible], இந்திய அரசின் நிலையும் [illegible] தலைப்பிலான கருத்தரங்கம் [illegible]ன்னையில் நேற்றுச் சனிக்கிழமை நடந்தது. இதில்கலந்துகொண்டு இந்திய மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. 13-வது அரசியல் சட்டத்திருத்தத்தில் உள்ள சரத்துக்களை சீர்குலைக்க இலங்கை அரசு முயற்சி எடுத்து வருகிறது.

அதேவேளையில், 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தை அமுல்படுத்த மத்திய அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. 13-வது சட்டத் திருத்தத்தையும், இலங்கைத் தமிழர்களையும் மத்திய அரசு என்றுமே கைவிடாது. நாடாளுமனறத்தில்இலங்கைக்கு

23-ம் பக்கம் பார்க்க



## காணாமல் போன இளைஞன் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த 3 தினங்களாக காணாமல் போயிருந்த மண்டானை சுனாமி [illegible]டுத்திட்டத்தைச் சேர்ந்த 19 வயது [illegible]டய கூலித் தொழிலாளியான இந் [illegible]ரன் ரமேஷ் நேற்று சனிக்கிழமை [illegible]லமாக மீட்கப்பட்டுள்ளார்.

திருக்கோவில் மண்டானை [illegible]யத்திரி கோவிலுக்கு பின்னால் [illegible]மரம்ஒன்றில் தொங் [illegible] நிலையிலேயே

02-ம் பக்கம் பார்க்க

## இந்தியாவுக்கு கோத்தா இரகசியப் பயணம் சல்மான் குர்ஷித்தை சந்தித்து முக்கிய பேச்சு



(புதுடில்லி)

பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இந்தியாவுக்கு இரகசியப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

குறுகியகாலப் பயணம் ஒன்றை புதுடில்லிக்கு மேற்கொண்ட கோத்தாபய ராஜபக்ஷ, இந்திய பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

இதையடுத்து கொழும்பு திரும்ப முன்னதாக நேற்று முன்தினம் காலை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

பொதுநலவாயமாநாடு முடிவடைந்த பின்னர்

23-ம் பக்கம் பார்க்க

## [illegible]ரூனின் எச்சரிக்கைக்கு [illegible]லங்கை பயப்படாது

### இப்படிக் கூறுகிறார் கருணாதிலக



(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இலங்கைக்கு கால நிர்ணயம் விதித்துள்ளமை தொடர்பில் நாங்கள் பதற்றமடைய வேண்டியதில்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் அரசாங்கம் பல்வேறு வகையான முன்னேற்றங்களை வெளிக்காட்டியே வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம மேலும்

23-ம் பக்கம் பார்க்க

up to 25%
CONDITIONS APPLY
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
12, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

## வடமாகாண சபையுடன் ஒத்துழைப்பதற்கு தயார்

### – ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்திய இலங்கை அரசாங்கத்தின் செயற்பாட்டை நோர்வே பாராட்டியுள்ளது. இலங்கையின் பாதுகாப்பு இணையத்தளம் இதனை தெரிவித்துள்ளது.

நோர்வே தூதுவர் கிரீட் லொச் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தார். இதன்போது வடக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் மாகாணசபை தேர்தலை நடத்தியமையை அவர் பாராட்டியுள்ளார். இதன் போது கருத்துரைத்த

23-ம் பக்கம் பார்க்க

## ஜெனிவா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான கூட்டு யோசனை

(கொழும்பு)

அடுத்தாண்டு நடைபெறும் ஜெனிவா மனித உரிமை ஆணைக் குழுவின் கூட்டத் தொடரின் போது, இலங்கைக்கு எதிராக கூட்டு யோசனை ஒன்றை கொண்டு வர கனடா, பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் அமெரிக்கா ஏற்கெனவே இலங்கைக்கு எதிராக இரண்டு யோசனைகளை கொண்டு வந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி மூன்று நாடுகள் இணைந்து கொண்டு வரும் யோசனை எதிர்வரும் மார்ச மாதம் 21 ஆம் 23 ஆம் திகதிகளுக்கு இடைப்பட்ட நாள் ஒன்றில் கொண்டுவரப்படவிருப்பதாக ராஜதந்திர வட்டா

23-ம் பக்கம் பார்க்க

[illegible]டுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(C-5605)



## பிள்ளையார் இன்

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்
- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

தொடர்புகளுக்கு:
இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2829

(சி-5600)


## பருத்தித்துறை நகராட்சி மன்றம் வரவு செலவு திட்டம் - 2014

நகரசபை கட்டளைச் சட்டம் 255-ம் அதிகாரம், பிரிவு, 178 (3) இற்கமைவாக பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் 2014-ம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் 2013.12.01-ம் திகதியிலிருந்து பொதுமக்கள் பார்வைக் காக நகராட்சி மன்ற அலுவலகத்தில் வைக்கப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

சபா.ரவீந்திரன்
(J.P.U.M) நகரபிதா
நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

சபா.ரவீந்திரன் (ஜே.பி.யு.எம்),
சட்டத்தரணி, நொத்தாரிசு,
நகரபிதா, நகராட்சி மன்றம்,
பருத்தித்துறை.

(C-5624)

## காணாமல் போன...

அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது, குறித்த இளைஞனை கடந்த 26ஆம் திகதி அவரது தந்தையார் அடித்து கண்டித்துள்ளார். இதனையடுத்து தந்தையுடன் கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு சென்றவர் அன்றைய தினம் வீடு திரும்பவில்லை.

காணாமல்போன அவரை உறவினர்கள் தேடிவந்த நிலையில் நேற்று பகல் 12.00 மணியளவில் குறித்த பிரதேசத்தில் மாடுகளை மேய்பவர் ஒருவர் கற்பாறைகளுக்கு அருகில் உள்ள இத்தி மரத்தில் இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக இருப்பதை கண்டுள்ளார்.

இது குறித்து பொலிசாருக்கு தகவல் வழங்கினர். அதனையடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

இச் சம்பவ இடத்திற்கு சென்ற பொத்துவில் நீதவான் நீதிமன்ற நீதிபதி ஜ.என். றிஸ்வான் சடலத்தைப் பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-11)


## விற்பனை பிரதிநிதிகள் தேவை

(Sales Reps)

No - 170, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் ELCARDO நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை.

அனுபவம் தேவையில்லை
மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம் தேவை (மோட்டார் சைக்கிள் நிறுவனத்தால் வழங்கப்படும் வயதெல்லை 19-25 வரை

(4623)

தொடர்பு: 071454 0968, 0718649221



## விற்பனைக்கு

நம்பர் 1 நியூபேனார்ட் (*New Bernards*), கிறீன் வலி (*Green Valli*), ஊர்க்கோழிக் குஞ்சு ஆகிய கோழிக் குஞ்சுகள் நம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-5615)

தொடர்புகளுக்கு :- செல்வரெட்ணம்
0778448295, 0776176370



## மிகப்பிந்திய வரப்பிரசாதம்

இத்தாலி, டென்மார்க் படிக்க உழைக்க

டென்மார்க் 3 பேர், இத்தாலி பாதி ஆலோசனைக் கட்டணத்துடன்
முடிவு - 05.12.2013

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
www.thisaivisa.com

(C-5625)



## வேலைவாய்ப்பு

கல்வி / அனுபவம் உள்ள / அற்ற அனைவருக்கும் நிரந்தர தொழில் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம் / கோடியல் / புத்தகம் / பென்சில் / டொபி / பெயின்ட் / PVC / கிளவுஸ் போன்ற தயாரிப்புகளுக்கு உற்பத்தி, லேபல், பொதியிடல் பிரிவுக்கு 18 - 50 வயது ஆண் - பெண் தேவை. சம்பளம் 18000 /- 38000 /- உணவு + தங்குமிடம் குறைந்த விலைகளில்.

தொடர்பு - 077 8430 179

(C-5614)



## உடனடியான தொழில்

வருமான பிரச்சினையா ??? தொழில் தேடுகிறீர்களா ??? கவலையை விடுங்கள் ...... 18-55 ஆண், பெண்

எம்மிடம் கொழும்பை அண்மித்த பகுதிகளின் பிரபல்யமான தொழிற்சாலைகளான டொபி, ஜாம், கோடியல், பிஸ்கட் போன்ற தொழிற்சாலைகளில். [illegible] தங்குமிட வசதியுடன் மாதாந்தம் 18,000/- 25,000/- 38,000/- சம்பளங்களுடன் உற்பத்தி / லேபல் / பொதியிடல் / களஞ்சியப்படுத்தல் பிரிவுகளில் நிரந்தர உடனடி வேலை வாய்ப்பு.

0777 117 661

(C-5613)



## மாபெரும் விற்றுத் தீர்த்தல்

தவணைக் கொடுப்பனவில் மீள பெற்றதும் இல்லை
காட்சிக்கு வைத்து களங்கப்பட்டதும் இல்லை

புத்தம் புதிய

SINGER SISIL

தையல் இயந்திரங்கள்
குளிர்சாதனப் பெட்டிகள்
நம்பமுடியாத விலைக்கழிவில்



10% முதல் 30% வரை

டிசம்பர் 1 ஆம் திகதி முதல் கையிருப்பு உள்ள வரை

USHA AGENCY

No.62/32, Stanley Road, Jaffna.

Tel: 021 4923393, Fax : 021 222 2906

குறிப்பு:- தவணைக் கொடுப்பனவில் வழங்கப்பட



## சர்வதேச மருத்துவ பட்டபடிப்புக்கான உடனடி தேர்வு

VISA GUARANTEED

கொழும்பு, கண்டி, யாழ்பாணம்




தெரிந்துகொள்ளக் கூடிய தகவல்கள் :
- உலகத்தின் அதி சிறந்த மருத்துவ பல்கலைக் கழகங்களுக்கான தெரிவு - USA, Canada, UK, Australia, New Zealand, Malaysia.
- 100 ற்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் 1000 ற்கும் மேற்பட்ட பாடநெறிகளை தெரிவு செய்யலாம்.
- மருத்துவ பட்டபடிப்பு மற்றும் வேலைதள அறிவுரைகள்.
- மாணவர் Visa மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பம்.
- வெளிநாட்டு மேற்படிப்புக்கான குறைந்த கட்டணங்கள்.



| | | |
|---|---|---|
| செவ்வாய்க் கிழமை | - 3ம் திகதி டிசம்பர் | யாழ்ப்பாணம் |
| சனிக்கிழமை | - 7ம் திகதி டிசம்பர் | கண்டி |
| ஞாயிற்றுக்கிழமை | - 8ம் திகதி டிசம்பர் | கொழும்பு |

(C-5626)

முன் பதிவுகளுக்கு அழையுங்கள் - 0777 517 517 / 0777 66 22 33


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு சுதேச மல்யுத்த பயிற்சி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

கலை மற்றும் கலாசார அமைச்சினால் பெண்களுக்கான சுதேச மல்யுத்தப் பயிற்சி முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் ரீ.பீ.ஏகநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பாரம்பரிய தற்காப்புக் கலையான சுதேச மல்யுத்த பயிற்சியை மீண்டும் உயிர்ப்பிக்கும் வகையிலும் பெண்கள் தங்களது பாதுகாப்பை தாங்களே உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையிலும் அக்கலையை கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆறு மாத கால பாடநெறி என்ற அடிப்படையில் இக்கலை கற்பிக்கப்படவுள்ளது.

யாப்பகூவ, திபிரிகலே பிரதேசத்தில் அமைந்துள்ள அங்கம்பொர கிராமத்தில் குறித்த பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(அ-2)

# ஆட்பதிவு திணைக்களம் சனிக்கிழமையும் திறக்கப்படும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு, தேசிய அடையாள அட்டைகளை வழங்கும் பொருட்டு, ஆட்பதிவுத் திணைக்களம் விடுமுறை நாளான எதிாவரும் 7ஆம் திகதி சனிக்கிழமையும் திறந்திருக்கும் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் சரத்குமார தெரிவித்துள்ளார்.

இவ்வருடத்திற்கான க.பொ.த. சா/த பரீட்சைகள் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

இந்நிலையில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் சிலர் தேசிய அடையாள அட்டை இன்றி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்தே சனிக்கிழமையும் ஆடபதிவு திணைக்களத்தை திறந்து மாணவர்களுக்கு சேவை புரிய தா்மானிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## விநாடிவினா போட்டியில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கமும் வண்ணை நாவலர் மகா வித்தியாலயமும் இணைந்து நடத்திய ஆறுமுக நாவலர் குருபூசையின் போது யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட விநாடி வினா போட்டியில் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரியின் மாணவன் ச.சிவகாந்தன் முதலாம் இடத்தையும் அராலி சரஸ்வதி வித்தியாலய மாணவி க.கேனுகா இரண்டாம் இடத்தையும் மானிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி பாடசாலை மாணவி தி.லோஜினி மூன்றாம் இடத்தையும் பெற்று வெற்றியீட்டியுள்ளனர். (அ-5)

# வாரம் ஒரு தகவல்

## அடிவாங்கும் ஆடவர்

"இன்ஸ்பெக்டர் ஐயா... என்னைக் கொஞ்சம் காப்பாற்றுங்கள்...!"

"என்னப்பா என்ன விடயம்... பயப்படாமல் சொல்!"

"என் சம்சாரம் என்னை அடிக்க வர்றா...!"

"இது ஒரு பெரிய புகார் என்று சொல்ல வந்துவிட்டாயாக்கும்.. தென்அமெரிக்காவில் என்ன நிலைமை தெரியுமா? அங்கேயெல்லாம் மனைவியிடம் உதைவாங்குவோர் எண்ணிக்கை வரவர அதிகமாகிக் கொண்டே வருகிறதாம்!"

"என்ன... சொல்றீங்க?"

"கொலம்பியா பல்கலைக்கழகம் ஒன்றில் இதைப்பற்றி ஒரு புள்ளிவிபரத்தை சேகரித்திருக்கிறார்கள். அவர்கள் எடுத்த கணக்கெடுப்பின்படி மனைவியிடம் அடிவாங்குவோர் எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது"

"இதற்கு என்ன காரணம் இருக்கும்?"

"அங்கு பெரும்பாலான குடும்பங்களில் மனைவிமார் தான் வேலைக்குப் போகிறார்கள். கணவன்மார்கள் சும்மா இருக்கிறார்கள். அதனால் வீட்டுக்கார அம்மா சொல்வதைக் கேட்க வேண்டியதுதான்! இல்லையென்றால் அடி... உதை... தான்!"

"அப்படியானால் என் கதி...?"

"உடனே ஒரு வேலை தேடி உழைத்து முன்னுக்கு வா... அதற்குப் பின்னர்தான் உன் பிரச்சினை தீரும்!"

"அப்படியே செய்கிறேன்! அதற்கு முன் ஒரு சின்ன உதவி...!"

"என்னப்பா செய்யவேண்டும்... சொல்!"

"நம் ஊரில் கணவனை மிரட்டுவதற்காகவே பெண்களெல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் வைத்திருக்கிறார்கள்.

அதில் என் வீட்டுக்காரியும் ஒரு உறுப்பினர். நீங்கதான் அந்த சங்கத் தலைவியிடம் சொல்லி மனைவிக்கு கொஞ்சம் அறிவுரை சொல்லும்படி சொல்லவேண்டும்"

"அது எப்படி முடியும்?"

"ஏன் அப்படிச் சொல்றீங்க?"

"அந்தத் தலைவிதானே என் வீட்டுக்காரி!"

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கலை விழா

(யாழ்ப்பாணம்)

மார்க்கண்டு சுவாமிகள் இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை விழா நாளை திங்கட்கிழமை அறநெறிப் பாடசாலையின் அதிபர் ந.சண்முகராஜா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ப.கயிலநாயகி, கௌரவ விருந்தினராக பிரான்பற்று கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் கு.வரதராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் விழாவில் நிகழ்வுகளாக பாடல், நடனம், பரிசில் வழங்கல் ஆகியன இடம்பெறும். (அ)

✹✹✹

இணுவில் பொது நூலக சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் வருடாந்த கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு கலாசார மண்டபத்தில் சொ.ஹரிசங்கர் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட செயலக முன்பள்ளி பருவ, பிள்ளை நேய அபிவிருத்திப் பிரிவின் மாவட்ட இணைப்பாளர் ஆர்.அமலன், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் பிரதேச செயலக வலி. தெற்கு திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.பீஷ்மன், கிருபா சாரதி பயிற்சி பாடசாலையின் அதிபர் அ.கிருபாகரன், கௌரவ விருந்தினர்களாக கு.கனகரத்தினம், த.பராபரம், த.சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் குழுநடனம், நாடகம், பாடல்கள் ஆகியன இடம்பெறவுள்ளன. (அ-2)

## விசேடதேவையுள்ள மாணவர் தினம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் விசேடதேவையுள்ள மாணவர் தினம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரியில் மாகாணக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி க.நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற விரிவுரையாளரும் சங்கீத வித்துவானுமாகிய பொன்.ஸ்ரீவாமதேவன், யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் ஆ.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ்விழாவில் கலை நிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

அத்துடன் வரவேற்பு ஊர்திப் பவனியொன்று மாகாண கல்வித் திணைக்கள பிரதான வாயிலில் இருந்து ஆரம்பித்து யா/இராமநாதன் கல்லூரியைச் சென்றடையவுள்ளது. (அ-2)

# இராசி பலன்

1.12.2013
(கார்த்திகை 15, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
திரயோதசி முற்பகல் 9.40 மணிவரை
சுவாதி முற்பகல் 2.23 மணிவரை
இராகுகாலம் 4.44-6.14 மணிவரை
சுபநேரம் 9.14-10.44 மணிவரை

**மேடம்** வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், வாழ்க்கைத்துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரும், தேகநலன் சீராகும், அபூர்வ சந்திப்புகள் இடம்பெறலாம்.

**இடபம்** தொழில் சம்பந்தமாக புதிய முடிவுகள் எடுப்பீர்கள், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசங்கள் கிடைக்கலாம்.

**மிதுனம்** உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், பிள்ளைகளின் கல்வி நலனில் அக்கறை காட்டுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.

**கடகம்** கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காக வங்கிகளின் உதவியை நாடுவீர்கள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், புதிய நபர்களின் அறிமுகம் ஏற்படலாம், மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**சிங்கம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில்கூட சிறப்படையும் நாள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி** திறமைமிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கப் பெறுவீர்கள், பணியாளர் தொல்லை அகலும், உங்கள் வார்த்தையை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், வழிபாட்டால் சந்தோசம் காண வேண்டிய நாள்.

**துலாம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**விருச்சிகம்** பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியத்தை முடிப்பதில் சற்று தாமதங்கள் ஏற்படலாம், மனச் சஞ்சலங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள், சுப செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்கள் வாங்குவதில் பிரியப்படுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத வகையில் சில உதவிகள் கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலைபேசித் தகவல் மனக்குழப்பத்தை அகற்றும், பயணங்களால் பலனுண்டு, தொழில் நிமிர்த்தம் புதிய திட்டங்களை தீட்டுவீர்கள்.

**மீனம்** வரவும் செலவும் சமமாகும், எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, பிறரது வேலைகளையும் எடுத்துச் செய்யும் சூழ்நிலை உருவாகலாம், போசன சுகமுண்டு.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 - 100 | 120 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 70 |
| தக்காளி | 30 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 50 |
| கோவா | 30 | 20 | 60 |
| கரட் | 40 - 60 | 40 | 40 |
| பூசணி | 30 | 30 | 30 |
| புடோல் | 20 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 120 - 240 | 220 | 220 |
| பெரிய வெங்காயம் | 120 | 180 | 140 |
| பாகற்காய் | 80 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 30 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 |
| பயற்றங்காய் | 60 | 80 | 30 |
| லீக்ஸ் | 60 | 60 | 90 |
| பீற்றூட் | 30 | 30 | 30 |
| கறிமிளகாய் | 90 - 120 | 60 | 70 |
| முருங்கைக்காய் | 60 - 100 | 50 | 60 |
| போஞ்சி | 125 | 90 | 100 |
| கத்தரி தம்புள்ள | 20 | - | - |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 |
| தேசிக்காய் | 80 - 110 | 80 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 30 - 55 | 50 | 45 |
| இராசவள்ளி | 220 | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு


(மானிப்பாய்)

கடந்த சில மாதங்களிற்கு முன் இடம் பெற்ற வடக்கு மாகாண முகாமைத்துவ உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டவர்களிற்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

ஆட்சேர்ப்பிற்காக முன்னர் இடம்பெற்ற பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்முகத்தேர்வுக்கு உட்படுத்தப்பட்டு பின் இவர்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 219 பேருக்கே நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 136 பேரும் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 10 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 30 பேரும் வவுனியா மாவட்டத்திலிருந்து 5 பேரும் மன்னார் மாவட்டத்திலிருந்து 38 பேருமாக 219 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே தேர்தலிற்கு சில வாரங்களிற்கு முன்பு இந்நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் இந் நியமனம் வழங்கப் படவுள்ளது. (அ-9-23)



நன்றி:- மிரர்

# ஆளும் தரப்பின் கடும் எதிர்ப்பால் வரவு செலவுத் திட்டம் கைவிடப்பட்டது

வலி.தென்.மேற்கு பிரதேச சபையினால் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் ஆளும் தரப்பின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

மேற்படிபிரதேசசபையின்விசேடகூட்டமொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பதில் தவிசாளர் ச.சிவகுமார் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது 2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை பதில் தவிசாளர் சபையில் முன்வைத்தார்.

ஆனால், ஆளும் தரப்பினர்களினால் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமையால், இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினூடாக பிரதேச அபிவிருத்தியில் பாகுபாடு காட்டப்படும் என்பதால்தான் தாம் இத் திட்டத்தை எதிர்ப்பதாக உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.சபையினை விட்டு வெளியேறினர்.ஆயினும், அடுத்த சபைக் கூட்டத்தின் போது, வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஆதரவு பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-9-23)

# ஜனாதிபதிக்கு நல்லாசி வேண்டி பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் நல்லாசிக்காக வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தன் ஆலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பூஜை வழிபாடுகளிற்காக நல்லூரான் வாசலில் பல மணி நேரமாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் காத்து நின்ற சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பிறந்த தினத்தை முன்னிட்டும் ஜனாதிபதியின் இரண்டாவது ஆட்சிக்காலத்தின் மூன்று வருட நிறைவை முன்னிட்டும் நல்லூரில் விசேட பூஜை வழிபாடுகள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டன.

அகில இலங்கை சமுர்த்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பூஜை வழிபாட்டு நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் புதிதாகப் பதவியேற்றுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 750 பேருக்கும் மேல் பங்கு கொண்டிருந்தனர்.

இந்த பூஜை வழிபாட்டில் பங்கு கொள்வதற்கென காலை 7 மணிக்கு முன்னதாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் நல்லூர் ஆலயத்துக்கு வருமாறு சமுர்த்திச் சங்கம் புதிதாகப் பதவியேற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆயினும் முற்பகல் 11 மணியளவிலேயே பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியின் இந்தப் பூஜை வழிபாடுகளுக்கு வருகை தந்திருந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் நல்லூரான் அரங்கில் வைத்து கையெழுத்துக்கள் வாங்கப்பட்டதோடு இந்த பூஜை வழிபாட்டில் பங்குகொள்வதற்கு வருகை தந்த உத்தியோகத்தர்களின் பெயர் விபரங்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் இதற்கு வருகை தராத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை

(மானிப்பாய்)

மானிப்பாய்-யாழ்ப்பாணம் பிரதான வீதியில் மின்குமிழ்கள் இன்மையால் இரவு வேளைகளில் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது இப்பிரதான வீதியிலுள்ள மானிப்பாய் மகளிர் கல்லூரியிலிருந்து கட்டுடை வரையான சுமார் 2 1/2 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டன. எனினும் இவை தற்போது அடிக்கடி பழுதடைவதோடு ஒளிராமலும் உள்ளன்.

இவ்வீதியானது பல கிராமங்களுக்குச் செல்வதற்கு பிரதான வீதியாகவுள்ளது.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையால் வீதிகள் விரைவில் இருளில் மூழ்குகின்றன. இதனால் இவ்வீதியால் செல்லும்பயணிகள் பல நெருக்கடிகளுக்குள்ளாவதோடு விபத்துக்களும் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகமாக வுள்ளன.

இது தொடர்பில் மின்சார சபையினருக்கும் பிரதேச சபையினருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, மின்குமிழ்களைப் பிரதான வீதிக்கு பொருத்தித் தருமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-23)

# சுனாமி நினைவாலயமொன்றை நிர்மாணிக்க குழு அமைப்பு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் ஆழிப் பேரலையினால் காவுகொள்ளப்பட்ட உறவுகளை நினைவு கூரும் நிகழ்வு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சமாச கேட்போர் கூடத்தில் வடமாகாணசபை உறுப்பினர் சுகிர்தன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் சுனாமி நினைவாலய கட்டுமானத்திற்கான குழு நியமிக்கப்பட்டது.

இதனடிப்படையில் குழுவின் தலைவர் சி.பாலச்சந்திரன், செயலாளர் மு.நவரட்ணம், பொருளாளர் க.சண்முகநாதன், உப தலைவர் பி.நெடுஞ்செழியன், உப செயலாளர் சி.சண்முகராசா ஆகியோருடன் நான்கு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் பூ.சஞ்சீவன், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கூட்டுறவுச்சங்கங்களின்சமாசத்தின் பொது முகாமையாளர், தலைவர், செயலாளர் ஆகியோர் பங்கு கொண்டனர். (அ-9-64)

# யாழ்.மத்திய கல்லூரி நாடகம் தேசிய மட்டத்திற்கு தெரிவு



(மானிப்பாய்)

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற நாடகப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள் ளது.

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சும் கொழும்பு ரவர் மண்டபமும் இணைந்து நடத்திய நாடகப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரியின் **எங்களின் வாழ்வு** எனும் நாடகம்தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நாடகத்திற்கான எழுத்துருவாக்கம், நெறியாள்கை என்பனவற்றை கல்லூரியின்நாடகத்துறைஆசிரியர் எஸ்.ரி.குமரன், இசையினை கோகுல் பிரசாத், றொசான், மேடை முகாமையினை பிரவீன் ஆகியோர் மேற்கொண்டுள்ளார்கள்.

தேசிய மட்டப் போட்டிகள் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கொழும்பு ரவர் மண்டப திரையரங்கில் நடைபெறவுள்ளது.(அ-9-23)





# இரத்ததானம்

(மானிப்பாய்)

இளவாலை வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இளவாலை கலைமகள் படிப்பகத்தில் நடைபெறவுள்ளது.

சங்கச் செயலாளர் சி.ரிஷாந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி விஜேதினி ஸ்ரீமேனன், சிறப்பு விருந்தினராக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்தக பண்டார, கௌரவ விருந்தினர்களாக தேசிய சம்மேள உபதலைவர் எஸ்.விஜிதரன் , இளவாலை பிரதேச வைத்தியசாலை வைத்தியர் சி.கணேசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரத்ததானம் செய்ய விரும்புவர்களை இப் பணியில் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ-9-23)





*பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் ஆசிரியர் தின விழா அண்மையில் இடம்பெற்து.*

*இந் நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் எஸ்.கிருஷ்ணசிங்கம் மங்கள விளக்கேற்றுவதனையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஸ்ரீதரன் ஆசிரியர் ஒருவரை கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.*

*(படங்கள்:-தும்பளை செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டோ உரிமையாளர்களுக்கு பொலிஸாரின் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள முச்சக்கர வண்டிகளில் பயணிகள் அமரும் இடத்திற்கு இருபக்கமுமுள்ள திறந்த வெளிகளில் ஒன்றிற்கு தடை அமைக்கப்படல் வேண்டும்.

அவ்வாறு அமைக்கப்படாத முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்கு தொடரப்படும் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் விபத்துக்கள் அதிகரித்து வருவதனால் போக்குவரத்து விதி முறைகள் இறுக்கமாக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு விபத்துக்கள் அதிகரித்து வருவதனால் போக்குவரத்து விதிகளில் சில மாற்றங்களை கொண்டுவந்துள்ளோம்.

அந்த வகையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் போக்குவரத்து பேருந்துகள் பயணிகளை ஏற்றுவதற்கோ இறக்குவதற்கோ தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனைவிட யாழ்.மாவட்டத்தில் போக்குவரத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளின் பயணிகள் உட்செல்லும் இரு பக்கங்களில் ஒருபக்கம் அடைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பாதசாரி கடவைகளில் வாகனங்களை நிறுத்துவதும் முந்திச் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சாரதிகளின் அசண்டைத் தனத்தால் ஏற்ப டும் கவனயீனத்தால் பாடசாலை மாணவர்கள் விபத்துக்குள்ளாக நேர்கின்றது.

இதனை தவிர்க்கும் முகமாகவே பொலி ஸார் இவ்வாறான போக்குவரத்து விதிமுறை ஏற் பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பொலிஸார்களுக்கிடையிலான சந்திப்பின் போது மாணவர்களால் முன்வைக்கப்படுகின்ற ஆலோசனைகள் இவை எனவும் இதனை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் அத்தியட்சகர் தெரிவித்தார். (அ-4)


## காணி விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு ஜெயாப் பிரஸ் சந்தியிலிருந்து சிறிது தூரத் தில் 4 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.

தொடர்பு: 0114949234

(4599)


# மாணவர்கள் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 94 மாணவர்கள் சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரால் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் மேற்படி நிகழ்வு எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கந்தையா வாத்தியாயர் அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக லயன்ஸ் கழக பிராந்திய ஆலோசகர் வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) பி.இரவிச்சந்திரன், லயன்ஸ் கழகத்தின் மாவட்டத் தலைவர் (கல்வி) லயன் கலாநிதி ஐ.ஜி.சந்திரசேகரம், கௌரவ விருந்தினராக இணுவில் இந்துக் கல்லூரி அதிபர் லயன் மு.செல்வஸ்தான் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு லயன்ஸ் கழகப் பிராந்தியத் தலைவர் லயன் செ.மகாதேவா அனுசரணை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(அ)


தெய்வீக பணி சிறப்புற வாழ்த்துகிறோம்



இளவாளை சித்திரமேழி
ஞான வைரவர் ஆலயகுரு
பிரம்ம ஸ்ரீ இராம பாலசந்திர குருக்கள்
அவர்களுக்கு அகில இன நல்லுறவு
ஒன்றியத்தால் வழங்கப்பெற்ற
தேச அபிமான விருதினை பாராட்டி
சிவாச்சாரியாரை வாழ்த்துகிறோம்

அன்பு நிறை பூசை ஆராதனை
அற்பணிப்பு மிகு சிவாச்சாரியார்
உள்ளும் புறமும் தெய்வீகம்
ஊரெல்லாம் மதிக்கும் உத்தமர்
தேச அபிமானி விருது பெற்ற
தெய்வீகம் கண்டு வாழ்த்துகிறோம்.

நிர்வாக சபை
சித்திரமேழி ஞானவைரவர்கோயில்
இளவாலை

(4614)



உங்கள் மின் கட்டணத்தில் குறைந்தது 10%-15% நவீன தொழில்நுட்பத்தால் சேமியுங்கள்!!!

5W எல்.ஈ.டி. மின்விளக்கு (35W மின் விளக்கை போன்ற பிரகாசமானது /CFL மின்விளக்கை விட சிறந்தது/6 மாதங்கள் உத்தரவாதம்) 390/- மட்டுமே மற்றும் அவசர மின் விளக்குடன் விசிறி, ரீச்சார்ஜபிள், ப்ளாஷ்லைட், table lamp, சோலர் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

68 CROSSETT LANE, OFF KACHCHERI NALLUR ROAD, NALLUR, JAFFNA/ Tel:0789130813/0788745253 email: christiepara@yahoo.co.in

## சிங்கள வகுப்பு

சாவகச்சேரியில் உள்ள எனது கல்வி நிலையத்திலும் மற்றும் தனிப்பட்ட ரீதியிலும் வந்து சிங்கள பாடநெறி வகுப்புக்கள் கற்றுக் கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0777732214 (4606)

## பிள்ளையார் இன்

தினமும் நிறைவான மதிய உணவு (புஃவே) 11.30 மணி தொடக்கம் 3.00 மணிவரை

- சைவ உணவு -150/= மட்டுமே
- அசைவ (கோழி) உணவு 180/= மட்டுமே

தொடர்புகளுக்கு:-இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 222 2829 (சி/5554)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532





குறைந்த கட்டணத்தில் 24 மணி நேர சேவை

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

Northern Central Hospitals

## நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

**சிறு நீர் தொகுதி சத்திர சிகிச்சை, கற்கள் அகற்றுதல் உட்பட (Urology)**



அதி நவீன உபகரணங்கள் கொண்டு சிறு நீரக சத்திர சிகிச்சை நிபுணரால் உடலில் காயமேற்படாது கற்கள் அகற்றுதல் உட்பட சகல சிறு நீர்த்தொகுதி சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

**நரம்பியல் சிகிச்சை (EMG, EEG, Sleep Disorders)**



நரம்பியல் நோய்களுக்கு மின்னியல் (EMG,EEG) பரிசோதனை மேற்கொள்ளப் படுவதுடன் நித்திரை குறைபாடுகளுக்கும் 24 மணி நேர (Sleepstudies) சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**லாபறஸ்கோப்பி (Laporoscopy)**



நவீன கருவி மூலம் வயிற்றில் சிறு துழை யிட்டு இச்சத்திர சிகிச்கை சத்திர சிகிச்சை நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.
நோயாளி உடனடியாகவே சத்திர சிகிச்சையின் பின்பு வீடு செல்லமுடியும்.

**முறிவு தெறிவு , மூட்டுக்கள் சத்திர சிகிச்சை**



வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் சென்றல் வைத்தியசாலையில் மட்டுமே முறிவு தெறிவு மற்றும் மூட்டு நோய்களுக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் வார மொரு தடவை ஆலோசனை சேவையும் சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது.

(சி-5389)

342, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 2 சூரி செவ் 6 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / கொட்டல் (பிரான்ஸ் - Not PR)<br>தொ.இ: B/121 | பிறப்பு: 1974 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 3<br>கி.பா: 36 ¼உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BED, பயிற்றப்பட்ட ஆசிரியர் /ஆசிரியர்<br>தொ.இ: G/172 |
| பிறப்பு: 1973 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகினி 1கி.பா: 37 ¾ செவ் 12 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA / ஆசிரியர்<br>தொ.இ: B/124 | பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி 2<br>கி.பா: 71 செவ் 8 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, சுருக்கெழுத்து / முகாமைத்துவ உதவியாளர் (தட்டெழுத்தாளர்)<br>தொ.இ: G/174 |
| பிறப்பு: 1976 இந்து (V)<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 25 ¾ செவ் 7 ல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BA, MA, MED / விரிவுரையாளர்<br>தொ.இ: B/134 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 54 செவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பல்கலைக் கழக பொருளியல் துறை மாணவி<br>தொ.இ: G/180 |
| பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா: 12 சூரி செவ் 6 ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L / கம்பனி (கனடா PR)<br>தொ.இ: B/137 | பிறப்பு: 1983 இந்து (V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா: 25 செவ் 2 ல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc Computer Sciences / Software Engineer<br>தொ.இ: G/521 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விதையொன்று விருட்சமானது

படைப்புலகின் ஆரம்பப் புள்ளி கனவுகள். மனிதக் கனவுகள் மாபெரும் கண்டுபிடிப்புக்களாய் மாறிய கதை மனித வரலாறு நெடுகிலும் பதியப்பட்டு வந்துள்ளது. கலைஞனின் கனவுகள் நாடகமாய், நாட்டியமாய், இலக்கியமாய், ஓவியமுமாய், சிற்பமுமாய்... பல்பரிமாணங்களில் படைப்புத் தளத்தில் வெளிவரும் போதுஅலைகாலத்தைவென்று கலையாக நிலை பெறுகிறது. கலைகளின் நிலைபேறு சமூகத்தின் அடையாளமாகி கலாசாரத்தையும் வாழ்வியலையும் நகர்த்திச் செல்கின்றன.


குருத்துவப் பணியேற்ற அருட்பணி கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் கலையார்வமும் ஒரு பெருங்கனவாகும். கலை வழியே இறை பணி எனக் கொண்டு கடந்த ஐம்பதுஆண்டுகளாகமுன்னெடுத்த கலைப் பணிகள் பலப்பல.

அவற்றுள் ஒன்றே திருமறைக்கலாமன்றத்தின்கலைத் தூது கலாமுற்றம் ஆகும்.

யாழ்ப்பாண சமூகத்தில் விருப்புக்குரிய கலைகளாக நடனமும் நாடகமும் இசையும் காணப்பட சிற்பமும் சித்திரமும் புறமொதுக்கப்பட்ட கலைஞர்களாகவே அண்மைக்காலம் வரை காணப்பட்டன. ஓவியக் கலைக்கு கணிப்பைப் பெற்றுக் கொடுத்துஇடக்குநர்அவர் களின் கனவு இன்று நனவாகி வடபுலத்தின் முதலாவது சித்திரக் கலைக் கூடமாக புதுப் பொலிவுடனும்புதுமை மெருகுடனும் எழுந்து நிற்கிறது.

*மூத்த ஓவியர் மூவரின் போஷிப்பு*

ஈழத் தமிழ் ஓவியக் கலை வரலாற்றில்கனதியானஇடத்தை வகிக்கும் மூத்த ஓவியர்கள் மூவர். திருமறைக் கலா மன்றத்தின் சித்திரச் செயற்பாடுகள் தோற்றம் பெற்ற காலந்தொட்டு இன்றுவரை போஷித்து வந்துள்ளனர்.



ஓவியர் அ.மார்க்கு ஓவியர் ரமணி என அழைக்கப்படும் வி.சிவசுப்ரமணியம், ஓவியர் ஆ.இராசையா ஆகியோரே திருமறைக்கலாமன்றத்தின் சித்திரச் செயற்பாடுகளுக்கு வடிவம் கொடுத்து ஊக்கப்படுத்தும் பெரியோர்கள் ஆவர்.

ஓவியர் மார்க்குவினால் சித்திர வகுப்புக்களும் சித்திரக் கண்காட்சிகளும் சித்திரக் கருத்தரங்குகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளன.

ஈழமண்ணின்பிரபலமான சிற்பியமாகவும் ஓவியராகவும் கலைப்பணி ஆற்றிவரும் ஓவியர்ரமணி அவர்கள்திருமறைக் கலாமன்றத்தின்இயக்கத்துடன் இணைந்திருந்தவர். திரு மறைக்கலாமன்றத்தின்இலச்சினையை வடிவமைத்தது தொடர்பாக பல்வேறு பணிகளை மன்றத் தின் செயற்பாடுகளுக்காகஆற்றி வருகிறார்.

ஓவியர் இராசையா பற்றிய பதிவுகள்இடையறாததொடர்புகள் மன்றத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்துவந்துள்ளது. கலைத்தூது கலாமுற்றம் கட்டப்படத்தொடங்கியபின்அவரது ஆலோசனைகள் சிறிய நுட்பமான விடயங்களையும் புலப்படுத்தி தெரிவுக்குட்படுத்தி இன்றைய பொலிவு பெற உதவிய பெருமை ஓவியர் ஆ. இராசையா அவர்களைச் சார்ந்து நிற்கிறது.

*முதலாவது ஓவியக் காட்சி*

கலைத்தூது-கலாமுற்றத்தின் முதலாவது ஓவியக் காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை கட்டடத்திறப்பு விழாவுடன் சேர்த்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இக்காட்சி தொடர்ந்து மூன்று மாதங்கள்வரைநடைபெறும். எமது மண்ணில் வாழ்ந்து மறைந்த ஓவியர்மார்க்கு ஓவியர் இராசரத்தினம், சிற்பி ஆனந்தன் அவர்களின் ஆக்கங்கள் சில இக்காட்சியில் தொகுக்கப்பட்டுள்ளன.

விதையொன்றுவிருட்சமாகி பயன்தரும்தருணத்தில்இதனை வளப்படுத்த ஆலோசனைகள்வழங்கிஊக்கப்படுத்தியோர் நன்றியுடன் நிறைவு கூரப்பட வேண்டியவர்களை கலைத்தூது கலாமுற்றம் யாழ்ப்பாண சமூகத்தின் ஓவியச் சொத்து, பயன்படுத்தி பயன்பெறுக.

**-பப்சி மரியதாசன்**

# சம்பந்தன் எம்.பி என்னை மிரட்டினார்

## அஸ்வர் எம்.பி. முறைப்பாடு

பாராளுமன்றஉணவகத்தில வைத்து தன்னை மிரட்டும் தொனியில் தமிழத்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நடந்து கொண்டதாக எம்.பி. ஏ.எச்.எம்.அஸ்வர் சபாநாயகரிடம் முறை யிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அஸ்வர்எம்.பி தெரிவிக்கையில,

முன்னதாக ஊடகங்க ளிடம் கோரிக்கை விடுத்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் உரை யாற்றும் உறுப்பினர்கள் உரைகளை பிரசுரிக்க முடியாது விட்டாலும் இந்த விவாதங்களில் எந்தெந்த உறுப் பனரகள்உரையாற்றினார்கள என்ற பெயர்களையாவது பிரசுரியுங்கள், என கோரி யிருந்தார்.

அதன்போது எழுந்து ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய நான் தமிழ், ஆங்கில ஊடகங்களின்பெயர்களை குறிப்பிட்டு எமக்கு அவதூறு ஏற்படுத்தும் விதத்தில் செய்திகள் வெளியிட்டுள்ளதனையே கூறினேன். சம்பந்தன் எம்.பியின் உரையை குழப்பும் விதத்தில் செயற்படவில்லை

எனது கேள்விகளால் சம்பந்தன் எம்.பிக்கு உரையாற்றுவதில் ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டிருந்தால் மனம் வருந்துகிறேன் .ஆனால் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்ற உணவகத்தில் வைத்து சம்பந்தன் எம்.பி. என்னை மிரட்டும் தொனியில நடந்து கொண்டார் என்றார்.

ஆனால் இது தொடர்பில் சபாநாயகர் எந்தக் கருத்தையும தெரிவிக்கவில்லை. (அ-2)

# இரத்ததானம்

வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை இரத்ததான நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இப் பிரதேசவாசியான வெற்றிவேலு மற்றும் வல்வெட்டித்துறைநோயாளர்நலன் புரிச் சங்கத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை வைத்திய சாலைவல்வெட்டித்துறைவைத்தியசாலைகளின் இரத்த வங்கிகள் குருதியை சேமிக்கவுள்ளன. (அ-9-10)

# யுத்த வெற்றி தினத்தை இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக்க வேண்டும்

## யோகராஜன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

அரசாங்கம் யுத்த வெற்றி விழாவாக கொண்டாடும் தினத்தை யுத்தத்தில் உயிரிழந்த அனைவரையும்நினைவு கூரும் அஞ்சலி செலுத்தும் தினமாக அரசாங்கம்பிரகடனம செய்ய வேண்டுமென ஐ.தே. கட்சி எம்.பி ஆர். யோகராஜன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவு திட்டம்மீதான விவாதத்தின்போதேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சபையில்அவர் தொடர்ந்து உரையாற்றுகையில,

தமிழ், சிங்கள மக்களிடையே நல்லிணக்கம் ஏற்படுவதை அரசாங்கம் விரும்பவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

வடக்கில்பல காலம்மாவீரர் தினம்நினைவுகூரப்படுகின்றது. ஆனால் அரசு எதிர்ப்பது ஏன்? மக்களை பிரித்து தமது ஆட்சியை தக்கவைத்துக் கொள்வதற்கேயாகும்.

. யார் மாவீரர் தினத்தை அனுஷ்டிக்கின்றனர் என சிந்தியுங்கள்? உயிரிழந்தவர்களையே உறவினர்அனுஷ்டிக்கின்றனர்.

போராளிகளாகட்டும சாதாரண மக்களாகட்டும் மரணித்தவர்களையேநினைவு கூருகின்றனர்.

கொலைகாரன் ஆகட்டும தூக்கிலிடப்பட்டவர் ஆகட்டும், தூக்கிட்டு மரணமான பின்னர இறுதிக் கடமைகளை செய்வதற்கு பூதவுடல் உறவினர்களிடம் கையளிக்கப்படும்.

நான் பயங்கரவாதம் தொடர்பாக பேசவில்லை. பலாத்காரமாக புலிகள் இயக்கத்தில இணைத்துக் கொளளப்பட்டவரொருவர் மரணித்தால நினைவு கூர, இறுதிச் சடங்குகளை நடதத இடமளிகக வேண்டும என்றார். (அ-2)

# ஷிராணியின் தீர்ப்புக்கு எதிராக மீள வழக்கு தொடர யோசனை

இசட் புள்ளி தொடர்பில் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க வழங்கிய தீர்ப்புக்கு எதிராக மீள வழக்கு பதியக் கூடிய வாய்ப்பு உள்ளதா என சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற இருப்பதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

வாய்மூல விடைக்காக நேற்று முன்தினம் ரோஸி சேனாநாயக்க எம்.பி. கடந்த 28 ஆம் திகதி எழுப்பிய கேள்விக்கு வழங்கிய பதிலை திரிவுபடுத்தி ஜெயந்த கெடகொட எம்.பி சபையில் பேசியது தொடர்பில் சபையில் விசேட அறிவித்தல் ஒன்றை வெளியிட்டார்.

இசட் புள்ளி தொடர்பில் நான் தெரிவித்த கருத்துக்களை தவறாக அவர் இங்கு வெளியிட்டுள்ளார். இசட் புள்ளி தொடர்பான உச்ச நீதிமன்ற தீர்ப்பினால் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டது.

வெளிநாட்டு சக்திகளின் தேவைக்காக சிலர் இசட் புள்ளி முறைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தனர். இதற்கு ஷிராணி பண்டாரநாயக்க பக்க சார்பான தீர்ப்பு வழங்கினார். புதிய இசட் புள்ளி முறையை தயாரித்த 5 பேராசிரியர்களின் பக்க நியாயங்கள் வினவப்படாமல் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த தீர்ப்பை ஏற்காத அன்றைய மானிய ஆணைக் குழு தலைவருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்கு பதியப்பட்டது. ஷிராணி பண்டாரநாயக்கவின் தீர்ப்பினால் 5 பேராசிரியர்களும் மன ,உளைச்சல் அடைந்தனர்.

இதில் பேராசிரியர் கருணாரத்ன மாரடைப்பால் இறந்தார். அவரது மரண வீட்டில் வைத்து நான் சகல பேராசிரியர்களிடமும் பகிரங்கமாக மன்னிப்பு கோரினேன். இந்த தீர்ப்பினால் அநீதியே ஏற்பட்டது.

எனவே இதற்கு எதிராக மீள வழக்கு தாக்கல் செய்யும இயலுமை குறித்து சட்டமா அதி பரிடம்சட்ட ஆலோசனை பெற உதேசித்துள்ளேன் என்றாா.(அ-2)

# அமைச்சர் நிமாலை பிரதமராக்குவது குறித்து ஜனாதிபதி ஆலோசனை?

(கொழும்பு)

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிக்கும் எண்ணத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக தெரிய வருகிறது.

அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த உத்தேசித்துள்ள ஜனாதிபதி முன்னதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமராக நியமிக்க ஆலோசித்து வருகிறார்.

வரவு செலவுத் திட்டம் நிறைவடைந்த பின்னர் அடுத்த வருட ஆரம்பத்தில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸை பிரதமராக நியமிக்க ஜனாதிபதி முன்னர் தீர்மானித்திருந்தாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் இருந்து எழுந்த எதிர்ப்புகள் காரணமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் வரை பிரதமர் பதவியை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சிக்குள் ஏற்பட்டுவரும் எதிர்ப்பலையை ஓரளவுக்கேனும் சமாளிக்கும் எதிர்பார்ப்பில் ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளதாக பேசப்படுகிறது.

பிரதமர் பதவியில் இருநது டி.எம். ஜயரத்ன நீக்கப்பட உள்ளதாக மலையக சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படும் அதிருப்தியை சீர்செய்வதற்காக மலையகத்தை சேர்ந்த ஒருவரான நிமால் சிறிபால டி சில்வாவை பிரதமர்க நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாக கூறப்படுகிறது. (அ-2)







நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதையும் கலை நிகழ்வு இடம்பெறுவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்வாதார பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்குவதில்லை

## செல்வம் எம்.பி.குற்றச்சாட்டு

(மன்னார்)

**எமது பிரதேச மக்களின் வாழ்விடப் பிரச்சினைகள் மற்றும் வாழ்வாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் பேசுவதுமில்லை, தீர்வுகளை வழங்குவதுமில்லை. மாறாக விடுதலைப்புலிகளை பற்றி பேசுகின்றனர் ஏன்? சிங்கள மக்களின் வாக்குகளை பெற்று ஆட்சிய திகாரத்தை தொடர்வதற்கே ஆகும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


சபையில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பெருந்தோட்டம், கடற்றொழில், விவசாயம் இம் மூன்றே எமது நாட்டின் பிரதான வருமானத்தொழில்களாகும்.

எமது பகுதியில் விவசாயமே முதலிடத்திலுள்ளது. ஆனால் அவர்களுக்கு உரமானியம் கிடைப்பதில்லை.

எமது பிரதேசங்களில் வாழும் வன்னி மக்கள் தாம் பெற்ற விவசாயக் கடனை திருப்பி செலுத்த முடியாது நட்டப்படுகின்றனர்.

மன்னார் கட்டுக்கரை குளத்து நீர் விவசாயத்திற்கு உகந்ததாக அமையுமா என ஆராயாததால் விவசாயிகள் பெரும் நெருக்கடிக்குள் சிக்



கியுள்ளனர்.

விவசாயிகளின் கடன்களை இரத்து செய்வதாக கடந்த வருடம் வரவு செலவுத் திட்டத்தில் கூறப்பட்டது.

ஆனால் எமது பிரதேச விவசாயிகளுக்கும் அந்த சலுகை வழங்கப்படவில்லை

கடல் கொந்தளிப்பால் முல்லைத்தீவு மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். ஆனால் அம் மக்களுக்கு நன்மை கிடைக்கவில்லை.

எமது கடற்பிரதேசத்தில் இந்தியா மட்டுமல்ல வேறுநாடுகளை சேர்ந்தோர் ரோலர்களால் மீன்களை அள்ளிச் செல்கின்றனர். இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது.

இப்பிரச்சினைகளையெல்லாம் அரசு கதைப்பதில்லை. மாறாக விடுதலைப் புலிகளை பற்றியே கதைக்கின்றது.

ஏனென்றால் அப்போது தான் சிங்கள மக்களின் வாக்குகளை பெற முடியும் என்பதே காரணமாகும்.

பாதைகளை திருத்துவதும் விஸ்தரிப்பதும் அபிவிருத்தி ஆகாது. மக்கள் வாழ்வதற்கு வீடுகள் இல்லை. வாழ்வாதாரம் இல்லை.

மன்னார் மாவட்டத்தில் மக்கள் மிரட்டப்படுகின்றார்கள். காணாமற் போனவர்களை எங்கே எனக் கேட்பவர்கள் அச்சுறுத்தப்படுகினறனர் என்றார். (அ-2)

# இலங்கை சனத்தொகையில் 31 இலட்சம் பேர் தமிழர்கள்

## புள்ளிவிபர திணைக்களம்

(கொழும்பு)

இலங்கையின் சனத்தொகையில் 31 இலட்சத்து 13 ஆயிரத்து 247 பேர் தமிழர்கள் என புள்ளிவிபரத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் அண்மையில் சனத்தொகை மதிப்பீடு நடத்தப்பட்டுள்ளது. இலங்கையின் மொத்த சனத்தொகை 2 கோடியே இரண்டு இலட்சத்து 63ஆயிரத்து723 எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒரு கோடியே 51 இலட்சத்து 73 ஆயிரத்து 820 பேர் சிங்கள மக்களாவர். 18 இலட்சத்து 69 ஆயிரத்து 820 பேர் முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. 33 ஆயிரத்து 61 பேர் பர்கர் இனத்தவர்கள். 40 ஆயிரத்து 189 பேர் மலே இனத்தவர்கள்.

2011 தொடக்கம் 2012 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சனத் தொகை மதிப்பீட்டிற்காக 173 கோடி ரூபா செலவாகியுள்ளது. மதிப்பீடு நடவடிக்கைகளுக்காக 99 ஆயிரம் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்களும் புள்ளிவிபரத் திணைக்களமும் இணைந்து மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பௌத்தர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 42 இலட்சத்து 21ஆயிரத்து 844 ஆகும்.

இந்துக்களின் எண்ணிக்கை 25 இலட்சத்து 54 ஆயிரத்து 606 ஆகும். முஸ்லிம்களின் எண்ணிக்கை 19 இலட்சத்து 67 ஆயிரத்து 227 எனவும் றோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 15 இலட்சத்து 9 ஆயிரத்து 606 எனவும் அறிவித்துள்ளது. (அ-2)

# உச்ச நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரத்தின் ஓர் அங்கமா?

## மங்கள எம்.பி.கேள்வி

(கொழும்பு)

இலங்கையின் உச்ச நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு அங்கமாக மாறியுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகளை மீறி வருகிறது. மனித உரிமை, ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம் என்பவற்றை அரசாங்கம் மீறி வருகிறது.

நாட்டின் உச்ச நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு அங்கமாக மாறியுள்ளது.

அத்துடன் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் 54 அங்கத்துவ நாடுகளில் 21 நாடுகளின் தலைவர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

இதன் மூலம் உலகில் இலங்கை எந்தளவுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது.

வறுமையை ஒழிப்பது பொது நலவாய நாடுகளின் மாநாட்டின் பிரதான தொனிப் பொருளாக இருந்த போதிலும் இலங்கை அரசாங்கம் நாட்டில் உள்ள வறிய மக்களை மேலும் அதளபாதாளத்திற்குள் தள்ளிவிட்டுள்ளது என்றார். (அ-2)

# கட்டுரைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் கலாசார பிரிவினால் ஒளிவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும் என யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (2)

# 49 ஆவது நினைவு தினமும் கூட்டுறவு தின விழாவும்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கத்தின் 49 ஆவது நினைவு தினமும் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா மற்றும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்க மண்டபத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக வடமாகாண சபை தவிசாளர் சி.வி.கே.சிவஞானம், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை தலைவர் லலித் ஏ.பீரிஸ், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், எஸ்.சுகிர்தன், வடமாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருமான திருமதி மதுமதி வசந்தகுமார், கன்னாதிட்டி மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன், யாழ்ப்பாணம் கூ.அ.உ. ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், யாழ்ப்பாணம் மக்கள் வங்கி பிரதான வீதிக்கிளை முகாமையாளர் அ.பிரான்சிஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

நினைவுரையை யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை முன்னாள் தலைவர் பெ. கனகசபாபதி நிகழ்த்துவார்.

இவ் விழாவில் 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டி வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கல் இடம்பெறவுள்ளன. (அ-2)



இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கூட்டுறவாளர்கள் அண்மையில் யாழிற்கு விஜயம் மேற்கொண்ட வேளை பண்டத்தரிப்பு ப.நோ.கூட்டறவு சங்கத்திற்கு வருகை தந்த போது... (படங்கள்:மானிப்பாய் செய்தியாளர்)

# இலங்கை கடற்படைக்கு இந்திய கடற்படை பயிற்சி வழங்க இணக்கம்

(கொழும்பு)

இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்க இந்திய கடற்படை இணக்கம் வெளியிட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்திய கடற்படைத் தளபதி டி.கே. ஜோஷி. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் இந்திய கடற்படைத் தளபதி ஆகியோர் இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவம் மிக்க கடல் பாதுகாப்பு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

இலங்கை கடற்படை அதிகாரிகளுக்கு 4 ஆண்டு தொழில்நுட்பப் பட்டப்படிப்பை இந்தியா வழங்கும் என ஜோஷி ஜனாதிபதிக்கு இதன்போது அறிவித்துள்ளார்.

இந்த தொழில்நுட்ப பட்டப்படிப்பில் தமது கடற்படை அதிகாரிகளை இணைக்க பல நாடுகள் ஆர்வம் காட்டி வருகின்றன. எனினும் இலங்கைக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது என்றும் இந்திய கடற்படைத் தளபதி குறிப்பிட்டுள்ளார்.

இந்திய பெருங்கடல் பகுதி கடல் கொள்ளைகளை தடுக்க இலங்கை கடற்படை பெரும் பங்களிப்பை செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். கடற்கொள்ளை சம்பவங்கள் அண்மைய ஆண்டுகளாக குறைந்துள்ளன. இந்தியாவும் இலங்கையும் விழிப்புடன் இருந்து இந்த நடவடிக்கைகளை தொடரவேண்டும் என்றும் ஜோஷி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற இந்த சந்திப்பில் இலங்கைக்கான இந்திய தூதுவர் வை.கே. சிங்ஹா உள்ளிட்ட தூதரக அதிகாரிகள், அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயநாத் கொழம்பகே உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

2013 ஆம் ஆண்டு காலிக் கலந்துரையாடலில் கலந்து கொள்ள இலங்கை வந்த இந்திய கடற்படைத் தளபதி திருகோணமலை, யாழ்ப்பணம், மன்னார், அம்பாந் தோட்டை உட்பட முக்கிய இடங்களுக்கு பயணம் மேற்கொண்டார். (அ-2)

# பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருணாசலம் அகிலதாஸின் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில், இக் கல்லூரியின் இளைப் பாறிய அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு ஆசியுரையை கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய தேவஸ்தான பிரம்மஸ்ரீ சிவதாசக் குருக்கள் ஆற்றுவார். இவ்விழாவில் வரவேற்று நடனம், வாழ்த்துரைகள் என்பன நடைபெறும். (அ)

# மஹோற்சவம்

(தும்பளை)

குரும்பசிட்டி அருள்மிகு முத்து மாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 .30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை சப்பறத் திருவிழா பிற்பகல் 5மணிக்கு இடம்பெறும். மறுநாள் செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழா காலை 10 மணிக்கு நடைபெறும். வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து 10 மணிக்கு அம்பாள் தேரில் ஆரோகணித்து வீதியுலா வலம் வருவார். தொடர்ந்து 18 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (அ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

653

ஒரு ஊரிலே ஏழைத் தாய் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் மிகவும் அன்பானவள். அவளுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவனது பெயர் பெலிக்ஸ். அம்மாவைப் போலவே அன்பான குணங்கள் நிறைந்தவன். ஆனால், நல்ல பலசாலி. நாளுக்கு நாள் பலம் மிக்கவனாக அவன் வளர்ந்து வந்தான்.

எல்லாவிதமான போர் முறைகளையும் கற்றுத் தேர்ந்து கொண்டான். அங்கிருந்த எல்லா வீரர்களையும் அவன் சண்டையிட்டுத் தோற்கடித்தான். அதனால் அங்குள்ள மக்கள் எல்லாரும் அவனுக்கு "மகா வீரன்" என்ற பட்டத்தைச் சூட்டினர்.

மகாவீரன் பெலிக்ஸ் தன்னுடைய பலத்தையும் ஆற்றலையும் தவறான விஷயங்களுக்காக ஒரு போதும் பயன்படுத்தவில்லை. மக்களின் நன்மைக்காகவே தன் வீரத்தை பயன்படுத்தி வந்தான். கொடிய காட்டு மிருகங்கள் அந்த ஊரின் வயல்களுக்குள் புகுந்து நாசஞ் செய்த போது அவன் அவற்றை வேட்டையாடிக் கொன்றான். இதனால் மக்கள் அவன் மீது மேலும் அன்பு கொண்டனர்.

அந்த ஊர் அரசன் மிகவும் கர்வம் பிடித்தவன் இரக்கமில்லாதவன். ஏழைகளைத் துன்புறுத்துவதில் இன்பங் காண்பவன்.

இவனது வீரச்செயல் அரசனின் காதுகளில் வீழ்ந்தது. அரசனுக்கு அவன் மீது வெறுப்பு ஏற்பட்டது. இப்படியே இவனது புகழை வளரவிட்டால் தனக்கும் ஆபத்து ஏற்படும் என்று எண்ணினான். எனவே, பெலிக்ஸ்சை எப்படியும் அழித்துவிட நினைத்தான் அரசன்.

பெலிக்ஸ்சை எப்படி அழிப்பது என்று அவன் யோசித்தான். பெலிக்ஸ்சை போன்ற பலசாலியோடு மோதுவதற்கு யாரும் முன்வர மறுத்துவிட்டனர். அரசனுக்கு இதனால் மிகுந்த ஏமாற்றமாகி விட்டது.

## பலசாலி!



தந்திரத்தாலும், வஞ்சனையாலுந்தான் இவனை வெற்றி கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு அரசன் வந்தான்.

பெலிக்ஸை அரசன் கொல்ல நினைத்த விஷயம் அவனுக்கு தெரிய வந்து கொஞ்சமும் தாமதியாது அவன் தன்னுடைய தாயையும் அழைத்துக் கொண்டு மாயமாக அங்கிருந்து மறைந்து விட்டான். அங்குள்ள தன் பிரியமான தோழர்களான சின்னஞ்சிறு குழந்தைகளை விட்டுப் பிரிந்து போவது தான் பெலிக்ஸ்க்கு மிகவும் கவலையை அளித்தது.

ஒரு நாள் அந்த ஊருக்கு ஒரு பூதம் வந்தது. அந்த பூதம் மிகவும் பிரமாண்டமானதாயிருந்தது. அது மூச்சுவிட்டால் புகை புஸ்புஸ்ஸென்று கிளம்பும். வாயைத் திறந்தாலோ நெருப்புக்கக்கும். பெரிய முட்கள் நிறைந்த பனைமரம் போல அதன் வால் நீண்டிருந்தது. தனது அச்சமூட்டும் வாலினால் அது மிருகங்களையும் சுழற்றிப் பிடித்து அடித்துக் கொன்றது.

இதனால் ஊர் மக்கள் வெளியே வர அஞ்சினர். வீட்டுக்குள்ளேயே அடைந்து கொண்டனர்.

அவர்கள் வயலுக்குப் போகாததால் பயிர் செய்ய முடியவில்லை. இதனால் அந்த ஊரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. பெலிக்ஸ் ஒருவனாலேயே அந்த விலங்குப் பூதத்தைக் கொல்ல முடியும் என நினைத்த அரசன் அவனைத் தேடிக் கண்டுபிடிக்க ஒற்றர்களை எல்லாத் திசைகளுக்கும் அனுப்பி வைத்தான். அவரகளும் பெலிக்ஸ் இருக்குமிடத்தை அறிந்து கொண்டனர். அரசனுக்குச் செய்தியை உடனே அறியப் படுத்தினர்.

உடனே அரசன், பெலிக்ஸ்சை தனது அரண்மனைக்கு இழுத்து வரும்படி கட்டளையிட்டான். படைவீரர்கள் அவனைக கைது செய்ய முயன்றனர். பெலிக்ஸ் அவர்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு திசையில் வீசி எறிந்தான். படை வீரர்கள் ஏதுவும் செய்ய முடியாமல் அங்கிருந்து திரும்பி ஓடிப் போய் அரசனிடம் நடந்தவற்றைக் கூறினர்.

அரண்மனையில் எல்லாரும் ஒன்றாகக் கூடி யோசித்தனர். கடைசியில் பெலிக்ஸ்சிடம், விலங்கு பூதத்திடம் இருந்து தங்களைக் காப்பாற்றும்படி கேட்க குழந்தைகளை அனுப்பி வைப்பதென்று முடிவாயிற்று. அப்படியே அவன் இருந்த வீட்டிற்கு குழந்தைகள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தாங்கள் பூதத்திற்குப் பயந்து வாழ்வதை குழந்தைகள் பயத்தோடு அழுதபடியே கூறியதைக் கேட்க பெலிக்ஸ் மிகவும் இரக்கம் காட்டினான். அந்தக் குழந்தைகளின் கண்ணீரை அவன் துடைத்து அவர்களுக்கு ஆறுதல் வார்த்தை சொன்னான். விலங்குப் பூதத்தோடு தான் சண்டையிட்டு அதை வெல்வதாக அவர்களுக்கு வாக்குறுதி அளித்தான்.

பின்னர் அவன் பனிரெண்டு பீப்பாய் நிறையத் தாரையும், பனிரெண்டு வண்டியில் வைக்கோலையும் சேகரித்தான். பெரியதொரு தண்டாயுதத்தையும் எடுத்துக் கொண்டான். பூதத்தின் குகை வாசலிலே இவற்றோடு போய் நின்ற அவன், பூதத்தை தன்னோடு சண்டைக்கு வரும்படி சவால் விட்டான்.

பூதம் ஆவென்று வாயைப் பிளந்து சீறியபடி அவனைக் கடிக்க வந்தது. உடனே கொதிக்க வைத்த தார்க் குழம்பை அதன் வாயினுள்ளே ஊற்றினான். அந்தத் திரவம் பூதத்தின் பற்களையும் வாயையும் கெட்டியாகப் பிடித்து, அது வாயைத் திறக்காமல் செய்துவிட்டது. தனது கையில் தண்டாயுதத்தை எடுத்து அதன் முகம், உடலெங்கும் ஓங்கி அடிக்கத் தொடங்கினான். ஏதும் செய்ய முடியாத பூதம் தனக்கு இரக்கம் க்காட்டும்படி மன்றாடியது. தீமைக்கு ஒருபோதும் இரக்கம் காண்பிக்கக் கூடாது என்று எண்ணினான் பெலிக்ஸ். பெரிய ஏரை அந்த பூதத்தின் மேல் பூட்டி, நகரத்தின் வயல் முழுவதையும் நன்றாக உழுது முடித்தான் பெலிக்ஸ்.

இவ்வளவு நாளும் வீட்டுக்குள் அடைந்து கிடந்த மக்கள், வெளியே வந்தனர். பெலிக்ஸ்சை வாழ்த்தினர். ஆடிப்பாடி மகிழ்ந்தனர். குழந்தைகள் பெலிக்ஸ்சை சுற்றி நின்று மகிழ்ந்தனர்.

பிறகு பூதத்தை மன்னித்து அதை அந்த ஊரை விட்டே போய்விடும்படி கூறினான்.

பூதமும் அங்கிருந்து போய்விட்டது. இவ்வளவு காலமும் கொடியவனாக நடந்து வந்த அரசன் தனது குணத்தை மாற்றிக் கொண்டான். பெலிக்ஸை மிகவும் போற்றினான். மீண்டும் அவனையும் அவனது தாயாரையும் தனது ஊருக்கே வரச்செய்தான. பெலிக்ஸை அரசன் தனது படைத்தளபதியாக நியமித்து ஆனந்தமாக வாழ்ந்து வரலானான்.

---

12.2013

01

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1420-லண்டனின் ஐந்தாம் ஹென்றி மன்னன் பாரிஸ் நகரை முற்றுகையிட்டான.
- 1640-போர்த்துக்கல் ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது. நான்காம் ஜொவாவோ மன்னனானான்.
- 1822-முதலாம் பீட்டர் பிரேசிலின பேரரசன ஆனான்.
- 1875-வேல்ஸ் இளவரசர் (லண்டனின் ஏழாம எட்வேர்ட் மன்னர்) கொழும்பு வந்தார்.
- 1918-ஐஸ்லாந்து டென்மார்க் முடியாட்சியின் கீழ் சுயாட்சி உரிமை பெற்றது.
- 1918-சேர்பிய, குரொவேசிய, சில்வேனிய இராச்சியம் (பின்னர் யுகோஸ்லாவிய இராச்சியம்) அமைக்கப்பட்டது.
- 1924-எஸ்தோனியாவில் கம்யூனிசப் புரட்சி தோல்வியில் முடிந்தது.
- 1934-சோவியத் ஒன்றித்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீட உறுப்பினர் செர்கே கீரொவ் கட்சித் தலைமையகத்தில் வைத்து லியொனீட் நிக்கொலாயெவ என்பவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 1958-பிரான்சிடம் இருந்து மத்திய ஆபிரிக்கக் குடியரசு விடுதலை பெற்றது.
- 1959-பனிப்போர்: அண்டார்டிக்கா கண்டத்தில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தவும் அக்கண்டத்தை அறிவியல் ஆராய்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்தவும் என்று ஒப்பந்தம் செய்யப்பட்டது.
- 1960-கொங்கோ அதிபர் பத்திரிசு லுமும்பா இராணுவத் தளபதி மொபுட்டுவினால் கைது செய்யப்பட்டார்.
- 1961-இந்தோனீசியாவின மேற்கு நியூகினியில் மேற்கு பப்புவா குடியரசு அறிவிக்கப்பட்டது.
- 1965- நாகாலாந்து இந்தியாவின் 16 ஆவது மாநிலம் ஆனது.
- 1965- இந்தியாவில் எல்லைக் காவற்படை அமைக்கப்பட்டது.
- 1971-இந்திய இராணுவம் காஷ்மீரின் ஒரு பகுதியை கைப்பற்றியது.
- 1973-பப்புவா நியூகினி ஆஸ்திரேலியாவிடம் இருந்து சுயாட்சி பெற்றது.
- 1981-எயிட்ஸ் நோய்க் கொல்லி கண்டறியப்பட்டது.
- 1982-முதலாவது செயற்கை இருதயம் யூட்டா பல்கலைக்கழகத்தில் பார்னி கிளார்க் என்பவருக்குப் பொருத்தப்பட்டது.
- 1989-பனிப்போர்: கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக அதிகாரத்தை அகற்ற கிழக்கு ஜேர்மனி நாடாளுமன்றம் அதன் அரசியலமைப்பைத் திருத்தியது.
- 1989-பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி கொலசோன் அக்கீனோவை பதவியில் இருந்து அகற்ற எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- 1991- பனிப்போர்: உக்ரேன் வாக்காளர்கள் சோவியத்திடம் இருந்து உக்ரேன் முற்றாக வெளியேற வாக்களித்தனர்.

### பிறப்புக்கள்

- 1935-வூடி அலன், அமெரிக்க திரைப்படத் தயாரிப்பாளர், நடிகர்
- 1954-மேதா பட்கர், இந்திய சமூக ஆர்வலர்.
- 1960-உயித் நாராயணன், இந்திய திரைப்படப் பின்னணிப் பாடகர்.
- 1963- அர்ஜுன றணதுங்க,இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர்.

### இறப்புக்கள்

- 1825-முதலாம் அலெக்சாண்டர், ரஷ்ய சார் மன்னன் (பி.1777)
- 1973-டேவிட் பென்- குரியன், இஸ்ரேலின் முதல் பிரதமர் (பி.1886)
- 1990-விஜயலட்சுமி பண்டிட் (பி.1900)

### சிறப்பு நாள்

உலக எயிட்ஸ் தினம்

---

### உலக எயிட்ஸ் தினம்

உலக எயிட்ஸ் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் முதல்நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒரு கருப்பொருளின் அடிப்படையில் நிகழ்வுகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம். எயிட்ஸ் தினம் பற்றிய எண்ணக்கரு முதலாவதாக 1988- இல் நடைபெற்ற, எயிட்ஸ் பற்றிய உலக சுகாதார அமைச்சர் மாநாட்டில் உருவானது. அதன்பிறகு அரசுகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்நாளை உலகம் முழுவதும் நடைமுறைப்படுத்தி வருகின்றன.

WORLD AIDS DAY

**வரலாறு**

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனீவாவில் அமைந்துள்ள உலக சுகாதார அமைப்பின் எயிட்சுக்கான உலகளாவிய நிகழ்ச்சிப் பொது தகவல் அதிகாரிகளான ஜேம்ஸ் பன்ஸ் மற்றும் தோமஸ் நெட்டேர் எனும் இருவரால் 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் உருவாக்கப்பட்டதே உலக எயிட்ஸ் தினம் தங்கள் யோசனையை எயிட்சுக்கான உலகளாவிய நிகழ்ச்சியின் இயக்குநர் முனைவர் ஜோனதன் மன்னிடம் கொண்டு சென்றனர் இருவரும். முனைவர், மன்னுக்கு இது பிடித்துப்போகவே அவர் இதை அங்கீகரித்து, 1988 ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதியை உலக எயிட்ஸ் தினமாக கடைப்பிடிக்க பரிந்துரை செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து சட்டங்களின் அமுலாக்கம்



**த.பேரின்பநாயகம்**
ஓய்வு பெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் (போக்குவரத்து)

இன்று எமது நாடு அபி விருத்தியை நோக்கி முன் னேறும் அதேவேளை போக்குவரத்து சார்ந்த பிரச்சினைகளும் விபத்துக்களும் அதிகரித்தவாறே உள்ளன. இத்தகைய நிலையினை கட்டுப்படுத்தும் நோக்கில் போக்குவரத்துச் சட்டங்கள் தீவிரமாக அமுல்படுத்தப்பட்டு வருவதால் அது தொடர்பான விளக்கக் கட்டுரை கீழே பிரசுரிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு தடவையும் சாரதி/ஓட்டுநரானவர் போக்குவரத்திற்கு உரிய குற்றத்தை மேற்கொள்ளும் பொழுது இதை கண்டறியும் பொலிஸ் அதிகாரிகள் பின்வரும் நடைமுறையை பின்பற்றுவர் அல்லது வழிநடத்துவர்.

1. மேற்கொள்ளப்பட்ட குற்றத்தை விளக்குதல்

2. ஓட்டுநரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை எடுத்துக் கொள்ளல்.

3. அடுத்த நீதிமன்றத் திகதி வரை குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த வாகனத்தை ஓட்டுவதற்கு தற்காலிக ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை வழங்கல்.

4. குற்றமானது அவ்விடத்திலேயே அபராதம் செலுத்த வேண்டும் என்று அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தால் சாரதி ஓட்டுநரிடம் இந்த குற்றத்தை ஏற்க வேண்டும் என குறிப்பிட்டு. இது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கு பதிலாக மேற்கொள்ளப்படுகின்றது எனக் குறிப்பிடுவார்.

5. இக்குற்றத்தை அவர் ஒப்புக் கொள்ளும் பொழுது குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர் குறிப்பிட்ட குற்றம் தொடர்பாக அபராதத்தை விதிக்க வேண்டும்.

6. சாரதி/ஓட்டுநர் குற்றப் பணத்தை அடுத்த 14 நாட்களுக்குள் ஒரு அஞ்சல் நிலையத்தில் செலுத்தி அக் கொடுப்பனவுக்குரிய பற்றுச் சீட்டை பெற்று பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கும் பொழுது குற்றம் புரிந்தவரின் சாரதி/ ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை மீண்டும் வழங்குவார்.

### தற்காலிக அனுமதிப்பத்திரம்

மோட்டார் போக்குவரத்துச் சட்டம் பிரிவு 135 (4) இன் படி சாரதி/ ஓட்டுநருக்கு அவரது மோட்டார் வாகனத்தை ஓட்டுவதற்குரிய அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். இது 60 நாட்களை விட அதிகமாக இருக்கக் கூடாது. இதன் கால வரையறை அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படும். சிரேஷ்ட உத்தியோகத்தர் இவ்வனுமதிப் பத்திரத்தை அனுமதித்து கையெழுத்திடலாம்.

### அவ்விடத்திலேயே குற்றப் பணம் செலுத்துதல்

இது மோட்டார் போக்குவரத்து சட்டத்தின் 215 A (2) பிரிவின் கீழ் வழங்கப்படும் தண்டனை நிமித்தமாக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தினரால் வழங்கப்படும் ஒரு உத்தரவு அனுமதிச் சீட்டாகும். குறிப்பிட்ட நபர் இக்குற்றத்தை ஏற்கும் பொழுது அவர் விருப்பத்தின் நிமித்தம் வழங்குநருக்குப் பதிலாக குற்றத்திற்குரிய தண்டனைப் பணத்தை குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு இரண்டு கிழமைக்குள் அஞ்சல் நிலையத்தில் செலுத்த வேண்டும். அதற்குரிய ரசீதை பொலிஸ் நிலையத்தில் செலுத்த வேண்டும்.

அதற்குரிய ரசீதை பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் நேரடியாக செலுத்த வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். இதனால் போக்குவரத்துக் குற்ற நடவடிக்கையானது முற்றுப் பெறும். இதன் பொழுது குற்றவாளி அவரது ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வார்.

### குறிப்பு

1. தற்காலிக அனுமதிப் பத்திரம் காணாமற் போனால் அல்லது தவறுதலாக வேறு எங்கேயும் தவறி வைக்கும் பொழுது நீதிமன்ற திகதிக்கு முன்னதாக ஒரு புதிய தற்காலிக அனுமதிப் பத்திரத்திற்கு அல்லது உடனடி குற்றப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கலாம். இதுபற்றி பொலிஸ் நிலையத்தில் ஒரு விபரக்கூற்று அல்லது கடிதம் சமர்ப்பித்து இழப்புக்குரிய காரணங்களை குறிப்பிட வேண்டும். நிலையத்தின் OIC திருப்தியடைந்தால் மாத்திரமே அவர் புதிய தற்காலிக அனுமதி பத்திரத்தையோ அல்லது உடனடி குற்றப் பணத்தையோ அங்கீகரிப்பர்.

2. நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையை நீடிக்க வேண்டுமானால் தற்காலிக அனுமதிப் பத்திரத்தின் திகதியை பதிவாளர் மூலம் அல்லது நீதிமன்ற சர்ஜன்ட் அல்லது போக்குவரத்து பொறுப்பு உத்தியோகத்தரால் அல்லது பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தரினால் நீக்க முடியும்.

3. குற்றத்தைக் கண்டுபிடித்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் சாரதி/ஓட்டுநர் குற்றத்தை ஒப்புக்கொள்ளாவிட்டால் தற்காலிக அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட திகதியில் குறிப்பிட்ட நபர் தானாகவே குற்றத்தை நிராகரிப்பதற்கு வாதிட முடியும்.

4. 14 நாட்கள் முடிவடைவதற்கு முன் சாரதி/ ஓட்டுநர் குற்றத்தை ஒப்புக்கொள்ளவிரும்பி உடனடிக் குற்றப் பணத்தை செலுத்த விரும்பும் பொழுது OIC அவருக்கு ஒரு பத்திரத்தை குற்றப் பணம் செலுத்துவதற்காக வழங்கமுடியும். இதில் அவர் குற்றம் செய்த தினத்திலிருந்து எஞ்சியிருக்கும் நாட்களுக்குள் மட்டுமே அக் குறிப்பிட்ட திகதியில் உடனடித்தண்டனைப் பணத்தைச் செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படும்.

5. குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சாரதி/ ஓட்டுநர் மாத்தறை அல்லது அநுராதபுரத்தில் குற்றத்தைக் கண்டுபிடித்து உடனடிக் குற்றப்பணத்தை வழங்கும் பொழுது அவர் அதை ஒரு லீவு நாள் காரணமாக அஞ்சல் நிலையத்தில் செலுத்த முடியாமல் இருந்தால் அவர் வீடு திரும்பியதும் வீட்டுக்கருகில் உள்ள அஞ்சல் நிலையத்தில் உடனடியாகச் செலுத்த முடியும்.

பணம் செலுத்த முன் தற்காலிக அனுமதிப்பத்திரத்தை யும் உடனடித் தண்டப்பணத் தை யும் போட்டோ பிரதி எடுத்து வைக்க வேண்டும். பணத்தை செலுத்திய பின் பணம் செலுத் தியதற்கான ரசீதின் பிரதியை எடுக்க வேண்டும். பின் OIC (போக் குவரத்து) மாத்தறை அல்லது அநுராதபுரத்துக்கு தான் உடன டியாக தண்டனைப் பணம் செலு த்திய தகவலையும் சகல ஆவ ணங்களையும் கடிதம் மூலம் அனுப்பி சாரதி அனுமதிப்பத்தி ரத்தை விரைவில் திருப்பி அனுப் புமாறு வேண்டுகோள் விடுக்க வேண்டும். இதன்பொழுது பொலிஸ் நிலையத்தினால் வழங் கப்பட்ட மூலப்பிரதி ரசீதையும் தற்காலிக அனுமதிப்பத்திரத்தின் போட்டோ பிரதியையும் சுய விலா சமிடப்பட்ட கடித உறையையும் அதில் பதிவுத் தபாலுக்குரிய பெறுமானமுள்ள முத்திரையை ஒட்டி OIC (போக்குவரத்து) பெற்று தபாலில் அனுப்ப வேண்டும். இதை OIC போக்குவரத்து) பெற்று உடனடியாக சாரதி அனுமதிப்பத்திரத்தை அனுப்புவார். இவை யாவும் குற்றம் நடந்த பத்து நாட் களுக்குள் முற்றுப்பெற வேண் டும். சாரதி வழக்குக்கு 4 நாட்கள் வரை கால அவகாசமுள்ளது.

### ஒரு போக்குவரத்து மீறலை யார் கண்டுபிடிக்க முடியும்

1. பொலிஸ் சேவையில் சீருடையில் உள்ள அங்கத்தவர்

2. ஒரு தனிப்பொலிஸ் உத்தியோகத்தர் போக்குவரத்து மீறலை கையாள முடியுமா? ஆம் சீருடையில் உள்ள ஒரு தனித்த பொலிஸ் உத்தியோகத்தர் கையாளமுடியும்.

3. பிரிவு 232 (E) இன் படி பொலிஸ் நிலையத்தில் ஒரு சாரதியிடம் குற்றங்களை விசாரி க்கின்ற உத்தியோகத்தரால் குற்றங்களை இனங்காணுவதற்காக தடுத்து வைக்கமுடியும் ஒரு சாரதி/ ஓட்டுநர்

✦ தனது பெயரையும் விலாசத்தையும் கொடுக்க மறுக்கும் பொழுது அல்லது பொலிஸ் உத்தியோகத்தர் அத்தரவுகள் தவறு என சந்தேகிக்கும் பொழுது

✦ ஒரு விபத்தில் ஈடுபட்டு இறப்பை அல்லது தீவிர பாதிப்பை ஏற்படுத்தும் பொழுது

✦ மது அல்லது போதை மருந்துகளை உட்கொள்ளும் பொழுது

✦ பொய் அல்லது போலியான ஆவணங்களை அல்லது பொய்யான அடையாளமுள்ள தகடுகளை வைத்திருக்கும் பொழுது (வாகனம் தடுத்து வைத்தல் உட்பட)

✦ மோட்டார் வாகனமானது கள்ளத்தனமாகவோ அல்லது மாற்றப்பட்ட அடிச்சட்டம் எஞ்சின் இலக்கத்தை கொண்டதாக இருந்தால் (வாகனத்தின் தடுப்பு உட்பட)

✦ களவாடப்பட்ட வாகனமாக இருந்தால் (வாகனத்தின் தடுப்பு உட்பட)

4. பிரிவு 232 (F) க்கு அமைய ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் என்னென்ன குற்றங்களின் அடிப்படையில் வாகனம் தடுக்கப்பட்டு விசாரணைகள்/ புலனாய்வுகள் மேற்கொள்ள முடியும் ஏன்பது

✦ கட்டுமான கருவிகள் பற்றிய எந்தவொரு வாகனத்தை பயன்படுத்துவது பற்றிய விதிமுறைகளுடன் உடன்படாவிட்டால்

✦ சாரதியானவர் செல்லுபடியான காப்பீட்டுப் பத்திரத்தை மோட்டார் போக்குவரத்து விதியின் பிரிவு 99 க்கு அமைய சமர்ப்பிக்காவிட்டால்

✦ சாரதியானவர் செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்காவிட்டால்

✦ சாரதியானவர் தனது வாகனத்தின் விநியோகத்தர் பதிவுச் சான்றிதழ், பழுது பார்த்தல் பதிவுச் சான்றிதழ் அல்லது உற்பத்தியாளர்கள் பதிவுச் சன்றிதழை சமர்ப்பிக்கத் தவறினால்

✦ வாகனமானது பொறிமுறை ரீதியாக பழுதடைந்திருந்தால் தேசிய அடையாள அட்டையை, வருமான அனுமதிப்பத்திரத்தை காப்புறுதிப் பத்திரம் அல்லது பதிவுச்சான்றிதழ் போன்றவற்றை பொறுப்பில் எடுப்பது சட்ட விரோதமானதாகும்

சாரதியானவர் சாரதி அனுமதிப்பத் திரத்தை சமர்ப்பிக்கத் தவறும் பொழுது பொலிஸ் உத்தியோகத்தர் தே.அ.அட்டை, காப்பீட்டு பத்திரம், வருமான அனுமதிப் பத்திரம் அல்லது பதிவுச் சான்றிதழ் ஆகிய வற்றிலிருந்து எல்லா விபரங்களையும் திரட்டி நீதிமன்றத்தில் அவரை ஒப்படைக்கச் செய்ய வேண்டும்

### வாகன அனுமதிப்பத்திரமும் ஆதரவுக்கான படிவமும் மோ.போ.சட்டம் பிரிவு 36 (1A)

எந்தவொரு நபரும் ஆதரவுப் படிவம் உட்பட வாகன அனுமதிப்பத்திரத்தை அவர் வாகனத்தை ஓட்டும்பொழுது கொண்டிருக்காவிட்டால் அவரிடமிருந்து ரூபா 2500/=க்கு குறையாததும் ரூபா 5000/=க்கும் கூடாததுமான தொகையை தண்டனைப் பணமாக செலுத்தச் செய்யவேண்டும்.

### வெளிறிய அல்லது முகம் உருக்குலைந்த சாரதி அனுமதிப்பத்திரம். மோ.போ.சட்டம் பிரிவு 36 (1D)

எந்தவொரு நபரும் வெளிறிய முகமற்ற சேதமடைந்த அல்லது தெளிவற்ற சாரதி அனுமதிப்பத்திரத்தை வைத்திருந்தால் ரூபாய் 1000க்கும் குறை யாததும் 2000க்கும் கூடாததுமான தண்டனைப் பணத்தைச் செலுத்த வேண்டியவராவார். (பிரிவு 224)

### வாயு வெளியேற்றம் சான்றிதழும் தகுதித்திறன் சான்றிதழும் 196 (5)

ஒரு மோட்டார் வாகனம் தொடர்பாக வாயு வெளியேற்றம் சான்றிதழையும் தகுதித்திறன் சான்றிதழையும்


✦ வாகனத்தில்எல்லாவேளைகளிலும் வைத்திருக்க வேண்டும்

✦ ஒரு பொலிஸ் உத்தியோகத்தரினால் அல்லது மோட்டார் வாகன பரிசோதிப்பாளரினால் பரிசோதனை செய்யும் பொழுது அதனை வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும். இல்லா விடில் ரூபாய் 5000/= க்கு குறையாத ருபாய் 2500/= க்கு கூடாத பணத்தை தண்டனைப் பணமாக செலுத்தவேண்டும்.

***போக்குவரத்து சட்டங்கள் உங்கள் பாதுகாப்புக்காகும்***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## நீ துணிந்து விடு

தோல்வி என்பது உனதல்ல
வெற்றி உன்னைச் சேரும் வரை
வாழ்க்கை என்பது சுமை அல்ல
உழைத்து நீயும் சோரும்வரை
கலங்கி நின்றால் கண்ணில்
விழும் தூசிகூட துயரமாகிவிடும்
நிலவாக நீ இருக்கும் வரை
இருட்டு உன்னைச் சூழ்ந்து கொள்ளும்
இருளகற்ற வேண்டுமானால்
சட்டெரிக்கும் சூரியனுக்கு
சுற்றி பூமிகூட உன்னைச்
சுற்றி வலம்வரும்
ஒருமுறை துணிந்துவிடு
சுனாமியோ சூறாவளியோ
மோதித்தான் பார்ப்போமே
உயிர்மூச்சு உள்ளவரை
முழு மூச்சையும் உணர்வுடன்
தமிழுக்காய் கொடுக்க
நீ துணிந்து விடு


அ.நளினாசினி
கோண்டாவில் கிழக்கு




## மடிமீது தலைசாய்க்க அம்மா!

என் பிறந்த நாள் இன்றுதானா?
இன்றுதான் உனது பிறந்தநாளும்
மறந்துவிடாதே
ஒருஜென்மம் எனக்குத்தர
மறுஜென்மம் ஏற்றவள் நீ
இடுப்புவலி எனக்கில்லை
இருவிழிநீர் கொட்டவில்லை
வேதனைகள் எனக்கில்லை
அதனால் என் பிறந்தநாள்
எனக்கு நினைவில்லை
அத்தனையும் நீ சமந்தாய்- உன்
அடிவயிற்றில் என் வடுக்கள்
ஆறாமல் இருக்குதம்மா
வடுக்கள் நீ சுமக்க
வாழ்த்துக்கள் எனக்கெதற்கு
ஒரு கிரகம் உடைத்தென்னை
இக்கிரகம் சேர்த்தவளே
உன்மடியினில் இடம்கொடம்மா
அது போதும் எனக்கு

ஆர்.எஸ்.ஆனந்தன்
தும்பளை





## தம்பியுடையான்...

தம்பி எழுந்தான்
தன்வினை தனைச் சுடும்
என்பதறியாமல்
அவயத்து வாழ்வு தனை
அபலத்தில் முடித்துவிடும்
அத்தனை காரியமும்
கன கச்சிதமாய்...
அரசன் அன்று கொல்வான்
தெய்வம் நின்று கொல்லும்
என்பதறியாமல்

மாவை. நா.கஜேந்திரன்

## அவர்கள்

நந்திக்கடலருகே
குந்தியிருந்து தூண்டிலில்
மீன்பிடித்து வாழ்ந்த அவர்கள்
தீன் இன்றி அவலப்படுகின்றார்கள்...
காலையும் மாலையும்
கால்நனைத்து விளையாடிய
கடலருகே போகமுடியாதாம்...
தடைசெய்யப்பட்ட இடமாம்
தென்னிலங்கை முதலாளிகளும்
அந்நிய நாட்டுக் கம்பனிகளும்
எங்கள் நந்திக்கடலில் மீன்பிடிக்கும்போது
எங்கள் மண்ணின் மைந்தர்களோ
கடற்றொழிலுக்குப்போகாது
தவம் கிடக்கின்றார்கள் வீட்டில்
அன்று கடற்றொழிலால் செழித்தவர்கள்
இன்று கருவாடாகின்றார்கள் தொழிலின்றி

புத்தூர் க.குகன்

## கடக்கும் வாழ்வில்

கிஞ்சித்தும் அஞ்சாமல்
விளையாடும் வாழ்வு
காற்புள்ளி தள்ளியாடும் ஊஞ்சலென...
செரித்த உணவிலெங்கு ஏப்பமும்
தொண்டையில் கரகரப்பும்
பிந்திய நாட்களில்
ஓமோன்களின் நடனம்
தாளா வயிறு துர்நாற்றத் தீட்டாய்
சுயம்புவாள் குற்றமில்லாச் சுமங்கலி
கடவுள் தன் கணவன் தானென
அக்கினித் தீர்த்தமருந்மி
அடம்பிடித்த என்னை ஆடடியென
பாடிவீரம் வளர்த்த என் ஈழதேசம்
புற்றாஞ்சோற்று கறையான்களாய்
கூட்ட நெரிசலற்று பூட்டிய சுவர்களுக்கு
ஓட்டையொன்றமைத்து புறக்கடையாம் புலம்
நான் நானாயிருக்க இதுவும் கடக்கும்
இனியும் கடக்கும் எல்லாமே கடக்கும்!!!

ஹேமா
சுவிஸ்



# மௌனத்தின் தேடல் - 180



## போர்த்தர்மம்

நெற்றிக்கு நேர் நின்று
நெறிமுறைப் போர் புரிய
ஒப்பரிய நூல்கள்
உரைத்தது புரியுமா?
அதிகார மிருகத்தின்
அடாவடிப் பாய்ச்சலால்- உன்
குருதியைக்குடித்து
குதறிய பின்னும்
வீழ்ந்திடா தெழுந்து
உதைகொடு உருக்குலைய...

இரா.பிரம்மா
நெடுந்தீவு

## தருணம்

கூட்டத்தைப் பிரிந்த விலங்கை
தருணம் பார்த்து தாக்கும்
சிங்கத்தைப்போல்
சில மனிதர்களும் நம்மிடையே
உலாவுகிறார்கள்- கவனம்
கூடிவாழ்ந்தால் கோடி நன்மை...!

உதயம் ரூபன்
நயினை

## யுத்த தர்மம்

ஐந்தறிவுள்ள நீ
ஆறறிவு மானிடன் போல்
முதுகில் குத்தாதே
நெஞ்சில் குத்திடு
இதுதான் யுத்த தர்மம்

ரூபி
மானிப்பாய்

## கோழை

புதருக்குள் மறைந்திருந்து
புறமுதுகில் பாயும் கோழையே-நீ
சிங்கமில்லை அசிங்கம்
நேருக்கு நேர் நின்று- பகையுடன்
சமர் செய்யும் நெஞ்சனே வீரன்
சாகும் நொடியிலும்
சந்தோசமடைகிறேன்
வெற்றி எனக்கே என்று

நி.சோபனா
விசுவமடு

## தாக்குதல்

சிங்கத்தின் தாக்குதலுக்கு
இந்தக்குதிரை மட்டுமல்ல
நம் நாட்டு தமிழினமும்
தப்பவில்லை

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மீட்சி இல்லை

உயிரினங்கள் யாவும்
உணவுச் சங்கிலியின்
தொடர் இணைப்பே
சங்கிலியில்
வலிந்தோரிடம் நலிந்தோர்
வசப்படுவது
வழமை- இன்று
வசமாக மாட்டி விட்டாய்
மீட்சி இல்லை
இறுதி மூச்சு வரை

[illegible]
பாலிநகர்

## முடிவு

அடிமை வாழ்வதற்கு
முடிவு கட்டாமல்
முனகி முனகி நீ- மூலையில்
முக்காடு போட்டிருந்தால்
இந்நிலை தான்
உடலில் உள்ள தழும்புகளும்
கடலாகும் செங்குருதியும்- உன்
அடிமை நிலையதற்கு
வைக்கட்டும் முற்றுப்புள்ளி

ஈடிவன், துணுக்காய்

## மாற்றம்

மனிதர்கள் மதம் மாறலாம்
இனம் மாறலாம்
நாங்கள் மட்டும்
மாற முடியாதா என்ன?

ம.குணாளினி, மயிலிட்டி

## தீர்ப்பு

மண்ணில் பிறப்பவைகள்
யாவும் ஓர்நாள்
மடிவது நிச்சயம்
இருப்பினும் அவைகள்
ஒவ்வொன்றிற்கும்
நேரம் காலம் உண்டு
நீ யார் உன்னைப்
போன்றவனைத்
தீர்ப்பிடுவதற்கு

யோ.கீர்த்திகா
கட்டைக்காடு

## வேட்டைக்காரன்

வேட்டையாடி வீரனாய்
புறக்கோட்டை தனிலே சேட்டையானாய்
கழுதை, குதிரை, எருமை
மீது காட்டமானாய்
பெரும் குள்ளநரித் தந்திரத்தால்
கோட்டைவிட்டாய்

சி.ரவிக்குமார்
திருமுறிகண்டி

## ஆட்சி கவிழும்

தன்கையிலே ஆட்சியை
தக்க வைத்துக்கொண்ட
சிங்கமே- பாவமே அறியாத
பிராணிகளை
வேட்டையாடுகின்றாய்
ஒருநாள் அவையாவும்
ஒன்று சேர்ந்து உனது
ஆட்சியைக் கவிழ்க்கும்

த.மோகனரூபன்
சுழிபுரம்

## அடிமை

சீற்றம் கொள்ளும் எதிரிக்கு
மாற்றம் காட்ட நீ மறந்துவிட்டால்
தோற்றுப்போகும்- உன் வாழ்க்கை
குருதி கொட்டச் சொட்ட- நீ
குட்டு வாங்குவாயானால்
இழப்பாய் நீ- தன்
மானத்துடன் உயிரையும்

அ.கஜன், மல்லாவி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -181



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.



எனும் முகவரிக்கு 05.12.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தி எப்படி மகாத்மா ஆனார்?



ஆன்மீகம் 54

**கேள்வி:-** தென் ஆப்பிரிவிக்காவில் அந்த சம்பவம் நிகழ்வதற்கு முன்பு அவரும் நம்மைப் போல ஒரு சாதாரண மனிதர் அங்கிருந்து வீறு கொண்டு கிளம்பிய அந்த மனித சக்தி, அகிலம் முழுவதும் தனது அஹிம்சை நெறியை ஆற்றலோடு பரப்பியதெப்படி? மோகனதாஸ் கரம்சந்த் காந்தி எப்படி மகாத்மா ஆனார்?

**சத்குரு:-** அனைத்து ஆன்மீகச் செயல் முறைகளையும் ஒவ்வொருவரும் செய்ய முடியும். இதில் கேள்விக்கே இடமில்லை. அவர்கள் அப்படிச் செய்யவில்லையென்றால், அது மிகவும் துன்பகரமானது. ஏதோ ஒன்றுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டதால்தான் அவர்கள் ஓர் எல்லைக்குள் தங்களை குறுக்கிக் கொள்கிறார்கள்.

நம் அடையாளங்கள் குறுகிய எல்லைக்குள் இருப்பதால், நம்முடைய சாத்தியங்களும் குறுகிய எல்லைக்குள்ளேயே இருக்கிறது.

உடலுடன் உள்ள அடையாளத்தை விட, எவ்வளவு பெரிய செயல்களைச் செய்ய முடியும் என்பதை நீங்கள் உணர்வீர்கள்.

சரித்திரத்தில் இடம்பெற்ற பலருடைய வாழ்க்கையில் இப்படி நடந்திருக்கிறது.

ஒரு குறுகிய எல்லைக்குள் வாழ்ந்து கொண்டு இருந்திருப்பார்கள்.

ஏதோ ஒரு காரணத்தால், அவர்கள் வாழ்க்கையில் எதிர்பாராமல் ஏதாவது நடந்து அவர்கள் எல்லையை உடைத்து விடும்.

பின்னர் அவர்கள் தங்களைச் சுற்றியுள்ள விரிந்த செயல்முறைகளுடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு தாங்களே எதிர்பார்க்க முடியாத விஷயங்களைச் செய்வார்கள்.

உங்களுக்கெல்லாம் தெரிந்த ஓர் உதாரணம்... மகாத்மா காந்தி, மிகுந்த எல்லைக்குள் இருந்த மனிதர்.

அவர் திறமையான வழக்கறிஞரும் அல்ல.

நீதிமன்றத்தில் தைரியமாக எழுந்து சரளமாக பேசக்கூடியவரும் அல்ல.

ஆனால் ஒரே ஒரு சம்பவம், திடீரென அவருடைய அடையாளங்கள் கழன்று விட்டன.

தென் ஆப்பிரிக்காவில் அவர் வழக்கறிஞர் தொழில் செய்துகொண்டு இருந்த போது ஒரு நாள் புகைவண்டியில் முதல் வகுப்புப் பெட்டியில் பயணம் செய்தார்.

அப்போது நடுவில் ஒரு ரயில் நிறுத்தத்தில் ஏறிய ஒரு வெள்ளைக்காரர், காந்தியிடம் ஒழுங்கான பயணச்சீட்டு இருந்த போதும் அவர் கறுப்பர் என்பதால் இறங்கச் சொன்னார்.

காந்தி மறுக்க, அந்த வெள்ளைக்காரர் பயணச்சீட்டு பரிசோதகருடன் சேர்ந்து காந்தியை அவருடைய உடைமைகளு டன் அந்த பெட்டியிலிருந்து தூக்கி வெளியே வீசினார்.



அப்போது பிளாட்பாரத்தில் விழுந்த காந்தி பல மணி நேரங்களுக்கு அங்கிருந்து எழுந்திருக்கவே இல்லை.

"எனக்கு இது ஏன் நடந்தது? நானும் முதல் வகுப்பு டிக்கெட் வைத்திருந்தேன், பிறகு நான் ஏன் தூக்கி எறியப்பட்டேன்? இதற்கு வழி காண வேண்டும்" என்று அன்று முதல் மக்களின் பெரிய பிரச்சனைகளுடன் தன்னை தானே அடையாளப்படுத்திக் கொள்ள, காந்தி மகாத் மாவாய் மலர்ந்தார்.

சிறிய அடையாளங்களைத் தகர்த்தெறிந்து மிகப் பெரிய அடையாளங்களுடன் தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டதால் மகாத்மாவானார்.

மகாத்மா காந்தியைப் போல் வேறு யாரும் இந்தப் பிரபஞ்சத்தில் இவ்வளவு மனிதர்களை வழி நடத்தியதில்லை. அதுவும் மிக எளிய வழிகளில். இந்த நாட்டில் நன்றாக வேர் ஊன்றியிருந்த அன்னியரை போர், வன்முறை போன்ற எந்த வழிகளுமின்றித் துரத்தினார். இந்தப் பிரபஞ்சத்தில் இதற்கு முன் நடந்திராத அதிசயம் இது.

இந்த நாட்டை வென்றவர்கள் அதற்கென்று சில விலை கொடுத்துதான் இந்த நாட்டைக் கைப்பற்றினர்.

அவர்களும் எளிதாகப் போய்விடவில்லை. ஆனாலும், சண்டையில்லாமல், துப்பாக்கி ஏந்தாமல், வன்முறையைக் கடைப்பிடிக்காமல் அவர்களைத் துரத்தியடித்தார் மகாத்மா.

இந்த நாட்டு மககளை ஓரணியில் திரட்டி போராட்டத்தில் ஈடுபடுத்த அவரால் முடிந்தது.


காவலர்களைப் பார்த்து துப்பாக்கியால் சுடுவது ஒரு விஷயம். அவர்கள் மீது குண்டு எறிவது மற்றொரு விஷயம், ஆனால், நிராயுதபாணிகளாகத் தெருவில் சென்று தலையில் அடிவாங்கி மண்ணில் வீழ்வது முற்றிலும் வேறு விஷயம். முதல்பகுதி மக்கள அடிபட்டு வீழ்ந்தவுடன் அடுத்த குழுவைச் சார்ந்த மக்கள் அடிவாங்கப் போய் நிற்பது என்பது மிகவும் வேறுவிதமான வலிமையான விஷயம். அது அவ்வளவு எளிதல்ல. ஒருவர் அப்படிச் செய்வதற்கு மிகவும் ஆழமான மன வலிமை வேண்டும். லட்சக்கணக்கான மக்களை அவரால் அப்படி ஈடுபடுத்த முடிந்தது.

தான், தன் குடும்பம், தன் வாழ்க்கை என்ற எல்லையை விட்டுவிட்டு அப்போது சமூகத்தில் நிலவிவந்த மக்களின் முக்கியப் பரச்சினைகளோடு அவர் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டதால் அவருடைய சிறிய அடையாளம் சிதறியது. எனவே நீங்கள் என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாது என்று நிர்ணயித்து ஓர் எல்லைக்குள் சிக்கிக்கொள்ளாதீர்கள். உங்களால் செய்ய முடிந்த எதையும் செய்யுங்கள். செய்ய முடியும என்று நினைக்கும் எதையும் செய் யுங்கள்!

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# காங்கிரஸ் அரசின் மீதான நடுத்தர மக்களின் கோபம், மோடிக்கு ஆதரவாக மாறுமா...?



2014 லோக்சபா தேர்தலில் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் மோடியை பிரதமராக ஆதரிப்பார்களா? குஜராத்தில் மோடியால் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிகள் நாடு முழுவதும் ஏற்படுமா? ஆகியன பெரும்பாலான மக்களின் கேள்வியாக உள்ளது.

பதில் கூறும் குஜராத்.....

நாடு முழுவதிலும் உள்ள நடுத்தர மக்கள் மோடியை ஆதரிப்பார்களா என்ற கேள்விக்கு பதில் தேடுவதற்கு முன்னர், குஜராத்தில் நடுத்தர மக்கள் மோடியை எவ்வாறு ஆதரிக்கிறார்கள் என்பதை பார்க்க வேண்டும். குஜராத்தில் மோடியால் கொண்டு வரப்பட்ட பொருளாதார வளர்ச்சி, நிர்வாகத்திறன் ஆகியன அவர் மீதான நம்பிக்கையை அதிகரிக்க வைத்து நடுத்தர மக்களை ஈர்த்துள்ளதாக கூறப்படுகிறது. இது உண்மையான்காரணமா என ஆராய்ந்தால், ஆம் பதிலே கிடைக்கிறது. மோடி முதல்வராக வருவதற்கு முன் குஜராத்தில் பா.ஜ.கவின் செல்வாக்கு பின்தங்கியே இருந்துள்ளது. குஜராத்தின் கிராமம் மற்றும் நகர்புறங்களில் மோடி காலத்திலேயே பா.ஜ.கவின் ஆதிக்கம் உயர்ந்துள்ளது.

மோடியின் செல்வாக்கு...

சட்டமன்ற அல்லது லோக்சபா தேர்தலில் குஜராத்தில் காங்கிரஸ் வெற்றி பெற்றபோது 1984-85 ம் ஆண்டில் ராஜீவ் புகழ் ஓங்கி இருந்தது. இருந்தபோதும் அதற்கு பின்னர், குறிப்பாக பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு குஜராத்தில் நடைபெற்ற தேர்தலில் பா.ஜ.க தோல்வி அடையவில்லை. குஜராத்தில் பட்டேல் இனத்தவர்களின் பெரும் அளவிலான ஆதரவு பா.ஜ.கவிற்கு இருந்தது. இது குஜராத்தில் பா.ஜ.கவை தொடர்ந்து பலம் மிக்க கட்சியாக உருவாக்க காரணமாக அமைந்தது. ஆரம்பத்தில் ஜாதி அடிப்படையில் பா.ஜ.கவின் ஆதிக்கம் குஜராத்தில் அதிகரித்தாலும் பின்னர் படிப்படியாக மோடியின் செயல்பாடுகள் மக்களின் மனதில் ஜாதி பேதங்களை கடந்த மதிப்பை மோடிமீது ஏற்படுத்தியது. இதுவே குஜராத்தில் பா.ஜ.க வெல்ல முடியாத மிகப் பெரிய கட்சியாக உருவாக்கியது. குஜராத்தில் நடுத்தர மக்கள் மோடியை ஆதரிக்க ஜாதி கட்சிகளுடனான கூட்டணியா அல்லது பா.ஜ.க.மீதும் மோடி மீதும் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையா என்று பார்த்தால் ஜாதி கட்சிகளின் கூட்டணி என்பது தற்போதைய காலகட்டத்தில் சாத்திய மற்றதாகும்.

பயனளிக்காத ஜாதி கட்சிகள்....

நாடு முழுவதும் நடுத்தர மக்கள் மோடியை ஆதரிப்பதற்கும் ஜாதி கட்சிகளுடனான கூட்டணி பயனளிக்காது. இது நாட்டின் அடுத்த பிரதமரை தேர்ந்தெடுக்கும் போது மக்களின் மனநிலையை மாற்றாது. உத்திர பிரதேசத்தில் யாதவர்களே அதிகம், ஆந்திராவில் ரெட்டி இனத்தவர்களே அதிகம். அவர்கள் ஜாதி அடிப்படையில் வாக்களித்தாலும், பிற உள்ளூர் ஜாதி கட்சிகளின் ஆதரவு தேவை. இது 2014 தேர்தலின் போக்கை மாற்றாது. ஆனால், மோடி மீதான தனிப்பட்ட நம்பிக்கை மக்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. அதேசமயம் சென்னை மற்றும் கொல்கத்தா போன்ற நகரங்கள் இதற்கு விதிவிலக்காகவே இருக்கும். தமிழகம் மற்றும் மேற்கு வங்கத்தில் பா.ஜ.கவிற்கு பெரிதாக கூறும் அளவிற்கு செல்வாக்கு இல்லை என்பதால் அங்கு மோடியின் செல்வாக்கு பலிக்குமா என்பது சந்தேகமே. தமிழகத்தில் திராவிட கட்சிகளும் மேற்குவங்கத்தில் திரிணாமுல் காங்கிரசும் ஆதிக்கம் பெற்றுள்ளதால் பா.ஜ.கவிற்கு அது பின்னடைவாகவே இருக்கும்.

பெருநகர ஆதரவு .....

நாட்டின் பிற பகுதிகளில் மத்திய அரசின் மீது மக்கள் குறிப்பாக நடுத்தர மக்கள் கொண்டுள்ள வெறுப்பு, கோபம் ஆகியன நிச்சயம் மோடி மீதான ஆதரவை பல மடங்கு அதிகரிக்கச் செய்யும். டில்லி, மும்பை, பெங்களூரு உள்ளிட்ட பெருநகரங்களில் மோடியின் செல்வாக்கே ஓங்கி நிற்கும். இருப்பினும், பெருநகரங்களை மட்டும் கணக்கிட்டால் பா.ஜ.கவிற்கு 24 இடங்களுக்கும் குறைவாகவே கிடைக்கலாம். ஆனால், சிறு நகரங்கள் மற்றும் கிராமப் புறங்களில் மக்களின் மனநிலையை சரியாக கணிக்க முடியாமல் இருப்பதால் தெளிவற்ற நிலையே காணப்படுகிறது. பொதுவாக ஜாதி அடிப்படையிலான ஓட்டுக்கள் அதிகளவில் பதிலாகும் என்றாலும், தற்போது நடுத்தர மக்களிடையே அதிகரித்து வரும் அரசியல் விழிப்புணர்வால், தற்போதைய விலைவாசி உயர்வு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

மக்களிடையே ஏற்பட்டு வரும் அரசியல் விழிப்புணர்வு மிக விரைவிலோ அல்லது படிப்படியாகவோ இந்திய அரசியலில் மிகப் பெரிய மாற்றத்தை நிச்சயம் ஏற்படுத்தும் என்றே கூறலாம். இந்த அரசியல் மாற்றம் 2014 தேர்தலில் நரேந்திர மோடியால் ஏற்படுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# General Certificate of Education Ordinary Level 2013 (December) model Exam Paper / Western Province

## English Language - Paper II

**Answer All Question**

**Test 9**

Underline the most suitable word within the brackets.

**The first one is done for you.**

Sri Lanka being an (1) ____________ (agriculture/agricultural/agriculturally) country has a fine system of water (2) ____________ (manage/managerial/management). We get rain and we enjoy an (3) ____________ (abundance/abundant/abundantly) of lush green (4) ____________ (vegetarian/vegetation/vegetate). Sometimes we have dry seasons and experience the (5) ____________ (harshness/harsh/harshly) of drought when there is no rain for a long period. We tend to (6) ____________ (understanding/understood/understand) the value of water during this time.

**(5 marks)**

**Test 10**

Fill in the blanks in the following text using the prepositions given in the box.

| | | | | |
|---|---|---|---|---|
| from | with | on | in | of |
| by | through | to | at | around |


There will be Shramadana in Malamulla Sri Saranankara Maha Vidyalaya next week. The students and their parents have been asked to come (1) ________ school (2) ________ saturday (3) ________ 7.30 a.m. That day they will work (4) ________ the school garden (5) ________ 7.30 a.m to 11.00 a.m. A group (6) ________ parents (7) ________ the help of students will repair the fence (8) ________ the vegetable beds to prevent the animals from creeping (9) ________ the fence. Another group will clean the school garden (10) ________ collecting the litter thrown about and others will plant some trees to make the garden beautiful.

**(5 marks)**

**Test 11**

Given below is a discussion a group of students had about their school exhibition. Write how Janali later reported it to Ishara who was absent in the discussion.

**One is done for you.**




(1) Lakshan said that he had made a few exhibits.

(2) ______________________________

(3) ______________________________

(4) ______________________________

(5) ______________________________

(6) ______________________________

**(5 marks)**

**Test 12**

Read the following advertisement and answer the questions.

**IMMEDIATE VACANCIES**

Being a reputed and reliable company in the field, we are keen to obtain the services of an equally reliable and efficient individual for the following position.

**SALES REPRESENTATIVE**

Qualifications:

- GCE(A/L) with minimum 2 subjects passed.
- Results oriented business promotional ability.
- possess motorcycle driving license.
- Minimum 2 years experience in sales will be advantageous.
- Age between 23 and 32 years.
- Attractive monthly salary + incentives exceeding Rs.30,000/- awaits successful candidate.

Please send application with names of two non related referees, to reach us within 10 days.

**Sahana Distributors (Pvt) Ltd.**
81, Galle Road, Panadura.
Email: sahanadistributors@gmail.com

(1) What is the job advertised?

..............................................

(2) How many years of experience should the candidates have?

..............................................

(3) Should the candidates have a driving license?

..............................................

(4) How much can a successful candidates earn monthly?

..............................................

..............................................

(5) The advertiser requests the candidates to include specially one thing in the application. What is it?

..............................................

..............................................

**(5 marks)**

**Test 13**

Fill in the blanks in the following text using the words given in the box.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| have | another's | they | places | who | not | always |
| also | ill-mannered | regard | parents | others | become | a |

Good manners and good habits should be taught at home by parents and at school by teachers during our childhood. This is why we (1) .................. our teachers as second (2) .................. who guide us to (3) .................. good citizens. A person (4) .................. knows good manners will (5) .................. behave or speak in (6) .................. rude manner to hurt (7) .................. feelings. Such people are (8) .................. very considerate of others. (9) .................. respect the ideas of (10) .................. even if they do not (11) .................. agree with them. We (12) .................. often seen how certain (13) .................. people behave at public (14) .................. and even at places of religious worship, causing great inconvenience to the public. We have also witnessed the behaviour of many well mannered and considerate people.

**(7 marks)**

**Test 14**

Imagine that you are boarded in the school hostel. You were unable to go home to your younger sister's birthday party because you were getting ready for the school Term Test. Write a letter to your sister.

**Use about 100 words.**

Include the following

- wish your sister a happy birthday

**Say**

- why you were not able to come to the party
- when you expect to return home etc.

**OR**

Your school has organized a fair to collect money to hold the inter - house spo rtsmeet of the school. As the sports captain, write a letter to the parents and well - wishers inviting them to buy items in the fair.

**Use about 100 words.**

Include the following:

- why you organized the fair
- when and where it is held
- what items they can buy
- request their participation

**(10 marks)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலவச கருத்தரங்கு

(குருமன்காடு)

இவ்வாண்டு கல்விப் பொதுசாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் வவுனியா மாவட்ட மாணவர்களுக்கு யாழ் பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக மாணவர்களின் ஏற்பாட்டில் இலவச கருத்தரங்குகள் நடைபெறுகின்றன.

இதற்கான நிதியுதவியாக 50 ஆயிரம் ரூபா பணத்தினை ரி.ரி.ஆர் தமிழ் ஒலி வானொலி வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஊடாக வழங்கியது.

இந் நிதியை பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் பாரியார் திருமதி அருந்ததி சிவசக்தி ஆனந்தன் வவுனியா வளாக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரிடம் கையளித்தார். (ம-250)




# மீட்கப்பட்ட முந்நூறு ஏக்கர் விவசாய நிலத்தில் விவசாயிகள் பயிர்ச் செய்கை

(குருமன்காடு)

வர்த்தமானியில் அறிவிக்கப்படாத மணலாறு- வெலி ஓயா பிரதேச சபைக்குள் உள்வாங்கப்பட்டிருந்த, தமிழர் நிலத்தில், சுமார் 300 ஏக்கர் பிரதேசத்தில் தமிழ் மக்கள் விவசாயம் செய்து அந்த மண்ணின் மூலமான வாழ்வாதாரத்தையும் அப்பகுதியில் தமிழர்களின் இருப்பையும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன்னர், வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் கொக்கிளாய் கடனீரேரியில் சிங்களவர்களால் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய மீன்பிடியைக் கண்காணிக்கும் நோக்கில் கொக்கிளாய் சென்றிருந்த போது கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணிமக்களுடன் அங்கு இடம்பெறும் நில அபகரிப்புத் தொடர்பான ஒரு சந்திப்பை நடத்தினார்.

இதன் போது தமது 2 ஆயிரத்து 556 ஏக்கர் நிலப்பகுதி அதனுள் சேர்க்கப்பட்டுள்ளது பற்றிய பூகோள விபரங்களை, மக்கள் ரவிகரனிடம் விபரமாக கூறியிருந்தனர்.

அவற்றுள் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி மழையினால் பயன்பெறுகின்ற மானாவரி வயல்நிலப்பகுதியாகும். சுமார் 3 மாத காலத்திற்கு முன்னர் இதில் விவசாயம் நடத்தச் சென்றவேளை தமிழர்கள் சிங்களவர்களால் துரத்தப்பட்டிருந்தனர். இந்த நிலையில் நிலப்பகுதியை மீளப்பெறுவதில் ஒருங்கிணைந்த மக்கள் சக்தியால் தான் முடியும் எனவும், வடமாகாணசபைத் தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிற நிலையில், தான் இதனுடைய முழு ஆதரவையும் இப்பகுதியை மீட்டெடுக்கிற பணிக்குத் தருவேன் என்றும், வருகின்ற நவம்பர் 27ஆம் திகதிக்கு முன்னதாக அப்பகுதியில் தமிழ் மக்களின் இருப்பு உறுதி ப்படுத்தப்படுவதை தான் விரும்புவதாகவும் கூறியிருந்தார்.

இதையடுத்து அடுத்த சில நாட்களில் துணிச்சல் மிக்க 60 தமிழ் விவசாயிகள் அப்பகுதியில் விவசாயம் செய்யச் சென்றனர். சீரற்ற வயல் பாதைகள், ஆபத்தை விளைவிக்கக்கூடிய சகதிகளின் விளைவால், கடும் சிரமத்தின் மத்தியில் 300 ஏக்கர்வயல் பகுதியில் உழுது நெல் விதைத்தனர். பாதைகள் சீரின்மையால் மேலும் பல விவசாயிகள் தமது ஏனைய வயல்நிலங்களில் தமது இருப்பை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

இவ்விடயங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ரவிகரன், "சுமார் 10 கி.மீ தூரத்திற்கு வயல்பாதைகள் அமைக்கப்பட்டால் வெலி ஓயாவினுள் உள்வாங்கப்பட்ட மேலும் 700 ஏக்கர் தமிழர் நிலம் பறிபோகாமல் காப்பாற்றலாம்.

நீர்ப்பாசன வசதியோடு விவசாயம் செய்கிற நிலப்பகுதிகள் பறிபோயுள்ள நிலையில், நீர்ப்பாசன வசதியற்ற மானாவரிச் செய்கை வயல்நிலங்களை நம்பியே இம்மக்களின் வாழ்வாதாரம் தங்கியுள்ளது. அது தவிர, சூரியனாறு என்கிற குளத்தைத்திருத்தி நீர்ப்பாசன வசதி மேற்கொள்ளப்பட்டால் சுமார் 2ஆயிரம் ஏக்கர் தமிழர் நிலம் பாதுகாக்கப்படும். இந்நிலத்தை பாதுகாக்கிற காவலாளிகளாக அந்தத்துணிச்சலான விவசாயிகள் இருக்க வேண்டுமென தெரிவித்தார். (ம-250)

## மாற்றுவலுவுள்ளோர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

(கிளிநொச்சி )

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனம் சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினத்தை எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்க உள்ளனர்.

அன்றைய தினம் காலை 10 மணிக்கு மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனப் பிரதிநிதிகள் 5 குழுக்களாக கிளிநொச்சி நகரப் பிரதேசத்தில் உள்ள அரச, தனியார் நிறுவனாங்களுக்கு சென்று மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்த உள்ளனர். இது தொடர்பான ஆரம்ப நிகழ்வை அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் ஆரம்பித்து வைக்க உள்ளார்.

பிற்பகல் 2 மணிக்கு மாவட்டச் செயலக வளாகத்தில் கிளிநொச்சி மாவட்ட மாற்று வலுவுள்ளோர் சம்மேளன தலைவர் தி.சிவமாறன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறும்.

இதில் மாவட்ட அரசாங்க அதிபர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ள உள்ளார். (ம-254)

## பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பது தொடர்பான செயலமர்வு



(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்கும் விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவும் இலவச சட்டமையமும் இணைந்து செயலமர்வு ஒன்றை கடந்த நவம்பர் மாதம் நடத்தினார்கள்.

இலவச சட்ட மையத்தின் அதிகாரி சட்டத்தரணி விஜயராணி, யு.என்.எச்.சி.ஆர் நிறுவன அதிகாரி, கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார்கள்.

பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் தொடர்பான கருத்துக்கள் நிகழ்வில் கலந்துரையாடப்பட்டன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் பொறுப்பாக ஒவ்வொரு பொலிஸ் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்கள் அறிமுகம செய்து வைக்கப்பட்டனர்.

கரைச்சி பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடத்தப்பட்ட இந நிகழ்வில் கிராம அபிவிருத்திச் சங்க, மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கரைச்சி பிரதேச செயலகத்தின் வெளிக்கள உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-254)

## மோட்டார் சைக்கிள் விபத்து

### இருவர் படுகாயம்

(கனகபுரம்)

மோட்டார் சைக்கிள் பாலத்துடன் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்து கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் பரந்தன் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, பின்னால் வந்த வாகனத்திற்கு இடம் விட்டுக் கொடுக்கும் போதே மோட்டார் சைக்கிள் பாலத்துடன் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது.

இச்சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் நிஷாந்தன் (வயது 21), ரூபண்டயானா (வயது 16) ஆகிய இருவருமே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-259)



கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் வடமாகாண சமூகசேவைகள் திணைக்கள நிதியின் மூலம் நலிவுற்ற குடும்பங்களுக்கு யுனிசெவ் நிதியின் மூலம் சுயதொழில் கொடுப்பனவு தலா 36 ஆயிரம் ரூபா வீதம் 12 குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு முதல் கட்டமாக காசோலை பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரனால் வழங்கப்படுவதனையும் அருகில் மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், கரைச்சி பிரதேச செயலக சமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி. வி.சுசீலா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்:- சிவநகா செய்தியாளர்)

# கிளி.தமிழ் சங்கத்தின் திருக்குறள் மாநாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச்சங்கத்தின் 11ஆவது திருக்குறள் மாநாடு நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பித்து காலை , மாலை நிகழ்வுகளாக நண்பர்கள் விருந்தக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

க.கனகசிங்கம் தலைமையில் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகும் காலை அமர்வில் திருக்குறள் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் செ.ஸ்ரீநிவாசன், சிறப்பு விருந்தினர்களாக மகாதேவா திருமடம் சைவச்சிறுவர் இல்லத் தலைவர் தி.இராஜநாயகம், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன்,கிளிநொச்சி கல்வி வலய தமிழ்ப்பாடப் பிரிவுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிறேமா மதுரநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து வே. இறைப்பிள்ளை தலைமையில் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள மாலை நிகழ்வுகளில் திருவள்ளுவர் விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சர் த.குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்தந்தை அருளானந்தன் யாவிஸ் அடிகளார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், வவுனியா பொது மருத்துவமனை மருத்துவக் கண்காணிப்பாளர் ச.சத்தியமூர்த்தி இலங்கை வங்கியின் கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் கு.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம்மாநாட்டின்போது கலைநிகழ்வுகள், சொற்பொழிவுகள்என்பன இடம்பெறவுள்ளதோடுமாலை நிகழ்வுகள் அமரர் அபிராமி விமலதாசன் நினைவாக இடம்பெறவுள்ளது. (அ-5-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை வளைப்பதற்காகவே களமிறக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்கா?

கொமன்வெல்த் மாநாடு இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்தளவுக்கு வெற்றியைத் தரவில்லை என்பதுடன், எதிர்மாறான விளைவுகள் பலவற்றையும் ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச சமூகம், இந்த மாநாட்டைப் பயன்படுத்தி கிட்டத்தட்ட இலங்கையை ஒரு வட்டத்துக்குள் சிக்க வைத்துள்ளதா? என்கிற கேள்வி எழுந்துள்ளது. இந்த மாநாட்டை ஒட்டி நடந்துள்ள பல நிகழ்வுகள் தான் இந்த சந்தேகத்தை கிளப்பியுள்ளது.

பொதுவாகவே, சர்வதேச இராஜதந்திர அரங்கில், இரண்டு விதமான அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்படுவதுண்டு. முதலாவது- கடும்போக்கு அணுகுமுறை, இரண்டாவது- மென்கடும்போக்கு அணுகுமுறை.

ஒரு நாட்டை முற்றாக ஓரம் கட்டி, ஒதுக்கித்தள்ளி, அதன் ஆட்சியை மாற்ற வல்லமைமிக்க நாடுகள் திட்டமிட்டால், அதற்காக கடும்போக்கை கடைப்பிடிக்கத் தவறுவதில்லை. பொருளாதாரத் தடை, ஆயுத ஏற்றுமதித் தடை என்று அடுக்கடுக்கான தடைகளை விதித்து, உச்சக்கட்டமாக படைகளை அனுப்பி தமது இலக்கை அடைவது அவற்றின் வழக்கம். ஈரான், வடகொரியா, கியூபா போன்ற நாடுகள் இத்தகைய தடைகளை இப்போதும் எதிர்கொள்கின்றன. ஈராக், லிபியா போன்ற நாடுகளில் இத்தகைய தடைகள், படைத் தலையீடுவரை விரிந்தது. இத்தகைய கடும்போக்கை இலங்கைமீது செலுத்தும் திட்டம் ஏதும் தற்போது வல்லமைமிக்க நாடுகளின் கையில் இல்லை. ஆனால், இலங்கை மீது மென்கடும்போக்குஅணுகுமுறையை கடைப்பிடிக்கும் திட்டத்தை மேற்குலக நாடுகள் கொண்டிருப்பது உண்மை.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட இரண்டு தீர்மானங்களும் இதற்குச் சாட்சி. அதுமட்டுமன்றி, இலங்கைக்கு எதிராக அமெரிக்காவும் ஏனைய அதன் சார்பு நாடுகளும் கொண்டுள்ள அல்லது வெளிப்படுத்தி வரும் கருத்துக்கள், இந்த நிலைப்பாட்டை வலுப்படுத்துகின்றன. அதாவது, இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கு செயற்பாடுகளை நேரடியாக மேற்கொள்ளாது போனாலும், இலங்கையை ஒரு வட்டத்துக்குள் கொண்டு வருவதற்கு- தமது பிடிக்குள் சிக்கவைத்துக் கொள்வதற்கு மேற்கு நாடுகள் முனைகின்றன என்பதில் சந்தேகமில்லை. அதற்கான கடிவாளமாகவே போர்க்குற்ற விவகாரங்களும் பொறுப்புக்கூறலும் அமைந்துள்ளன. இந்த விவகாரங்களை வைத்து, மிரட்டி இலங்கை அரசாங்கத்தைக் கொண்டு சில காரியங்களை நிறைவேற்றச் செய்வதற்கு சர்வதேச சமூகம் முனைவதாகதெரிகிறது. அதாவது, இலங்கையை அடித்து முறிப்பது அவர்களின் நோக்கமல்ல. பயமுறுத்தி வளைப்பதுதான் அவர்களின் இலக்காகத் தெரிகிறது.

கொமன்வெல்த் மாநாட்டில் மேற்குலகின் ஆதிக்கம் குறைவு. ஏனென்றால், முக்கியமாக அமெரிக்கா அதில் இல்லை. அதன் கூட்டாளிகளான பிரான்ஸ் போன்ற ஏனைய பல ஐரோப்பிய நாடுகளும் இல்லை. ஆனால், பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா போன்ற மேற்குலக நாடுகள் இதில் உள்ளன. கனடாவும் பிரித்தானியாவும் இலங்கைக்கு எதிராக கொமன்வெல்த் மாநாட்டில் வரிந்து கட்டிக் கொண்டு செயற்பட்டன. ஆனாலும் இந்த மாநாட்டில் மேற்குலக நாடுகள் ஒன்றுபட்டு ஒரே குரலாக ஒலிக்கவில்லை.



சர்வதேச அரங்கில் வழக்கமாக ஒரே குரலில் ஒலிக்கும்- செயற்படும் மேற்குலக நாடுகள், கொமன்வெல்த் மாநாட்டில் இலங்கைக்கு சார்பாகவும் எதிராகவும் நடந்துகொண்டது புதிரான விடயம்தான். இந்த விடயத்தில் இலங்கைக்கு முற்றிலும் சார்பாக நடந்து கொண்டது அவுஸ்திரேலியா. அதற்கு முக்கியமான காரணம், அகதிப்படகுகளை தடுப்பதற்கு இலங்கைக் கடற்படையின் உதவி தேவை. அதற்காக இலங்கையின் மனித உரிமை மீறல்களையெல்லாம் கண்ணை மூடிக் கொண்டு ஆதரிக்கத் தயாரானது. ஆனால், நியூசிலாந்து போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணையெல்லாம் தேவையில்லை என்று குத்துக்கரணம் அடித்ததன் பின்னணி மர்மமாகவே உள்ளது.

இவ்வாறு மேற்குலகம் முரண்பட்டுக் கொண்டிருக்க, இந்திய பிரதமர் மன்மோகன்சிங் மாநாட்டிற்கு வராது தனது எதிரப்பை பதிவு செய்தார். எத்தகைய சூழலில் அவர் வராது போயிருந்தாலும், அதற்கு அடிப்படை, மனித உரிமை மீறல்கள்தான் என்பதில் சந்தேகமில்லை. அந்த வகையில் அவரது எதிர்ப்பு இலங்கைக்கு சார்பானதாக கருதப்படத்தக்கதல்ல. அதுமட்டுமல்ல, கனடாவைப் போலவே, வெளிப்படையான புறக்கணிப்பை வெளிப்படுத்திய ஒரே நாடு மொறிசியஸ்தான். கனேடியப் பிரதமரைப்போன்றே மொறிசியஸ் பிரதமர் நவீன் சந்திர ராம்கூலம், கொமன்வெல்த் மாநாட்டைப் புறக்கணிப்பதாக அறிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை மீறல்களை சுட்டிக்காட்டி அவர் கொழும்பு மாநாட்டைப் புறக்கணித்தது முக்கியமானது. இலங்கையை எதிர்த்தமையால் கனடாவோ. பிரித்தானியாவோ எதையும் இழக்கவில்லை. ஆனால், மொறிசியஸ் பிரதமர் இந்த மாநாட்டைப் புறக்கணித்ததால் அடுத்த மாநாட்டை நடத்தும் வாய்ப்பை இழக்க நேரிட்டது.

அரச தலைமை கொழும்புக்கு வந்தால்தான் அடுத்த மாநாட்டை நடத்த முடியும் என்று கொமன் வெல்த் செயலர் கமலேஸ் சர்மா மிரட்டிப் பார்க்க, கொழும்புக்கு வந்துதான் மாநாட்டை நடத்தும் வாய்ப்பைப் பெற வேண்டும் என்றால், அத்தகைய வாய்ப்பு தமக்கு வேண்டாம் என்று அந்த வாய்ப்பையே தூக்கி வீசியிருந்தார் மொறிசியஸ் பிரதமர் நவீன் சந்திர ராம்கூலம். அதாவது, குறிப்பிட்ட சில நாடுகள் கொமன்வெல்த் மாநாட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு அழுத்தம் கொடுத்தன. சில நாடுகள் ஆதரவு தெரிவித்தன. இன்னும் சில நாடுகள், எதிர்க்காமலும் ஆதரிக்காமலும் வந்துபோயின. அவ்வாறு வந்துபோன நாடுகளில் ஒன்றுதான் தென்னாபிரிக்கா.

நவநீதம்பிள்ளையின் தாய்நாடான தென்னாபிரிக்கா, அண்மைக் காலத்தில் இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அதிகம் வாய் திறக்காது இருந்து வருகிறது. மொறிசியசைப் போன்றே தமிழர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவழியினர் அதிகளவு வாழும் தென்னாபிரிக்கா, ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதாக அரசாங்கத்தால் விமர்சிக்கப்பட்ட நாடு. அந்த நாடு, இலங்கையின் போர்க்குற்றங்கள் மீது கடும் போக்கை வெளிப்படுத்தாதது ஏன் என்ற கேள்வி இப்போது நீடிக்கவே செய்கிறது. புறக்கணிக்கும் அழைப்புக்களுக்கெல்லாம் அகப்படாது, தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா, கொழும்பு வந்து, மாநாடு தொடங்கியதில் இருந்து முடியும் வரை இலங்கையுடன் நின்றிருந்தார். ஒரு பக்கத்தில் இலங்கைக்கு காலக்கெடு விதித்து, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் பரபரப்பை கிளப்பிவிட்டபோது தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா அமைதியாக இருந்தார். ஆனால், அவரும் இலங்கையை வளைப்பதற்கான ஒரு கருவியாகவே செயற்பட்டுள்ளார் என்றே தெரிகிறது.

நவநீதம்பிள்ளையின் தாய்நாடான தென்னாபிரிக்கா, அண்மைக் காலத்தில் இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அதிகம் வாய் திறக்காது இருந்து வருகிறது.

மொறிசியசைப்போன்றே தமிழர்கள் உள்ளிட்ட இந்திய வம்சாவழியினர் அதிகம் வாழும் தென்னாபிரிக்கா, ஒரு காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்துள்ளதாக அரசாங்கத்தால் விமர்சிக்கப்பட்ட நாடு. அந்த நாடு இலங்கையின் போர்க்குற்றங்கள் மீது கடும் போக்கை வெளிப்படுத்தாதது ஏன் என்ற கேள்வி இப்போது நீடிக்கவே செய்கிறது.

புறக்கணிக்கும் அழைப்புக்களுக்கெல்லாம் அகப்படாமல், தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா, கொழும்பு வந்து, மாநாடு தொடங்கியதிலிருந்து முடிவடையும்வரை இலங்கையுடன் நின்றிருந்தார். ஒரு பக்கத்தில் இலங்கைக்கு காலக்கெடு விதித்து, பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் பரபரப்பை கிளப்பிவிட்டபோது தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா அமைதியாக இருந்தார். ஆனால், அவரும் இலங்கையை வளைப்பதற்கான ஒரு கருவியாகவே செயற்பட்டுள்ளார் என்றேதெரிகிறது. ஜெனீவா தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்தாவிடின் அடுத்த ஆண்டு இன்னும் கடினமான முடிவுகளை எடுக்க நேரிடும் என்று அமெரிக்கா ஏற்கனவே எச்சரிக்கை செய்துள்ளது. இந்த நிலையில் நான்கு மாதங்களுக்குள் சுதந்திரமான உள்ளக விசாரணையை நடத்தாவிடின், ஐ.நா மனித உரிமைகள் பேரவை மூலம் சர்வதேச விசாரணைக்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்று பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் எச்சரித்துள்ளார். அதுமட்டுமன்றி இலங்கை விவகாரம் பிரித்தானிய வெளிவிவகாரக் கொள்கையின் ஒரு பகுதியாகியுள்ளதாகவும் எல்லா சர்வதேச அமைப்புக்களிலும் இது எழுப்பப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். இலங்கையின் மனித உரிமை விவகாரத்தில் ஒன்றுபட்டு செயற்படுவோம் என்று கொழும்பு வரமுன்னர் புதுடெல்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்குடன் ஒரு இணக்கப்பாட்டைக் கண்டிருந்தார் டேவிட் கொமரூன்.

நம்பகமான உள்ளக விசாரணைக்கு இலங்கை இணங்காது போனால், சர்வதேச விசாரணை உறுதி என்ற கருத்து வலுவாக பரப்பப்பட்டுவருகின்ற சூழலில், ஏதாவதொன்றை செயற்படுத்தியாக வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. அதிலும் கொமன்வெல்த் அமைப்பின் தலைமை வேறு இலங்கையிடம் வந்துள்ளது. அந்தப் பொறுப்பையும் நிறைவேற்றியாக வேண்டும். இத்தகைய அழுத்தங்களின் ஊடாக சுதந்திரமான தொரு உள்ளக விசாரணைப் பொறிமுறையை நோக்கி இலங்கையை நகர்த்த முனைகிறது சர்வதேச சமூகம். அதற்கான கருவியாகத்தான் தென்னாபிரிக்கா பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. தென்னாபிரிக்காவில் இன முரண்பாடுகளை களைய உண்மை நல்லிணக்க ஆணைக்குழு எவ்வாறு உதவியதோ, அதேபோன்றதொரு ஆணைக்குழுவை அமைப்பது குறித்து இலங்கை ஆலோசிப்பதாகத் தகவல்கள் கசிகின்றன. இது குறித்துப்பேசவே தென்னாபிரிக்க அதிபர் ஜேக்கப் சூமா கொமன்வெல்த் மாநாட்டுக்கு வந்திருந்தார். அந்தக் காரணத்தை அவர் வெளிப்படையாகவும் கூறினார். தென்னாபிரிக்கவின் உதவியுடன் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்து தற்போதைக்கு சர்வதேச அழுத்தங்களில் இருந்து விடுபட அரசாங்கம் எத்தனிக்கலாம். அதற்கான பொறிமுறையை உருவாக்குவது குறித்து தென்னாபிரிக்கா திட்டங்களை முன்வைத்துள்ளது. அது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தென்னாபிரிக்கா அதிபர் பேச்சு நடத்தியுள்ளார். இது பற்றி, இந்தியாவுடன் கலந்தாலோசித்துவிட்டே பதில் கூறமுடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவிட்டதாக தகவல் வெளியிட்டுள்ளார் அமைச்சர் பசில் ராஜபக்ச. எவ்வாறாயினும் இந்தியாவோ பிரித்தானியாவோ அமெரிக்காவோ இதற்குக் குறுக்கே நிற்கப்போவதில்லை. அதேவேளை இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணை அழுத்தங்களை நிராகரித்துள்ள போதிலும் உள்ளக விசாரணையை நடத்த கால அவகாசம் கோரியுள்ளது கவனிக்கத்தக்கது.

உள்நாட்டுச் சட்டங்களின்படியே விசாரணைகளை நடத்த முடியும என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதனால் உள்ளக விசாரணை அமைக்கப்பட்டாக வேண்டும். சர்வதேச விசாரணைக் குழு அமைக்கப்படுவதை சீனா விரும்பாது. அதனால் தான் சீனா கூட மனித உரிமைகளை மதிக்கவும் ஊக்குவிக்கவும் இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கைக்கு திடீர் ஆலோசனை கூறியது. உள்ளக விசாரணைமூலம் பொறுப்புக்கூற வைக்கும் ஒரு அணுகுமுறையை தற்போது சர்வதேச சமூகம் மேற்கொண்டாலும் அது சுதந்திரமானதாக இருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்கும். அதற்காகவே தென்னாபிரிக்கா களமிறக்கப்பட்டுள்ளது. முன்னர் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி பொறிக்குள் தள்ளுவதற்கு நோர்வேயை சர்வதேச சமூகம் எவ்வாறு பயன்படுத்திக் கொண்டதோ, அதுபோனறே இலங்கை அரசாங்கத்தை வளைத்து ஒரு வட்டத்துக்குள் கொண்டு வருவதற்கு தென்னாபிரிக்கா களமிறக்கப்பட்டுள்ளது. இது எந்தளவுக்கு சாத்தியமாகும் என்று கூற முடியாது. ஆனால், அடுத்த சில மாதங்களுக்குள் இலங்கை இந்த வட்டத்துக்குள் சிக்கிக்கொள்ள மறுத்தால் அடுத்த கட்டமாக மேற்கு நாடுகள் இலங்கையை பெட்டிக்குள் அடைக்கும் முயற்சிகளைத்தான் முன்னெடுக்கும்.

(தொல்காப்பியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்காக போராடி மாண்டவர்களை பயங்கரவாதிகள் எனக் கூறாதீர்கள்

## சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு

**போரின் போது இறந்த படையினரையும் ஜே.வி.பி. கிளர்ச்சியில் உயிரிழந்தவர்களையும் நினைவு கூர முடியுமானால் தமிழர்களின் உரிமைக்காகப் போராடிய மாவீரர்களை ஏன் தமிழர்கள் அஞ்சலி செலுத்தக்கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் கடந்த 28 ஆம் திகதி மாலை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தமிழர்களின் நீண்டநாள் கனவான வடமாகாணசபைத் தேர்தல் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று வெற்றி பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது மக்கள் கொண்ட நம்பிக்கையே இந்த வெற்றிக்குக் காரணமாக அமைந்தது.

ஆனால், மக்களின் நம்பிக்கையை பூர்த்தி செய்ய முடியாத ஒரு சூழ்நிலையிலேயே வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளார். காரணம், அவருக்கு அதிகாரங்களுமில்லை. அதிகாரிகளின் ஒத்துழைப்பும் இல்லை. அங்குள்ள அதிகா ரிகள் அனைவரும் ஆளுநருக்குக் கீழேயே செயற்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள்.

அப்படியாயின் ஏன் மாகாணசபைத் தேர்தல்களை அரசாங்கம் நடத்த வேண்டும்? வடக்கிற்கு மட்டுமல்ல ஏனைய மாகாணங்களுக்குமான அதிகாரங்கள் அந்தந்த முதல்வர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என அரசாங்கத்தை நாம் வலியுறுத்துகிறோம்.

மாவீரர் தினத்தையொட்டி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை சூழவுள்ள பகுதிகளில் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டது. அவர்கள் போரின் போது இறந்தவர்களை நினைவுகூரக்கூடாது. அப்படி நினைவு கூர்ந்தால் அது சட்டப்படி குற்றம் என்று அரசாங்கம் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது மிகவும் மோசமானதொரு செயற்பாடாகும். அரசாங்கம் போரின் போது இறந்த படையினரையும், ஜே.வி.பியினர் தாங்கள் செய்த கிளர்ச்சியில் இறந்தவர்களையும் நினைவு கூரும்போது ஏன் நாம் போரில் இறந்தவர்களை நினைவுகூரக்கூடாது. அரசாங்கத்தின் பார்வைக்கு இறந்தவர்கள் பயங்கரவாதிகளாக இருக்கலாம். ஆனால், தமிழர்களின் பார்வையில் இறந்தவர்கள் அனைவருமே உரிமைக்காகப் போராடி மாண்டவர்கள். அவர்கள் பயங்கரவாதிகள் அல்லர்.

அதேவேளை முல்லைத்தீவு, மாங்குளம், முத்தையன்கட்டு பிரதேசத்திலுள்ள படைமுகாமில் 2ஆயிரம் மாடுகள் சிக்கியுள்ளன. உயர் பாதுகாப்பு வலயம் என்பதால் மாடுகளை உரிமையாளர்களால் மீட்க முடியவில்லை.

இதனால், படையினர் மூலம் அங்குள்ள மாடுகளிடமிருந்து பால் கறக்கப்பட்டு படைமுகாம்களுக்கு அவை அனுப்பி வைக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, மேலதிக பால் "நெஸ்லே" நிறுவனத்துக்கு தலா 40 ஆயிரம் முதல் 45 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இது மிகவும் பிழையான செயலாகும். இதனால், மாடுகளின் உரிமையாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் இதுபோன்ற செயல்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)



இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய நிறுவுநர் நினைவு தினமும் மெய்யொளி நூல் வெளியீடும் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம்.

## 80 இலங்கையர்களை இன்டர்போல் தேடுகிறது

இலங்கையைச் சேர்ந்த 80 பேர் (சர்வ தேச பொலிஸார்) இன்டர் போல் தேடப்பட்டு வருவோர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத நடவடிக்கைகள், நிதி மோசடிகள் மற்றும் ஏனைய குற்றச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட 80 இலங்கையர்களை கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸார் ( இன்டர்போல்) விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் இலங்கைக்கு வெளியில் பல நாடுகளில் வசித்து வருகின்றனர். அவர்களில் நான்கு பேர் பிரித்தானியாவில் வசித்து வருகின்றனர்.

பிரித்தானியாவில் இருக்கும் நான்கு பேரில் ஒருவர் வங்கி உரிமையாளர் என்றும் இவர் விடுதலைப் புலிகளின் தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் தலைவர் என்றும் கூறப்படுகிறது.

இவர்களை கைது செய்ய ஸ்கொட்லண்ட் யார்ட் பொலிஸார், இன்டர்போல் பொலிஸாருக்கு உதவி வருவதாக தெரியவருகிறது. (அ-2)

## 'இறுதிக்கட்டம்' ஆவணப்படம் பிரிட்டனில் திரையிடப்பட்டது

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் இறுதிக் கட்டம் என்ற பெயரிலான ஆவணப்படம் ஒன்று ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் முதன்முறையாக திரையிடப்பட்டது. பிரசல்ஸில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் குறித்த ஆவணப்படம் காண்பிக்கப்பட்டது

இதன்போது இராஜதந்திரிகள், ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் சிலர் மற்றும் இலங்கையின் நண்பர் குழுவினர் பிரசன்னமாயிருந்தனர்.

இந்த ஆவணப்படத்தில் ஜெயவதனி என்ற முன்னாள் போராளி ஒருவர் செஞ்சோலையில் வளர்ந்த விதம், பின்னர் போராளியாக உருவானமை போன்ற அம்சங்கள் காட்சியாக்கப்பட்டிருந்தன.

ஜீவன் சந்திமல் என்பவரே இந்த ஆவணப்படத்தை தயாரித்திருந்தார்.

இந்த ஆவணப்பட காட்சியின் பின்னர் கருத்துரைத்த ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் உறுப்பினர் வான் ஓர்டன் இலங்கையில் படையினரின் நடவடிக்கைகளை காட்டிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் காரணமாகவே அதிகமான தமிழர்களின் மரணங்கள் ஏற்பட்டன என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில் குறித்த ஆவணப்படத்தை மேலும் பல இடங்களில் திரையிட்டு சமநிலை செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும் என்று நிகழ்வில் பங்கேற்றோர் தெரிவித்தனர். (அ-2)

## கொழும்பு மாநாட்டில் பிரிட்டன் கலந்து கொண்டது சரியானதே

### இந்தியாவுக்கான பிரதி உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெற்று முடிந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரித்தானியா கலந்து கொண்டது சரியானதே என அந்நாட்டின் இந்தியாவுக்கான பிரதி உயர்ஸ்தானிகர் பாரத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான புதிய பிரதி உயர்ஸ்தானிகராக பதவியேற்றுள்ள ஜோஷி இந்திய ஊடகங்க ளுக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஜோஷி பிரித்தானிய வெளி விவகார துறையின் முதல் இந்து என்பது மட்டுமல்லாமல் அவர் இந்தியாவின் குஜராத்தை சேர்ந்தவர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானிய அரசாங்கம் தெற்காசிய பிராந்தியத்தில் வலிமையான, பரந்த ஆழமான கூட்டாண்மை திட்டங்களை கொண்டுள்ளது.

பிரித்தானியாவின் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்த மக்கள் உள்ள இடத்திற்கு சென்று பார்வையிட்டதன் மூலம் மனித உரிமைகள் தொடர்பான பிரித்தானியாவின் ஆர்வத்தை நிரூபித்துள்ளார்.

அத்துடன் போரின் போது இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணைகளை நடத்த வேண்டும் என்றும் பிரதமர் கமரூன் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

பிரித்தானியா இரண்டு நாடுகளுக்கு இடையிலான கல்வி, ஆராய்ச்சி, வணிகம் மற்றும் தொழில்நுட்பம் உட்பட இதர துறைகளில்ஒருங்கிணைப்பை கட்டியெழுப்ப ஆர்வமாக உள்ளது என்றார். (அ-2)

## பாதிரியாருக்கு மிரட்டல்; திருமலை ஆயர் கவலை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை நகர பிரதேசத்திலுள்ள குவாடலூபே தேவாலய பங்குத் தந்தைக்கு புலனாய்வுத் துறையினர் என தம்மை அடையாளப்படுத்திய நபர்களினால் துப்பாக்கி முனையில் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக திருகோணமலை ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை கவலையும் விசனமும் வெளியிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளின் மாவீரர் தினத்திற்கு முதல் நாள், செவ்வாய்க்கிழமை இரவு இலக்கமற்ற மோட்டார் சைக்கிளில் தேவாலயத்திற்கு சென்ற இருவர், துப்பாக்கிமுனையில் பங்குத் தந்தையான அருட்திரு ஜோன்பிள்ளைக்கு இந்த அச்சுறுத்தலை விடுத்துச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தேவாலயத்தின் வழமையான பூசை வழிபாட்டை விடுதலைப்புலிகளின் மாவீரர் தின கொண்டாட்டம் மற்றும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்ததினம் ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தி விசாரணை செய்ய வேண்டும் எனக் கூறி, இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக திருகோணமலை ஆயர் இல்லத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நபர்கள் தங்களை புலனாய்வுத் துறை எனக் கூறிய போது அதிகாரபூர்வ அடையாள அட்டையை காட்டுமாறு அருட் தந்தை அந்நபர்களை கேட்ட போது அந் நபர்கள் அவரது பாதிரியாருக்கான உடையைப் பிடித்து உலுக்கி, கீழே தள்ளிவிட்டு வெளியேறும் போது இந்த அச்சுறுத்தலை விடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதோடு, இது தொடர்பாக பக்க சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என கேட்டுள்ளார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் கல்வி திட்டம் நடைமுறைக்கு வராது

(கொழும்பு)

பாடசாலை பாடத் திட்டத்தில் பாலியல் கல்வி தொடர்பான விடயப் பரப்பை உள்வாங்க இதுவரை திட்டமிடப்படவில்லை என ஆளும் தரப்பு பிரதம கொறடா அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். வாய்மூல விடைக்காக ரோஷி சேனாநாயக்க எம்.பி. கல்வி அமைச்சரிடம் கேட்டிருந்த கேள்விக்கான பதிலை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் சமர்ப்பித்தார்.

பாலியல் கல்வியை பாடத் திட்டத்தில் உள்ளடக்குவது தொடர்பில் ரோஷி சேனாநாயக்க எம்.பி. கேள்வி எழுப்பியிருந்தார். பாட சாலை பாடத் திட்டத்தில் பாலியல் கல்வியை உள்ளடக்க திட்டமிடப்படவில்லை.

ஆனால், சுகாதாரம், விஞ்ஞான பாடத்திட்ட விதந்துரைகளில் பாலியல் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதுவரை எந்த தரத்திலும் பாலியல் கல்வியை உள்ளடக்குவது குறித்து திட்டமிடப்படவில்லை எனவும் அந்த பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2)

# உயர்தரத்தில் ஏ சித்திகளை பெறும் மாணவர்கள் குறித்து கவனம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் ஏ சித்திகளுடன் சித்தியடையடைந்தும், மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமை தொடர்பில் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு கவனம செலுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஷனிகா ஹிரிம்புரகமகே தெரிவித்தார்.

வர்த்தக பிரிவில் உயர்கல்வி கற்ற பெரும்பாலான மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்கான அனுமதி கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கு இசட் புள்ளிகள் மிகவும் அவசியம் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார். (அ-2)

# யுத்த சேத கணக்கெடுப்பு அதிகாரிகளுக்கு செயலமர்வு

யுத்த காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் சேத விபரங்கள் குறித்த கணக்கெடுப்பை மேற்கொள்ளவுள்ள அதிகாரிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வுகள் பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்படவுள்ளது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய இந்த கணக்கெடுப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த கணக்கெடுப்பிற்காக பிரதேச செயலாளர்கள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு பெறப்படுகிறது.

இத்றகமைய அவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயலமர்வு கள் ஏற்கனவே அநேகமான பிரதேச செயலகங்களில் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சபையை மலினப்படுத்துவதே தமிழ்க் கூட்டமைப்பின் செயல்

*இப்படிக் கூறுகிறார் கெஹலிய*

பாராளுமன்றத்தை மலினப்படுத்துவதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தொடர்ச்சியான செயல். இதன் ஒரு நடவடிக்கையாகவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அக்கட்சி நிராகரித்து வருகிறது என தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சிறுபான்மையினருக்கு பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்குச் சுதந்திரமில்லை என்று கூறும் சம்பந்தன் எம்.பி. அந்தக் கூற்றை எங்கிருந்து கொண்டு வெளியிட்டார் என கேட்க விரும்புகிறேன்.

பாராளுமன்றத்திலிருந்து கொண்டே இக்கூற்றை வெளியிடும் அவரின் ஏனைய கூற்றுக்களும் ஏற்கக் கூடியதல்ல என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. இரா. சம்பந்தன் பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தேசிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்பது நம்பிக்கையற்றது என்றும் அக்குழு காலத்தைக் கடத்தும் செயல் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, பாராளுமன்றம் என்பது உயர் கௌரவம் மிக்கதும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தமான இடம் என்பதுமே அரசாங்கத்தின் நம்பிக்கை. அந்த வகையிலேயே பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எக்காலத்திலும் உயர் கௌரவம் மிக்க பாராளுமன்றத்தை மலினப்படுத்தும் வகையிலேயே செயற்பட்டு வந்துள்ளனர். அதன் ஒரு அம்சமாகவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அவர்கள் நிராகரித்து அக்குழுவிற்கு சமுகம் தருவதை தவிர்த்து வருகின்றனர் எனச் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

# வடமாகாணத்தில் சீரான நிர்வாகத்துக்கு இந்தியாவின் உதவி மிக அவசியம்

(கொழும்பு)

**இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளாமை குறித்து இலங்கை மக்கள் மிகவும் ஏமாற்றம் அடைந்திருந்த போதிலும் இலங்கை அரசியல் தலைவர்களுக்கு ஒரு ஜனநாயக நாட்டில் அரசியல்வாதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் நன்கு தெரிந்திருந்த காரணத்தினால் இந்தியப் பிரதமர் வராதமை குறித்து அந்தளவுக்கு ஏமாற்றம் அடையவில்லை என்று புதுடில்லியிலுள்ள இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.**

அவர் எக்கொனமிக் டைம்ஸ் என்ற இந்தியப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் இரு நாடுகளும் தேசிய தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் பொருளாதார தேவைகளை உள்ளடக்கக்கூடிய வகையில் அரசியல் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் நடைமுறைப்படுத்துகின்றன. இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா உட்பட எங்கள் நட்பு நாடுகளின் நலனுக்கு தீங்கிழைக்கும் நோக்கம் எதுவுமில்லை.

நாம் இந்து சமுத்திர பிராந்தியத்தின் ஒருமைப்பாட்டுக்காகவே பாடுபடுகின்றோம். தமிழ்நாடு சட்டசபையில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை குறித்து நாம் மன வேதனைப்படுகிறோம்.

இந்து சமுத்திர பிராந்தியத்தை பயங்கரவாதம், பிரிவினைவாதம் ஆகியவற்றின் அழிவுகளிலிருந்து காப்பாற்றி அச்சுறுத்தல்கள் அற்ற அமைதியான பிரதேசமாக உருவாக்குவதே இலங்கையின் நோக்கமாகும்.

இலங்கையில் தற்போது வடபகுதியில் ஜனநாயகம் தழைத்தோங்குகிறது வடமாகாணத்தில் சீரான நிர்வாகத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எங்களுக்கு நட்பு நாடான இந்தியாவினதும், தமிழ் நாட்டினதும் ஆதரவு அவசியம் என்று கூறினார். (அ-2)


காரைநகர்- ஈழத்துச் சிதம்பரம் (திண்ணபுரம் சிவன்கோயில்)
மாணிக்கவாசக சுவாமிகள் மடாலயத்துடன்
இணைந்த புதிய அருளெழுச்சி கொண்ட
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் மண்டபம்
மங்கலகரமான திறப்பு விழா
01.12.2013

*மாணிக்கவாசக சுவாமிகள் மடாலயத்துடன் இணைந்த புதிய அருளெழுச்சி கொண்ட ஸ்ரீமனோன்மணி அம்பாள் மண்டபம் மங்கலகரமான திறப்பு விழா - 01.12.2013 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 7 மணி முதல்*

மார்கழி திருவாதிரை, ஆருத்திரா தரிசனத்தைப் பெறவும், திருவெம்பாவைக்கால திருவருட்பெரு க்கில் மூழ்கவும் மற்றும் திருவிழாக்காலங்களிலும் சிதம்பரம் நாடும் அடியார் திருக்கூட்டம் ஆறு தல் பெறவும் அவர்கள் மகேஸ்வர பூசையிற் கலந்து கொள்ளவும் *ஈழத்துச் சிதம்பரத் திருவுளத் தான்* திரு. சண்முகன் சிவஞான்ம் அவர்களது முழுமையான உபயம் அருளெழுச்சி கொண்ட ஸ்ரீமனோன்மணி அம்பாள் மண்டபம் மங்கலதீப, திருக்குட, மலர்க்குவை அலங்காரத்துடன் மூதறிஞர், கலாநிதி க.வைத்தீஸ்வரக்குருக்கள் அருளாசியுடன் திறந்து வைக்கப்படும்.

திறப்புவிழா நிகழ்வுகள்

| | |
|---|---|
| மங்கல விளக்கேற்றல்:- | ஆதீனகர்த்தாக்கள் சிவத்திரு ஆ. அம்பலவிமுருகன் சிவத்திரு. மு.சுந்தரலிங்கம் |
| திருமுறை ஓதல்:- | சிவத்திரு. மு.சுந்தரலிங்கம் (கோயில் ஆதீனகர்த்தா) |
| திரைநீக்கம்:- | திரு. திருமதி சண்முகம் சிவஞானம் |
| வரவேற்பு நடனம்:- | காரைநகர், ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய மாணவிகள் |
| வரவேற்புரை:- | உயர்திரு. க.சோமசேகரம் (அறங்காவலர், ஐயனார் தேவஸ்தானம், காரைநகர், அன்னதான மடாலய உபதலைவர்) |
| தலைமையுரை:- | லயன் (E.S.P. நாகரத்தினம் (PM.J.F) (தலைவர், மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை) |
| ஆசியுரை:- | நல்லூர் ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஸ்ரீவேத வித்யாசாகரர் சுவாமிகள் (8 ஆவது குருபீடாதிபதி, ஸ்ரீ சிவகுருநாத குருபீடம், வேதாந்தமடம்) கோயில் பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ வி.ஈஸ்வரக்குருக்கள் தொண்டைமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரமம் ஸ்ரீலஸ்ரீ மோகனதாஸ் சுவாமிகள் |
| சிறப்புப்பேருரை:- | செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர், சிவபூமி அறக்கட்டளை, ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை) பொருள்: "தானத்தில் சிறந்தது அன்னதானம்" சிவத்திரு.ந.விஜயசுந்தரம் (வலம்புரி பிரதம ஆசிரியர்) பொருள்:-" ஈழத்து மடாலயங்கள்" |
| பாராட்டு வைபவமும் அறக்கொடைச் செம்மல் விருது வழங்கலும் | திரு.திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதி |

கலை நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ✸ மிருதங்க இசை:- | காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் |
| ✸ குழு இசை:- | காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவிகள் |
| ✸ கரகம்:- | பாலர் பூங்கா (Kids Park) |
| ✸ நாட்டிய நாடகம்:- | பத்மாசுரன் மோகினி (யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்கள்) |
| ✸ நன்றியுரை:- | திரு. அ.நா.பாலகிருஷ்ணன் (செயலாளர், மாணிக்கவாசகர், மடாலயம்) |
| ✸ நிகழ்ச்சித் தொகுப்பு:- | சமூகத்திலகம். திரு. க.கு.க.சிவபாலன் (அடியார்க்கு அமுதூட்டும் அண்ணலார்) |
| ✸ திருமுறை ஓதல் | |
| ✸ விழா நிறைவு | |

ஐம்பொன்னால் உருவான திரு அவதாரத் தெய்வமாம் சிவமைந்தர்கள் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு சிறப்புப்பூசை வழிபாடுகள் நடைபெற்று மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும்.

காரைநகர் செல்லும் அனைத்து தனியார் பேருந்துகள் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் கோயில் செல்லும்

ஆதீனகர்த்தாக்கள்
சிவத்திரு. ஆ.அம்பலவிமுருகன்
சிவத்திரு. மு.சுந்தரலிங்கம்

மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை.

(4608)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் உலகம் - திரை விமர்சனம்




தமிழ் சினிமா அடுத்த கட்டத்திற்குத் தயாராகிவிட்டது என்பதற்கு 'இரண்டாம் உலகம்' படம் ஒரு முன்னுதாரணம். காலங்காலமாக தமிழ் சினிமாவில் காதலை எத்தனையோ வழிகளில் காட்டியாகிவிட்டது இனி புதுமையாக இன்னொரு உலகிற்கு சென்று காட்டுவோம் என்ற கற்பனையில் இப்படத்தை இயக்கியுள்ளார் செல்வராகவன்.

ஆனால் அவரது சிந்தனையைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு ரசிகர்கள் இரண்டாம் உலகத்தை அடையத் தயாராகிவிட்டார்களா என்பது தான் கேள்விக்குறியாக உள்ளது.

வித்தியாசமான கதை வேண்டும், புதுமை வேண்டும் என்று தமிழ் சினிமா இயக்குநர்களைப் பார்த்து புலம்பித் தீர்த்த ரசிகர்களுக்காகவே "இதோ இது தான் எனது படைப்பு" இது பிடிக்குதா என்று பாருங்கள்" என்று 'ஆயிரத்தில் ஒருவன்' கொடுத்த அதே திமிரோடும், தைரியத்தோடும் 'இரண்டாம் உலகம்' கொடுத்துள்ள செல்வராகவனை நிச்சயம் பாராட்ட வேண்டும்.

அதே நேரத்தில், தனது வித்தியாசமான சிந்தனைகளை படமாக்கும்போது ரசிகர்களுக்கு அதை புரியவைப்பதிலும் செல்வராகவன் அக்கறை காட்ட வேண்டும்.

அந்த வகையில், வித்தியாசமான கதை வேண்டி அலையும் சினிமா ரசிகர்களுக்கு 'இரண்டாம் உலகம்' நிச்சயம் நல்ல விருந்து.

**கதைச் சுருக்கம்**

இரண்டு உலகம் இரண்டு கதைகள் இரண்டிலும் காதல்

முதல் உலகத்தில் தொடங்கும் கதையில, ஆர்யாவும், அனுஷ்காவும் சண்டையிட்டு பின் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு காதலிக்கத் தொடங்கும் சமயம் அனுஷ்கா இறந்து போகிறார்.

வழக்கமாக காதலி இறந்து போனவுடன் காதலனும் தற்கொலை செய்து கொள்வான் அல்லது பைத்தியமாக அலைவான். இது தான் வழக்கமாகத் தமிழ் சினிமா சொல்லும் பாணி. அதை சற்றே மாற்றி, கதை அவனை வேறு உலகத்திற்கு கொண்டு சென்றால் என்ன ஆகும்?

இன்னும் காதலே பிறக்காத அந்த உலகத்தில் இவனால் காதல் பிறந்தால் என்ன நடக்கும்?அது தான் 'இரண்டாம் உலகம்' படத்தின் கதை

என்ன குழப்பமாக இருக்கிறதா? கவலையே வேண்டாம்! படம் பார்த்த நிறைய பேர்.என்ன கதை? என்று இன்னும் குழம்பிக்கொண்டு தான் இருக்கிறார்கள்.

**தொழில்நுட்பம்**

முக்கால்வாசி படமும் கிராபிக்ஸ் தொழில் நுட்பம் கொண்டு தான் உருவாக்கப்பட்டுள்ளது. செயற்கையாகத் தெரியாமல் வண்ணமயமாக ஒரு புது உலகத்திற்கு சென்று பார்த்த அனுபவத்தைக் கொடுக்கிறது. குறிப்பாக அவ்வப்போது வித்தியாசமான பறவைகள் வானத்தில் பறந்து கொண்டிருப்பது போலவும், வேறு கிரகங்கள் மிக அருகே இருப்பது போலவும் காட்டியிருப்பது சிறப்பு.

ஆர்யா சிங்கத்துடன் சண்டையிடுவது போல் காட்டியிருக்கும் காட்சியிலும், அனுஷ்கா மிருகத்துடன் சண்டையிடும் காட்சியிலும் அது 'கிராபிக்ஸ்' என்று தெரிவதால் நமக்கு பிரமிப்பு குறைகிறது.


மற்றபடி, பனிப்பொழிவு. பூக்கள் மலர்வது போன்ற கிராபிக்ஸ் காட்சிகள் நிச்சயம் ரசிகர்களை ஈர்க்கும் என்பதில் சந்தேகமில்லை.

**நடிப்பு**

அனுஷ்காவிற்கு 32 வயதாகிவிட்டது என்பதை அவரது முதிர்ச்சியான முகமும், உடலும் மேக்கப்பையும் மீறி காட்டிக்கொடுக்கிறது.

தோழிகளுடன் ஒன்றாக நிற்கும் காட்சிகளில் அனுஷ்காவிற்கு முன்னாள் அவர்கள் அனைவரும் கோழிக் குஞ்சுகள் போல் தெரிகிறார்கள்.

எங்கே நமீதா போல் அனுஷ்காவும் ஆகிவிடுவாரோ என்று அவரது ரசிகர்கள் கவலைப் படப் போவது நிச்சயம். ஆனாலும் இரண்டாம்



உலகத்தில் 'வர்ணா' கதாப்பாத்திரத்தில் வாழ்கிறார்.

ஆர்யா தனது வழக்கமான, கலகலப்பான அப்பாவி நடிப்பை சிறப்பாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆனாலும் இயக்குநரின் சொல் பேச்சை மீறாத செல்லப்பிள்ளையாக ஆர்யா இருப்பதால், அவருக்கும் ஒரு சோடாபுட்டி கண்ணாடியை மாட்டிவிட்டு, காதல் கொண்டேன் தனுஷையும், 7G ரெயின்போ காலனி ரவிகிருஷ்ணாவையும் அவ்வப்போது நினைவுபடுத்துகிறார் செல்வா.

ஆர்யா, அனுஷ்காவைத் தவிர சொல்லிக் கொள்ளும் படியாக நடிகர்கள் இல்லை. ஆர்யாவின் தந்தை கதாப்பாத்திரம, கடவுளாகக் கருதப்படும் வெள்ளைக்காரப் பெண், அனுஷ்காவின தோழி ஆகியோர் சிறப்பாக நடித்திருக்கிறார்கள்.

**இசை**

இரண்டாம் உலகம் படத்தின் பாடல்களுக்கு ஹாரிஸ் ஜெயராஜின், பின்னணிக்கு அனிருத்தும் இசையமைத்திருக்கிறார்கள். 'என் காதல் தீ', 'மன்னவனே', விண்ணைத் தாண்டி போன்ற பாடல்கள் மனதில் நிற்கின்றன. பாடல்கள் அனைத்தும் தனியாகத் தெரியாமல் கதையோடு சேர்ந்து வருகின்றன.

**படத்தில் நம்மை ஈர்ப்பவை**


"இந்த உலகம் காதலுக்காக மட்டும் தான் அசைந்து கொடுக்கும்- நீ உண்மையா காதலிச்சா அவளை நீஙக வேணாலும், எப்ப வேணாலும் பாக்கலாம்" வசனம்

"நான் யாருக்கும் அடிமையா இருக்க மாட்டேன்" என்று கூறி கணவனுக்காக கண்கள் கலங்கும் இடங்களில் அனுஷ்காவின் நடிப்பு

அப்பாவியாக அனுஷ்காவிடம் கெஞ்சுவதாக இருக்கட்டும், மல்யுத்த வீரன் போல் கட்டுடலோடு சண்டையிடும் இடங்களாகட்டும் ஆர்யா மிரட்டல் வசனங்கள் எதுவும் இல்லையென்றாலும், அமைதியான முகத்துடன் கடவுளாகவே தெரியும் வெள்ளைக்காரப் பெண் "மச்சான் கிடைச்ச வாய்ப்பை விட்டுட்டியேடா எனக்கு ஏதாவது வாய்ப்பு இருக்குமா?" பதற்றத்துடன்கேட்கும் ஆர்யாவின் நண்பர்

மொத்தத்தில் 'இரண்டாம் உலகம்' வித்தியாசமான சினிமாவிற்கு ஒரு 'மைல் கல்' ஆனால ரசிகர்கள் தான் அதை அனுபவிக்கத் தயாராக வேண்டும்.

# மீண்டும் வருகின்றார் பவர் ஸ்டார்



ஒரே ஒரு படத்தின் மூலம் புகழ் உச்சிக் சென்று கோடம் பாக்கத்தில் பரபரப்பு ஏற்படுத்திய பவர் ஸ்டார், பண மோசடியில் சிக்கி டில்லி சிறையில் அடைபட்டு தற்போது ஜாமீனில் வெளியே வந்துள்ளார்.

தற்போது, அவர சிறை செல்லும்போது விடுபட்ட படங்களின் பேலன்சை முடித்துக் கொடுத்திருக்கும் பவர் ஸ்டாரை மீண்டும் சிறையில் தள்ளியிருக்கிறார் இயக்குநர் ஜோ. இவர் இசையமைப்பாளர் இளையராஜாவின் அண்ணன் பாவலர் வரதராஜனின் மகன் ஆவார்.

இவர் எதற்காக பவர் ஸ்டாரை சிறைக்கு அனுப்பினார்? என்று யோசிக்க வேண்டாம் இவர் தற்போது "நாலு பேரும் ரொம்ப நல்ல வங்க" என்ற படத்தை இயக்கிக் கொண்டி ருக்கிறார்.

இப்படத்தில் பவர் ஸ்டார் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். கதைப்படி, பவர் ஸ்டார், ஒரு குடும்பத்திடம் பணத்தை வாங்கிக் கொண்டு திருப்பி தராத வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கிறாராம்.

இவ்வாறு தில்லுமுல்லு செய்யும் பவர் ஸ்டாரை அந்தமான் சிறையில் அடைக்கிறார்கள்.

இந்த காட்சிக்காக பவர் ஸ்டாரை அந்த மானுக்கு அழைத்துச் சென்ற இயக்குநர் அங்குள்ள செல்லுலார் சிறையில் அவரை அடைத்து காட்சியை படமாக்கியுள்ளார்.

# அமலாபாலின் அதிரடி



மீண்டும் குஜாலா கதைகளில் நடிக்கமாட்டேன் என்று தீவிரமாக உள்ளாராம் அமலா பால்.

சாமியின் இயக்கத்தில் சிந்துசமவெளி படத்தில் படுகவர்ச்சியாக நடித்து ரசிகர்களை கிரங்கடித்தார் அமலாபால்.

ஆனால் அதற்கு பின்னர் விக்ரம், விஜய் என முன்னணி ஹீரோக்களுடன் நடித்து மேல்தட்டு நாயகியாகி விட்ட அவர் கவர்ச்சி விடயத்தில் அடக்கியே வாசித்து வருகிறார்.

இந்நேரத்தில் ஒரு புதுமுக இயக்குநர், சந்தர்ப்ப சூழ் நிலையில் செக்சுக்கு அடிமை யாகும் ஒரு குடும்பப் பெண்ணைப்பற்றிய கதையை ரெடி பண்ணிக்கொண்டு அமலாபாலிடம் சொன்னாராம்.

ஆனால், சிந்துசமவெளியில் அப்படியொரு வேடத்தில் நடித்ததற்காக இப்போது வரை வெட்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

அதற்கான பிராயசித்தமாகத்தான் கவர்ச்சிகரமான வேடங்களைகூட தவிர்த்து வருகிறேன்.

இந்நிலையில் மீண்டும் அப்படியொரு சேற்றை வாரி என் மீது இறைத்துக்கொள்ள நான் தயாராக இல்லை என்று அந்த இயக்குநரிடம் கூறி விரட்டியடித்து விட்டாராம்.

இருப்பினும், அந்த கதையில் நீங்கள் நடித்தால் தான் பொருத்தமாக இருக்கும். அதோடு விருதுகூட கிடைக்க வாய்ப்பிருக் கிறது என்று சொல்லிக்கொண்டு அமலா பாலை விடாமல் துரத்திக்கொண்டு திரிகிறாராம் புதுமுக இயக்குநர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிகள் இல்லாத நிலையில் தமிழ் மக்கள் பாரிய இன்னல்களை அனுபவிக்கின்றனர்

## சம்பந்தன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

**விடுதலைப்புலிகள் இல்லாத இக்கால கட்டத்தில் தமிழ் மக்கள் பாரதூரமான இன்னல்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்கி வருகின்றனர். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித அவலங்கள், பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி ஊடகம் தனது கடமையை நேர்மையாக நிறைவேற்றியிருக்கின்றது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் திருமலை.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.**

பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கென அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நம்பிக்கை கிடையாது என்பதால் அதில் இணைவதற்கு தயாரில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அழிவுடன் நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டு விடும் என்று அரசாங்கத்தினால் நம்பப்பட்டது. விடுதலைப் புலிகளின் தோற்றமானது தவிர்க்க முடியாததும் நியாயப்படுத்தக் கூடியதுமாகவே அமைந்திருந்தது.

புலிகள் அமைப்பை பொறுத்த வரையில் அந்த அமைப்பானது முரண்பாடுகளுக்கு காரணமாக அமைந்திருப்பதாகவும் அதே நேரம் இலங்கையில் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியிலான தீர்வொன்று அவசியப்பட்டிருப்பதும் உணர்த்தப்பட்டது.

இன்றைய இலங்கையைப் பொறுத்தவரையில் பொறுப்புக் கூறுதல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய இரு விடயங்களை தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கின்றன. பொறுப்புக்கூறுதலில் உண்மைத் தன்மை வெளிககாட்டப்படாத பட்சத்தில் நல்லிணக்கம் என்பது ஏற்படப் போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இருந்த காலத்தை விட புலிகள் அமைப்பு இல்லாத இக்கால கட்டத்திலேயே தமிழ் மக்கள் பாரிய கஷ்டங்களையும் இன்னல் களையும் அனுபவித்து வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் மீது எதனையும் பிரயோகிக்க முடியும் என்பதும் எதுவென்றாலும் தமிழர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்பதுமே இன்றைய அரசாங்கத்தின் மனோநிலையாக இருந்து வருகின்றது. இன்றைய நிலைமை போன்று புலிகள் இருந்த காலக்கட்டத்தில் இருக்கவில்லை என்பதை இங்கு மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

தமிழ் மக்களை இந்நாட்டில் சம பிரஜைகளாக வாழ வைப்பதை விடுத்து அவர்களுக்கு இன்னல் களையும் இடையூறுகளையும் ஏற்படுத்தி அவர்களாகவே நாட்டைவிட்டு வெளியேறிச் செல்லும் நிலை ஒன்று உருவாக்கப்படுகின்றது.

நல்லிணக்கம் குறித்து அரசு தான் அதிகமாக பேசிக் கொண்டிருக்கின்றது. எனினும், இந்து, கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் மதத் தலங்கள் எத்தனை எததனை அழிக்கப்பட்டுள்ளன, சேதமாக்கப் பட்டுள்ளன என்பது குறித்து இங்கு சிந்திக்க வேண்டும். இந்த குற்றச் செயல்கள் தொடர்பில் நேர்மையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? குற்றவாளிகள் இனங் காணப் பட்டுள்ளனரா? என்பது கேளவியே.

அதேபோன்று எதேச் சதிகாரப் போக்கில் செயற்பட்டு வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகள் இராணுவத்தினரின் தேவைகளுக்காகவும் வேறு நோக்கங்களுக்காகவும் கையகப்படுத்தப்படுகின்றன.

இறுதிக்கட்ட யுத்தத்தில் இடம் பெற்ற அழிவுகள்,பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் பிரிட்டனின் சனல்4 தொலைக் காட்சி ஊடகம் ஆவணப்படமாக வெளியிட்டிருந்தது. இத்தகைய மனித உரிமை மீறல்களை அர சாங்கம் மறுத்திருக கின்ற போதி லும் சனல் 4 இன் சட்டபூர்வமான இந்த முன்னெடுப் புக்களை சர்வதேசம் ஏற்றுக்கொண் டுள்ளது. எம்மைப் பொறுத்தவரை சனல்4 ஊடகம் தனது கடமையை சரிவர நிறைவேற்றியிருக்கின்றது என்பதை நம்புகின்றோம்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது வன்னிப் பரப்புக்குள் நான்கு இலட்சம் மக்கள் சிக்குண்டிருப்பதாக நாம் கூறியிருந்தோம். இருந்தும் திட்டமிடப்பட்ட வகையில் அங்கிருந்த மக்களின் எண்ணிக்கை அரசாங்கத்தினால் குறைத்துக் கூறப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை தனது பணிகளை சரியான முறையில் நிறைவேற்றியிருந்தால் இத்தகைய மனித அவல பிரச்சினை இடம் பெற்றிருக்க வாய்ப்பிருந்திருக்காது. இதனடிப்படையில்தான் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது சர்வதேச சமூகம் சரியான முடிவுகளை எடுப்பதற்கு தவறியிருந்ததாக ஐ.நா. செயலர் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்கும் அதேவேளை தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளையும் பறிப்பதுதான் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாக விருக்கின்றதா எனக் கேட்க விரும்புகின்றேன்.

இறுதிக்கட்ட யுத்தத்தில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர் என்ற உண்மையை மூடி மறைப்பதற்காகவே முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களை சந்திப்பதற்கான அனுமதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சிவில் அமைப்புக்களுக்கும் ஊடகங்களுக்கும் மறுக்கப்பட்டிருந்தது. இடம்பெற்ற குற்றச்செயல்களை மூடி மறைக்க முடியாது. இது பாரதூரமான விடயமாகும்.


நாம் அரசாங்கத்துடன் 18 சுற்றுக்களைக் கொண்ட பேச்சுவார்த்தை யிலும் பங்கேற்றிருந்தோம். பிரிக்கப்படாத இலங்கைக்குள் நிரந்தரமானதும் தமிழ் மக்களால் எற்றுக் கொள்ளக்கூடியதுமான தீர்வொன்றுக்கான வரைபையும் நாம் எழுத்து வடிவில் சமர்ப்பித்திருந்தோம்.

எமது நிலைப்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்க முடியும்.

ஆயினும் இது தொடர்பில் ஆராய்வதற்கு பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டது. அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவானது அரசின கூட்டணிக் கட்சிகளை சார்ந்தது என்றபடியால் அதில் எமக்கு நம்பிக்கை கிடையாது.

மேலும், அரசியல் தீர்வொன்றை வழங்கும் நோக்கில் இக்குழு அமைக்கப்பட்டிருக் கவில்லை என்பதால் தெரிவுக் குழுவில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு இணைந்து கொள்வதற்கு தயார் இல்லை என்றார். (அ-2)





வடமராட்சி கிழக்கு அம்மன் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-தும்பளைச் செய்தியாளர்)

## எமது பிரச்சினைகளை நாமே பேசித் தீர்ப்போம் வாரீர்!

### தமிழ்க் கூட்டமைப்புக்கு பசில் அழைப்பு

(கொழும்பு)

எமது உள்ளூர் பிரச்சினைகளை நாங்களே பேசித் தீர்த்துக் கொள்வோம், எமது உள்நாட்டு பிரச்சினைகளை எம்மால் மாத்திரமே தீர்த்துக் கொள்ள முடியும். இதற்காக நான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கின்றேன் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்திற்கு நேற்றுமுன்தினம் பதிலளித்து உரையாற்றிய போதே அமைச்சர் பசில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் உரையாற்றுகையில்,

தமது எதிரியான பிரபாகரனை எம்மூலம் அழிக்க வேண்டும் என்ற நோக்குடனே சில சர்வதேச நாடுகள் இருந்தனவே தவிர, பொது மக்கள் குறித்து அவர்களுக்கு எந்த கரிசனைகளும் இருக்கவில்லை. வட மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் உட்பட பலர் வடக்கிற்கு செல்ல ஆரம்பத்தில் அச்சம் கொண்டிருந்தனர். இன்று பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் போன்றவர்கள் கூட எவ்வித அச்சமின்றி வடக்கிற்கு சென்று வரும் நிலைமையை நாம் ஏற்படுத்தியுள்ளோம்.

அதேபோன்று சகல தரப்பினரும் அச்சமின்றி பங்கு கொள்ளும் வகையில் முதற் தடவையாக ஜனநாயக ரீதியில் தேர்தல் வடக்கில் இம்முறையே நடந்து முடிந்தது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வடபகுதி மக்களின் நலன் கருதி பாரிய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கின் அபிவிருத்திக்கும் செயற்பாடுகளுக்கும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கும் படை வீரர்களின் ஒத்துழைப்பு பாராட்டுக்குரியது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## மரதன் ஓட்டத்தின் வெற்றியாளர்கள்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை பிரதேச சபையால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் விபரம் வருமாறு:

**ஆண்கள் பிரிவு**

சி.ஞானேஸ்வரன்(கரம்பன் மேற்கு), யே.ஜெவீந்திரன்(எழுவை தீவு), அ.ரூபன்ஜுவனந்தன்(கரம்பன் மேற்கு).

**பெண்கள் பிரிவு**

ய.மரியகுறட்ரி(எழுவைதீவு), யே.அன்ரனிக்கா(எழுவை தீவு), க.கிருஷா(கரம்பன் கிழக்கு). (அ-2)

## கடந்த மூன்று மாதங்களில் 69 எயிட்ஸ் நோயாளர்கள்

### இனங்காணப்பட்டனர்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது ஆயிரத்து 808 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் இலங்கையில் 69 எயிட்ஸ் நோயாளர்கள் இனங்காணபபட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 159 பேருக்கு எயிட்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

5 இரத்த மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் இவ்விடயம் உறுதியானதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது ஆயிரத்து808 எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பதாகவும் இதில் தாயிடம் இருந்து எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளான 70 பேரும் அடங்குகின்றனர்.

இலங்கையில் முதல் முறையாக 1989ஆம் ஆண்டே எயிட்ஸ் நோயாளர் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இதுவரை எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு 337 பேர் உயிரிழந் துள்ளதாகவும் அவ்வமைச்சு தெரிவித்துளளது.

எயிட்ஸ் தொற்றுள்ளவர்களில் 60 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். அதில் 52 வீதமானவர்கள் கொழும்பு மாவட்டத்திலுள்ளனர்.

பாதுகாப்பற்ற பாலியல் உறவுகளால் 95 சதவீதமானவர்களுக்கும் தாயின் ஊடாக 4 சதவீதமானவர்களுக்கும் எயிட்ஸ் நோய் தொற்றியுள்ளதாக சுகாதார அமைச்சு கண்டுபிடித்துள்ளது. (அ-2)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரர் தினம் முடிவுற்றும் இராணுவத்தின் கெடுபிடிகள் இன்னும் குறையவில்லை

## பொதுமக்கள் சிறிதரனிடம் முறைப்பாடு

(கிளிநொச்சி)

**மாவீரர் தினம் முடிவுற்றும் இராணுவத்தின் கெடுபிடிகள் கிளிநொச்சியில் ஓயவில்லை என அம்மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.**



இராணுவத்தின் அந்த கெடுபிடிகள் தொடர்பில் பொது மக்களினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாரளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனிடம் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதி மாவீரர் தினமாக தமிழீழ விடுதலைப்புலிகள் பிரகடனப்படுத்தியிருந்தனர்.

இம்மாவீரர் வாரத்தில் யாழ்ப்பாணத்தினை விட கிளிநொச்சி மாவட்டத்திலேயே இராணுவத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன.

மாவீரர் வார காலப்பகுதியில் வீதிகளில் [illegible] போட்டும், மாவீரர் துயிலுமில்லங்களில் படையினரை நிறுத்தியும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

திடீர் படைகுவிப்பினால் கிளிநொச்சியில் கடந்த வாரம் முழுவதும் பதற்றமாகவே கழிந்தன. மாவீரர் வாரத்தில் காணப்பட்ட அப்பதற்ற நிலை தற்போதும் காணப்படுகின்றது என அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் மாவீரர் வாரத்தின் போது படையினரின் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்ட போதிலும் ஆங்காங்கே மாவீரர்களிற்கான அஞ்சலிகளும் ஈகைச் சுடரேற்றங்களும் இடம் பெற்றுத்தான் இருந்தன.

இதற்கு முன்னதாக கிளிநொச்சியிலு ள்ள ஆலயங்களில் மாவீரர் தினத்தன்று மணி அடிக்கவும் விளக்கேற்றுவதற்கும் படையினர் தடை விதித்துள்ளனர்.

இக்கட்டுப்பாட்டினையும் மீறி செயற்பட்டவர்கள் புலனாய்வுப் பிரிவினரின் விசாரணைக்குட்பட்டுள்ளதோடு சிலர் இன்னமும் இராணுவத்தினரால் தேடப்பட்டும் வருகின்றனர். இராணுவ கெடுபிடிகள் தொடர்வதனால் ஒரு சிலர் தலைமறைவாகியும் உள்ளனர்.

மாவீரர் தினமன்று விளக்கேற்றிய பூசகர்கள் கூட பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு மாவீரர் வாரத்தின் போது காணப்பட்ட பதற்றநிலை கூட இன்னமும் தணியவில்லை.

கிளிநொச்சியின் ஆங்காங்கே உள்ள பல இடங்களில் இன்னமும் இராணுவத்தினர் நிலை கொண்டுதான் உள்ளனர்.

இதனால் இங்குள்ள மக்களிடத்தே ஒருவித பயப்பீதி இயல்பாகவே ஏற்படுத்தப் படுகின்றது.

மக்களினை அடக்குமுறைக்குள் வாழ்வதற்கு இயைபட வைக்கும் செயலா? இது என கூட எண்ணத் தோன்றுகின்றது.

யுத்தத்தில் அழிவுகளை எதிர்நோக்கிய மக்களினை அவர்கள் தமது உறவுகளினை நினைவு கூரியதனை ஒரு குற்றமாக கொண்டு அவர்களினை மீண்டும் அடக்க முயல்வது சரியானதா?

தற்போது கிளிநொச்சியில் எவ்வித பதற்றமும் இல்லாத நிலையில் தேவையற்ற இராணுவப்பிரசன்னமும் தேவையில்லை . ஆகவே மக்களினை பயப்பீதியில் ஆழ்த்தாமல் இராணுவம் தமது முகாம்களிற்குள் முடங்க வேண்டும்.

இவ் இராணுவ கெடுபிடிகள் தொடர்பில் என்னிடமும் பொதுமக்களினால் முறையிடப்பட்டுள்ளன என்றார் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன். (ம-4)

# பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும்

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையின் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாதம் 2013 பரிசளிப்பு விழாவும் பூங்கதிர் சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை 10.30 மணியளவில் பிரதேச சபைத் தலைவர் பொ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரனும் சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்டக் கல்வி அலுவலர், பூநகரி தபால் நிலைய அதிபர் இ.இந்திரமோகன் உட்பட பல பாடசாலை அதிபர்கள் கலந்து கொள்ள உள்ளதாகவும் அன்று வெளியிடப்படும் பூங்கதிர் சஞ்சிகையின் மதிப்பீட்டுரையை ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் பொன். தில்லைநாதன் நிகழ்த்தவுள்ளாரெனவும் பூநகரி பொது நூலகர் ம.பிரபாகரன் தெரிவித்துள்ளார். (ம-84)




வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# கேப்பாபிலவு அ.த.க.பாடசாலை நிரந்தர கட்டடத்தில் உதயம்



(முல்லைத்தீவு)

FRIDSRO நிறுவனத்தின் 6 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டடத்தில் கேப்பாபிலவு அ.த.க.பாடசாலை இயங்க ஆரம்பித்துள்ளது.

யுத்தத்தால் இயங்காதிருந்த இப்பாடசாலை கடந்த 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்துடன் ஆரம்பமாகி கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதிவரை சீனியாமோட்டை மாதிரி கிராமத்தில் உள்ள மரநிழலில் இயங்கியது.

பின்னர் 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதிவரை சீனியாமோட்டை மாதிரி கிராம முன்பள்ளி கூடாரத்தில் இயங்கி கடந்த நவம்பர் மாதம் 28 ஆம் திகதி முதல் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையுள்ள இப்பாடசாலையில் 81 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

முல்லை.மாவட்ட இராணுவ கட்டளை தளபதி எல்.பி.ஆர். மார்க்கின் நெறிப்படுத்தலில் 592 ஆவது படைப்பிரிவினரின் உதவியுடன் இப்பாடசாலை நிர்மாணிக்கப்பட்டு FRIDSRO நிறுவனத்தின் இலங்கைத் தலைவர் ஜெக்பெரேராவால் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை கையளிக்கும் நிகழ் வில் 592 ஆவது படைப்பிரிவின் இராணுவத் தளபதி கேணல் செனவிரட்ண, முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் மா.இராஜகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-267)

# கரைதுறைப்பற்று பி.செ.பிரிவில் 50 குடும்பங்களுக்கு வீடுகள்

## முதற்கட்டமாக 23 வீடுகள் அமைக்கப்பட்டன


முல்லை. மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தாலும் சுனாமி அனர்த்தங்களாலும் தங்கள் வாழ்விடங்களை இழந்தும் காலங்காலமாக நிரந்தர வீடுகள் அற்று வாழ்ந்த குடும்பங்களுக்கும் பொருளாதாரத்தில் பின்னடைவுள்ள குடும்பங்களுக்கும் மேலும் பல தரப்பட்ட உளப் பாதிப்புக்குட்பட்ட முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் உதவியுடன் இனங்காணப்பட்ட 50 குடும்பங்களுக்கு வீடுகள் நிர்மாணித்து கொடுக்கப்படவுள்ளன.

இவ்வீடுகள் LEBERA FOUNDATION நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்.மாகாண அமலமரித்தியாகிகளால் நிர்மாணித்துக் கொடுக்கப்படவுள்ளது.

இதில் செல்வபுரம் கிராமத்தில் ஒன்று, கோவிற்குடியிருப்பு கிராமத்தில் 13, மணற்குடியிருப்பு கிராமத்தில் 9 என மொத்தம் 23 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கடந்த 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக உண்ணாப்புலவு கிராமத்தில் 21, கரைச்சிக் குடியிருப்பில் 6 என 27 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கையளிக்கப்படவுள்ளது.

நிர்மாணிக்கப்பட்டு வீடுகள் கையளிக்கும் நிகழ்வு அமலமரித்தியாகிகள் சர்வதேச திட்டமிடல் இணைப்பாளர் அருட்தந்தை ஜீவேந்திரா போல் (அ.ம.தி), வடமாகாண அமலமரித்தியாகிகளின் முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் (அ.ம.தி, அமைதி தென்றல் இயக்குநர் அருட்திரு ச.மரியசெபஸ்ரியன் (அ.ம.தி), முல்லைத்தீவு பங்குத்தந்தை அ.ப. அன்ரனிப் பிள்ளை, கொக்கிளாய் பங்குத்தந்தை ச.ஜோய் பெர்ணான்டோ (அ.ம.தி) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-267)



கரைச்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் தொழிற்சந்தை நடைபெற்ற போது... (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி, மானிப்பாய்

அன்பின் வியாசரே!

தமன்னாவின் பிறந்த நாளை சொல்ல முடியுமா?

**முதலில் உன் அம்மாவின் பிறந்த நாளை நினைவில் வைத்திரு. அதன பின் தமன்னாவின் பிறந்த நாளை நினைவில் வைத்திருக்கலாம்**

---

சாரு, கோண்டாவில்

அன்பின் வியாசரே!

திருமணத்திற்கு பின்பும் வேறு பெண்கள் பின் அலைபவர்கள் பற்றி?

**நாய்களுக்கு சமம் என்று சொல்லலாம். அவையும் குறிப்பிட்ட காலத்தில் தான் அலையும். ஆனால் இவர்கள்...?**

---

ஜனகன், இணுவில்

அன்பின் வியாசரே!

இரவில்தனிய படுக்க பயமாய்இருக்கிறதே?

**இந்த வயதில் அனைவருக்கும் வரும் வருத்தம் தான். உமக்கு வந்த வருத்தத்தை வீட்டில் சொல்லி விட்டீரா?**

---

பொ.இளவரசி, பருத்தித்துறை

வியா அண்ணா!

உங்களின் பள்ளிக்கால நட்பு பற்றி கொஞ்சம் கூறுங்களேன்? இன்றும் அந்த நட்பு தொடர்கிறதா?

**வெளிநாடு சென்ற என் பள்ளிக் கால நண்பனைச் சந்தித்தேன். கண்ணீர் மல்க கட்டித் தழுவினான். பேசிக் கொண்டே இருந்தான் நம் பள்ளி நினைவுகளைப் பற்றி... உடல் தான் அங்கே, உள்ளம் என்னவோ எம் தேசத்தையே சுற்றித் திரிகின்றது எனக் கூறும்போது கண்கள் குளமாகியது.**

---

விஜிதபாமா, கோண்டாவில்

வியா அண்ணா!

கணவன் முற்கோபக்காரன் என்றால் மனைவி பின் கோபக்காரியா. தயவு செய்து இதற்கு சரியான பதில் கூறுவீர்களா?

**இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டால் எனக்கு மூன்று கோபமும் சேர்ந்து வந்து விடும். (மூன்றாவது எது என்று யோசிக்கிறீரா அதுதான் நடுக் கோபம்)**

---

எதுவும் செய்யாமல் தன்னைப் பற்றி புகழ் கிறவர்களைப் பற்றி தங்களின் கருத்தென்ன?




சு.ஜெயரூபன் , பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

இறந்த பின்பும் பூமியில் பல உயிரினங்கள் பல வழியில் மனிதனுக்குப் பயன் படுகின்றன. ஆனால் மனிதனால் மனிதனுக்குப் பயனில்லையே?

**மனிதனால் மனிதனுக்கு மட்டுமல்ல் இந்த உலகத்திற்கே பயன் இல்லையே! அதிக விஷம் இருக்கும் உயிரினத்தில் மனிதன்தான் முதன்மை பெறுகின்றான்.**

---

உங்களின் பள்ளிக்கால நட்பு பற்றி கொஞ்சம் கூறுங்களேன்? இன்றும் அந்த நட்பு தொடர்கிறதா?

வி.பிரான்சிஸ், கொழும்புத்துறை

வியா அண்ணா!

எதுவும் செய்யாமல் தன்னைப் பற்றி புகழ் கிறவர்களைப் பற்றி தங்களின் கருத்தென்ன?

**அணில்களுக்கு கோடு கீறும் இராமர்கள் இருக்கும் வரை புலுனிகள் தெத்தித் தெத்தித் தான் திரிய வேண்டும்.**

---

வே.அகிலேஸ்வரன், மருதங்கேணி

அன்பின் வியாசரே!

எதிர்வீட்டு ஜன்னல் நிலா என்னைப் பார்த்து சிரிக்கிறது. நான் சிரிக்கும் வேளை முறைக்கிறது. இதற்கு காரணம் என்ன?

**நீர் பாவிக்கும் பற்பசையை மாற்றிப பாரும். அதற்கும் சரிவரவில்லை என்றால் அதன் பின் என்னிடம் கூறும்.**

---

***கொஞ்சம் சிரிங்கப்பா...***




தர்ஷிகா, யாழ்ப்பாணம்

அன்பின் வியாசரே!

என் முகத்தை நான் பார்க்க கண்ணாடி தேவைப்படுகிறதே என் மனத்தை நான் பார்க்க எது தேவைப்படும். பதில் எழுதப் படுமா?

**அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.**

---

கண்ணன், ஒஸ்காலேன்

அன்பின் வியாசரே!

எனக்கு நெடுநாள் சந்தேகம். தயவு செய்து பதில் தரவும். உமக்கும் தெரியாது என்று எனது கேள்வியை நிராகரித்து விடாதீர்கள். உச்சிதனில் பெண்கள் குங்குமம் வைப்பது எதற்கு?

**எந்த நாளும் தன் கணவன் என் பெயரையே உச்சரிக்க வேண்டும் என இறைவனிடம் வேண்டி வைப்பார்கள் போலும்.**

---

# வலி.வடக்கில் எமது வாழிடங்கள் அழிப்பு; தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுங்கள்

## வலி. வடக்கு மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கிலுள்ள பொதுமக்களின்வீடுகளை இராணுவம் தொடர்ந்து இடித்து வருகின்ற போதிலும் யாரும் அதனைப் பற்றி அக்கறை கொள்கின்றனரில்லை என அப்பகுதி மக்கள் ஆதங்கம் கொள்கின்றனர்.

காலம் காலமாக எம் குடும்பங்கள் வாழ்ந்த வீடுகள் எம் கண்முன்னே அழிக்கப்படுவதனால் இங்கு ஏன் பிறந்தோம் என்று என எண்ணுவதுண்டு எனவும் அம்மக்கள் கவலை தெரிவித்தனர்.

வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் ஆறாயிரம் ஏக்கருக்கும் அதிகமான பொதுமக்களின் காணிகளை இராணுவம் பிடித்து வைத்துள்ளது.

பொதுமக்களின் காணியை இராணுவம் பிடித்து வைத்துள்ளமையினால் அந்நிலங்களுக்கு சொந்தமான மக்கள் இன்னும் தமது நிலத்திலேயே அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இது தொடர்பில் அம்மக்கள் தெரிவிக்கையில்,

பாட்டான், முப்பாட்டன் என தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த வீடுகள் எமது இன்ப துன்பங்களில் பங்கெடுத்த எமது வாழ்விடங்கள் எம் கண்முன்னாலேயே இடிக்கப்படுகின்றன.

எவ்வளவோ கஷ்டப்பட்டு கனவுகளோடு நாம் இவ் வீடுகளைக் கட்டியிருந்தோம். எமது கனவுகளை சுமந்த அவ்வீடுகள் எம் அனுமதியின்றி இடிக்கப்படுவது கண்டு எம் நெஞ்சம் தீயாய் எரிகின்றது.

யுத்தத்தில் உறவுகள், உடைமைகளை இழந்தோம். ஆனால், எமது வாழ்விடங்களாவது உள்ளன என நம்பியிருந்தோம். ஆனாலும் இன்று அவை பறிக்கப்படுகின்றன. இனி ஏன் நாம் உயிரோடு இருக்க வேண்டும் என்ற நிலைக்கு வந்துவிட்டோம்.

எமது நிலங்களை மீட்டுத் தருவார்கள் என நம்பியிருந்தவர்கள் கூட வடக்கு மாகாண சபையை கைப்பற்றி ஓரிரு ஆர்ப்பாட்டங்களை மட்டும் நடத்தி விட்டு தற்போது மௌனமாகவுள்ளனர்.

எமது பாடசாலைகள் , ஆலயங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அதனை தடுப்பதற்கு யாரும் தயாராகவில்லை. அவ்வாறு தடுப்பதற்கு வந்தவர்களும் கூட இராணுவத்தினர் உள்ளே செல்ல முடியாது என கூறியதும் மறு பேச்சின்றி திரும்பிவிட்டனர்.

இவை அழிக்கப்பட்ட பின்னர்தான் இவர்கள் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கப் போகின்றார்களா?

இடம்பெயர் முகாமில் நாம் வாழ்ந்து வருவதனால் ஏனையோரினால் நாம் தரக்குறைவாக பார்க்கப்பட்டு வருவதோடு எமது பிள்ளைகள் திருமணம் செய்ய முடியாமல் வாழாவெட்டியாகவே வாழ்கின்றனர்.

தினமும் துன்பங்களினால் செத்துக் கொண்டிருக்கிறோம். எமக்காக போராடுவதற்கு எவரும் முன்வருகின்றனரில்லை.

எமது வாழ்விடங்கள் பறிக்கப்பட்டு விடுமாயின் எமக்கு யாரும் தேவையில்லை என்பதை எமது பிரதிநிதிகளுக்கு தெரிவிக்க விரும்புகின்றோம்.

எமது நில்ங்களை எப்படியாவது இராணுவத்திடமிருந்து மீட்டுத் தருமாறு கதறியழுதனர் வாழ்விடங்ளை இழந்து தவிக்கும் அம்மக்கள்.

இதேவேளை நேற்றைய தினமும் காங்கேசன்துறை மத்தியில் இராணுவத்தினரின் வீடழிப்பு தொடர்பாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

# கலைவிழா

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளி (28 ஆவது) மற்றும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலை (2 ஆவது) கலை விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் சரஸ்வதி முன்பள்ளியின் உபதலைவி திருமதி கோமதி ரவிதாஸ் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக இலங்கையின் உலக சுகாதார ஸ்தாபன ஆலோசகர் வைத்திய கலாநிதி என். சிவராஜா, யாழ்ப்பாண மருத்துவபீட சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருமதி மலையரசி சிவராஜா, சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் இசுரேந்திரநாதன், யாழ்.வலயம் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், நல்லூர் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் பொ.கமலேஸ்வர சர்மா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவவிருந்தினர்களாக ஆசிரியர் பொ.சிவஞானசுந்தரம், நுணாவில் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் ச.குமாரதாஸ், நல்லூர் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் திருமதி.மாலதிதேவி விவேகானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் விழாவில் சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறும். (அ-2)

# வெளிநாட்டு பிரதிநிதிகளுடன் அமைச்சர்கள் சந்திப்பு

பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாட்டை இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்தமை பற்றி தாம் மகிழ்ச்சியடைவதாக இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் ஜீன் போலி மொன்சாசு தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சில் அமைச்சர் ஹக்கீமுடனான சந்திப்பொன்றின் போதே இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன்மூலம் இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரிக்கும். இந்த ஆண்டிற்குள் பிரான்ஸ் நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் வருகை தந்துள்ளனர். இனிவரும் காலங்களில் இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றார்.

இதேவேளை கருத்து தெரிவித்த அமைச்சர் ஹக்கீம், அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் முதலீட்டு மாநாடொன்று நடத்தப்படும். அதற்காக பிரான்ஸ் நாட்டு முதலீட்டாளர்களையும் அனுப்புமாறு தூதுவரிடம் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஜப்பான் அரசின் தொடர்பாடல் பிரதி அமைச்சர் மஷிக்கோ சிபாயமா மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி கெஹலிய ரம்புக்வெலவை சந்தித்துள்ளார்.

அமைச்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மக்கள் தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி சரித்த ஹேரத் உட்பட ஜப்பானிய பிரதிநிதிகள் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண அரசு உடனடியாக தகவல் மையத்தை ஆரம்பிக்க வேண்டும்

வடக்கு மாகாண அரசின் எதிர்கால முன்னேற்றம் தொடர்பில் ஏக்கமான அறிகுறிகளே தென்படுகின்றன. அந்த ஏக்கம் இருவகையில் ஏற்படுவதாகும். அதில் ஒன்று வடக்கு மாகாண அரசின் இயங்குநிலைக்கு அரசாங்கம் போடுகின்ற தடைக் கல்லு.

பொதுநலவாய மாநாடு நடந்தேறும் வரைக்கும் வடக்குக்கு அனைத்துச் சுதந்திரமும் வழங்கியது போல காட்டிக்கொண்ட அரசு, பொதுநலவாய மாநாடு நிறைவுற்றதும் மாகாண அரசுக்கு இடையூறு செய்யத் தயாராயிற்று.

அதன் ஒரு சம்பவமே வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வலி.வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்துக்குச் செல்வதற்கு விதித்த தடையாகும்.

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சர் தனது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்திற்குச் செல்ல அனுமதி இல்லையென்றால்; முதலமைச்சர், வடக்கு மாகாண சபை என்பவற்றுக்கு ஏதேனும் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு மாகாண அரசு தனக்கு உரித்தான அரசியல் யாப்புகளுக்கு அமைய இயங்க வேண்டும். அந்த இயங்குநிலைக்கு மத்திய அரசு தடை போடுமாயின் மாகாண அரசால் எந்தப் பிரயோசனமும் இருக்க முடியாது.

மாறாக மக்களை ஏமாற்றுகின்ற ஒரு செப்படி வித்தையாகவே இதனைக் கருதமுடியும்.

இவை மத்திய அரசு மாகாண அரசின் இயங்கு நிலைக்குச் செய்கின்ற இடையூறு தொடர்பானது.

இதன் மறுபக்கத்தில் வடக்கு மாகாண அரசும் தன்னை ஒழுங்குபடுத்தத் தவறினால் மாகாண அரசினால் தமிழ் மக்கள் எந்த நன்மையையும் பெறமுடியாமல் போகும்.

வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்றபோது தேர்தலில் போட்டியிட்டவர்கள் காட்டிய அக்கறைப்பாடுகளுக்கும் இப்போது அவர்கள் நடந்து கொள்கின்ற முறைமைகளுக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு.

அதாவது வடக்கு மாகாண சபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி ஆட்சியமைத்த பின்னர் அவர்களின் செயற்பாடுகள் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதாக இல்லை. முதலில் தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வடக்கு மாகாண அரசு நடந்து கொள்ள வேண்டும்.

அதற்காக மாகாண சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் மக்கள் சார்ந்த விடயங்களை பகிர்ந்தளித்து அதற்குப் பொறுப்புக்கூறும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதுதவிர முதலமைச்சர், அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரை பொதுமக்கள் சந்திக்கக் கூடியதான அலுவலகங்களையும் கிழமை நாட்களையும் நேரங்களையும் அறியத்தருவதும் அவசியம்.

இதற்குமேலாக, வடக்கு மாகாண அரசுக்கு தகவல் தெரிவிக்கக் கூடியதான தகவல் மையமொன்று 24 மணி நேரமும் இயங்கிக் கொண்டிருப்பது மிகவும் அவசியம்.

இத்தகைய தகவல் மையம் சகலரும் தொடர்பை மேற்கொள்ளத்தக்க வகையில் பழைய,புதிய தகவல் தொடர்பாடல்களைக் கொண்டதாக இருப்பதும் கட்டாயம்.

வட மாகாணத்தில் எத்தகைய பிரச்சினைகள் நடந்தாலும் அதனை வடக்கு மாகாண அரசு அறிந்து கொள்வதற்கும் தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கும் இது பேருதவியாகும்.

சுருங்கக்கூறின் மாணவர்கள் மத்தியில் ஒருவகையான போதைப்பொருள் பாவனை உண்டு என்றால் தகவல் அறிந்தவர்கள் அக்கணமே தகவல் மையத்துக்கு சம்பவத்தைக் கூற, போதைப்பொருளைக் கைப்பற்ற - சூத்திரதாரிகளை கண்டறிய மாகாண அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

இதைச் செய்யாமல் மேடையேறிப் பேசுவதால் எந்த பிரயோசனமும் ஏற்படாது காண் பராபரமே.

# வரலாற்றுச் சின்னங்கள் இடித்தழிக்கப்படுகின்றன

## - கல்வி அமைச்சர் குருகுலராசா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சின்னங்களும் பாடசாலைகளும் மதத் தலங்களும் இடித்தழிக்கப்படும் இக்கட்டான கால கட்டத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின் றனர் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டு துறை அமைச்சர் த.குருகுலராஜா கவலையுடன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோப்பாய் கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற 4-வது வர்ண இரவு நிகழ்வில் தலைமையுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

2010-ம் ஆண்டு தொடக்கம் இந்த வர்ண இரவுகள் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. 250 போட்டியாளர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் பகுதியிலிருந்த புகழ்பூத்த பாடசாலையான நடேஸ்வரா கல்லூரியும் அதனையொட்டிய ஆலயங்களும் உடைக்கப்பட்டதாக அறிய முடிந்துள்ளது.

கடந்த 1990-ம் ஆண்டு யுத்தம் காரணமாக நடேஸ்வரா கல்லூரியும் தனது மாணவச் செல்வங்களுடன் இடம்பெயர்ந்து சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தஞ்சம் புகுந்தது. கடந்த 23 வருடங்களுக்கு முன்னதாகவே நடேஸ்வராக் கல்லூரியில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். புகழ்பெற்ற இக்கல்லூரி இன்று சுக்குநூறாக்கப்பட்டு புழுதியும் மண்ணுமாக்கப்பட்டுள்ளது.

ஒருபுறம் எமது வரலாற்றுச் சின்னங்கள் இடிபட மறுபக்கத்திலே எமது இளம் தளிர்களுக்கு நாம் பதக்கம் சூட்டி அவர்களை வாழ்த்துகின்றோம். இவ்வாறான நெருக்கீடுகள் நிறைந்த காலகட்டத்திலேயே எமது இளைஞர்களும் மாணவர்களும் தமது விடாமுயற்சியின் பலனாக பெற்றுப் கொண்ட வெற்றிக்காக கௌரவிக்கப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க பொதுக்கூட்டம்

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. அதனை தொடர்ந்து சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம் ஒன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இப் பொதுக் கூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது உரிய நேரத்தில் கலந்து கொள் ளுமாறு சங்கச் செயலாளர் எஸ்.சிவசங்கர் கேட்டுள்ளார்.(அ)

# ரி.சி.ரி ஸ்தாபகரின் பிறந்தநாள் விழா

(யாழ்ப்பாணம்)

தியாகி அறக்கொடை நிறுவன(ரி.சி.ரி) ஸ்தாபகர் வாமதேவா தியாகேந்திரனின் 62 ஆவது பிறந்த தினம் நாளை காலை 10 மணிக்கு சொர்ணாம்பிகை மண்டபத்தில் தியாகி அறக்கொடை நிறுவன பணிப்பாளர் செ.கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட சமூக அலுவலர் ஆறுமுகம் ஞானவேல், யாழ்ப்பாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா, கௌரவ விருந்தினர்களாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு, யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் டாக்டர் வி. தியாகராசா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வின் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஸ்ரீ நாக விகாராதிபதி வண கலைமாணி மீகஹஜந்துறே சிறிவிமல தர்மதேரர், ஒஸ்மானியா கல்லூரியின் அதிபர் மௌலவி எம்.எஸ். ஏ.எம். முபாரக், அருள்பணி ப.சத்தியசீலன் அடிகளார் ஆகியோர் நிகழ்த்துவார்கள். இவ்விழாவில் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (அ-2)


## ஆன்மீக சொற்பொழிவு

(கும்பளை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாரந்தோறும் நடைபெறும் ஆன்மீக சொற்பொழிவு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. பூசையினைத் தொடர்ந்து சைவப்புலவர் கந்த சத்தியதாஷன் பாவை நோன்பு எனும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (அ-9-19)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### அனைவருக்குந் தெய்வம் ஒன்றே



நினைத்தபடி நீனிலத்தில் வாழ்வோம்-நாங்கள்
நித்தியரா மென்பதை நாளும் மறவோம்
அயலுனக் கில்லையென்று பெரியோர் -சொன்ன
அந்தரங்க மறிந்துநீ திரிவாய்
முயல முயலவின்பந் தேக்கும் -பொல்லா
மூவித ஆசைகளை நீக்கும்
சுயநல மடியேர் மடியும் -சுருதி
சொன்ன சுவ்ானுபவம் படியும்

# ஆனந்தமான எண்ணங்களை எம் உள்ளத்தில் வளர்க்க முனைவோம்

இன்று நாம் திருவருகைக் காலத்தின முதல் ஞாயிறுக்குள் கால்பதிக்கின்றோம். மனித உயிர்களை மதிப்பதற்கான அர்ப்பணத்தின் சிறந்த காலம் திருவருகைக் காலம் ஆகும்.

கருவில் மனித உயிர் உருவானது முதல் அதன் மாண்பு அங்கீகரிக்கப்படுவதை வலியுறுத்துவதற்கு உகந்த நேரம் இத் திருவருகைக் காலமே ஆகும். மனித உயிர் என்பது வெறும் தசையுடன் கூடிய ஒரு பொருளல்ல,

எனவே நாம் ஒவ்வொருவரும் கருவில் உருவானது முதல் அன்பு கூரப்பட்டு, மதிக்கப்பட்டு பாதுகாக்கப் படவேண்டும் என எதிர்பார்ப்பதில்

## பரமபிதா காட்டிய பாதை

என்ன தவறு என்ற கேள்வியையும் நாம் முன் வைக்கலாம்.

எமது அன்றாடவாழ்வில் எந்த ஒரு விழாவாக இருந்தாலும் சரி, அந்த விழாவைவிட, அதற்கான ஏற்பாடுகள, எதிர்பார்ப்புகள் நம்மை அதிகம் கவர்கின்றன. நல்லது ஒன்று நடக்கப் போகிறது, நல்லது ஒன்றில் பங்கேற்கப்போகிறோம் என்ற எண்ணம் இந்தத் துடிப்பை, ஆர்வத்தை உண்டாக்குகிறது.

இந்த ஆர்வத்தை, எதிர்பார்ப்பை உருவாக்கும் இக்காலத்தை கத்தோலிக்கர்கள் திருவருகைக் காலம் என்கிறார்கள். பெரும்பாலும் ஆனந்தமான எண்ணங்களை உள்ளத்தில் விதைக்கும் காலம் இது.

ஆனால், இன்றைய நற்செய்திப் பகுதி ஆனந்தத்திற்குப் பதிலாக, அச்சத்தை உருவாக்குகிறது. உலக முடிவு பற்றி திருவருகைக் காலம் ஆரம்பமாகும் இன்றே முடிவைப் பற்றி நமது நற்செய்தி கூறுகிறது. ஆரம்பத்திலேயே முடிவா? அதுவும் இப்படி ஒரு முடிவா? ஆரம்பத்திலேயே முடிவைத் தெரிந்து கொண்டால், அதற் கேற்றது போல் நடந்து கொள்ளலாமே! எதிர் நோக்குவது பயங்கரமான முடிவு என்றால், அதைச் சந்திக்க மனதை உறுதிப்படுத்திக் கொள்ளலாமே. இன்றைய நற்செய்தியில் சொல்லப்பட்டிருப்பது நம் சொந்த வாழ்வின் முடிவு மட்டுமல்ல. இவ்வுலகத்தின் முடிவும்தான்.

நாம் சந்திக்கப் போவது பயங்கரமான முடிவு என்றால், அதற்கு இரு வகையில் பதில் சொல்லலாம். ஒன்று, பதுங்கி ஒளியலாம். அல்லது, துணிவுடன் எதிர்கொள்ளலாம். இப்படி எதிர் கொள்வதிலும் இரு வகை. ஒன்று, அந்தப் பயங்கரச் சூழலைப் "பல்லைக் கடித்துக் கொண்டு தாங்கிக் கொள்ளலாம். அல்லது, அந்த பயங்கரத்திலும் பயனுள்ள அர்த்தங்களைக் கண்டுபிடித்து, அவற்றிற்குச் செயல்வடிவம் கொடுக்கலாம். இயேசு, அந்நேரத்தில் என்ன செய்யச் சொல்கிறார்? பதுங்கி ஒளியச் சொல்லவில்லை. தப்பித்து, தலை தெறிக்க ஓடச் சொல்லவில்லை.

மாறாக, தலை நிமிர்ந்து நிற்கச் சொல்கிறார். ஏனெனில்? இதன் பெயர் அழிவல்ல, இது தான் மீட்பு என்பதால். நாம காணும கண்ணோட்டம், நம் எண்ணங்களை மாற்றும். நம் செயற்பாடுகளை மாற்றும். அழிவு என்று பார்த்தால், அலறி அடித்து ஓடத்தான் வேண்டும். மீட்பு என்று பார்த்தால், தலை நிமிர்ந்து நிற்போம், நம்



**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

கடவுளைச் சந்திக்க. தப்பிப்பதற்குப் பதில, தஞ்சம் அடைவோம் அந்த இறைவனில்.

கண்ணோட்டம் செயற்பாடு களை மாற்றும். அழிவு, அவநம்பிக்கை இவற்றிற்கு அடிக்கடி சொல்லப்படும் எடுத்துக் காட்டுகள இரண்டாம் உலகப் போரில் நடைபெற்ற அக்கிரமங்கள். முக்கியமாக, யூத இனத்தை வேரோடு அழிக்க உருவாக்கப்பட்ட நாசி வதை முகாம்கள். ஆனால், அதே வதைமுகாம்கள் நம்பிக்கை தரும் நல்ல பாடங்களைக் கற்றுத் தரும் பள்ளிகளாகவும் மாறின.

நம் உள்ளங்களில் நம்பிக்கையை விதைத்த நல்ல பல சம்பவங்களை, மேற்கோள்களை இத்திருவருகைக் காலம் முழுவதும் பகிர்ந்து கொள்வோம். நம்பிக்கை தரும் நல்ல செய்திகளை இன்னும் அதிகமாகப் பரப்ப முயல்வோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்.கடற்படையினருக்கு பயிற்சி வழங்கும் திட்டத்தை மத்தியரசு நிறுத்தவேண்டும்

## பா.ம.க.நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் ஆவேசம்



(சென்னை)

**தமிழக மீனவர்களைச் சிறைபிடிக்கும் இலங்கைக் கடற்படையினருக்கு பயிற்சியளிப்பதா? எதிர்வரும் காலங்களிலாவது இந்த நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, இலங்கைக் கடற்படையினருக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை மத்தியரசு இரத்து செய்யவேண்டும். இது கண்டனத்திற்குரிய தொன்றாகும் என பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.**

இந்திய கடற்படை சார்பில் நடத்தப்படும் நான்கு ஆண்டு கால கடல்சார் பாதுகாப்பு தொழில் நுட்பப் பட்டப்படிப்பில், இலங்கை கடற்படையினர் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்று இந்திய கடற்படை தளபதி டி.கே. ஜோஷி அறிவித்திருக்கிறார்.

இலங்கையின் தென் பகுதி துறை முகநகரமான கல்லேவில் நடந்த சர்வதேச கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்ற அவர், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் இலஙகை கடற்படையினருக்கு இந்தியாவில் ஒருவாரம்முதல் ஒரு மாதம்வரையிலான குறுகிய கால பயிற்சிகள் மட்டுமே அளிக்கப்பட்டு வந்தன. இத்தகைய பயிற்சிகளைக் கூட வழங்கக் கூடாது என்று தமிழக அரசியல் கட்சிகளும் பொது மக்களும் வலியுறுத்தி வருகின்றனர்.

இத்தகைய சூழலில், கேரள மாநிலம் கண்ணூரிலுள்ள இந்திய கடற்படை கழகத்தில் புதிதாக தொடங்கப்பட்டுள்ள கடல்சார் பாதுகாப்பு தொழில்நுட்ப படிப்பில் இலங்கைப் படையினர் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இத்தகைய பட்டப்படிப்பில் தங்களது கடற்படை வீரர்களை இணைத்துக் கொள்ளும்படி பல நாடுகள் கோரிக்கை விடுத்ததாகவும் அந்நாடுகளை விடுத்து, முன்னுரிமை அடிப்படையில் இலங்கைப் படையினரை இணைத்துக் கொள்ள இந்தியா முடிவு செய்திருப்பதாக இலங்கை ஜனாதிபதியிடம் இந்திய கடற்படை தளபதி தெரிவித்திருக்கிறார். தண்டிக்கப்பட வேண்டிய இலங்கை கடற்படையினருக்கு இந்திய அரசு வரிந்து கட்டிக் கொண்டு பயிற்சி அளிக்கத் துடிப்பது கண்டிக்கத்தககது.

கடந்த 30 ஆண்டுகளில் 600இற்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற படையினரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தாக்கி, காயப்படுத்தப்பட்டுள்ளனர். ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் இலங்கை படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும சிறைபிடிக்கப்படுவதும் இன்றும் தொடர்கிறது. இதற்குக் காரணமான இலங்கை அரசை கண்டிக்க வேண்டிய இந்திய அரசு. முன்னுரிமை அடிப்படையில் இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி அளிக்க முன்வந்திருப்பது தமிழக மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் செயலாகும்.

இலங்கை கடற்படையினருக்கு அளிக்கும் பயிற்சி, வங்கக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை அவர்கள் சுட்டுக் கொல்வதற்கு மட்டுமே பயன்படும்.

ஈழத் தமிழர்களை படுகொலை செய்வதில் தொடங்கி தமிழக மீனவர்களை இலங்கை படையினர் சுட்டுக் கொல்வது வரை அனைத்து பிரச்சினைகளிலும் 7 கோடி தமிழக மக்களின் உணர்வுகளை மத்திய அரசு மதிப்பதே இல்லை. இது குறித்த தமிழக அரசியல் கட்சித் தலைவர்களின் கோரிககைகளும் சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் காற்றில் பறக்கவிடப் படுகின்றன. இந்தியா பயிற்சி அளிக்காவிட்டால் ஏனைய நாடுகள் பயிற்சி அளிக்கத் தொடங்கிவிடும் என்று கூறியே இலங்கை கடற்படையினருக்கு அனைத்து வகையான பயிற்சிகளையும் மத்திய அரசு அளித்து வருகிறது.

உலக வல்லரசாக உருவெடுத்து வருவதாக அடிக்கடி கூறிக்கொள்ளும் இந்திய அரசு, குட்டி நாடான இலங்கையின் மிரட்டல்களுக்கு பணிந்து, அதன கோரிக்கைகளை நிறை வேற்றுவது கண்டிக்கத்தக்கது.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை சந்தித்து பேசிய இந்திய கடற்படைத் தளபதி ஜோஷி, இலங்கைக கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை கண்டித்து ஒருவார்த்தை கூட பேசவில்லை. மாறாக இந்த விடயத்தை இரு நாட்டு கடற்படைகளும் சிறப்பாக கையாள்வதாக பாராட்டியுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தாலும், போர்ப்படைகளின் தளபதிகளாக இருந்தாலும் இலஙகைக்கு சென்றால் அந்நாட்டு அரசை பாராட்டுவதையும் தமிழக மீனவர்களை விமர்சிப்பதையுமே வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

ஏனைய நாடுகளின் இறையாண்மை பற்றி பேசும் இந்தயா, இலங்கைக கடற் படையினரின தாக்குதல்களால் இந்தியாவின் இறையாண்மை கேள்விக்குறியாக்கப்படுவது பற்றி கவலைப்படாமல் இருப்பது வருத்தமளிக்கிறது.

இலங்கை தொடர்பான இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கை தமிழர்களுக்கு எதிரானதாகவே இருந்து வருகிறது. எதிர்வரும் காலங்களிலாவது இந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு இலங்கை கடற்படையினருக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை மத்திய அரசு இரத்து செய்ய வேண்டும் என ராமதாஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (2)

## சூகிக்கு டாக்டர் பட்டம்


மியன்மார் எதிர்க் கட்சித் தலைவர் ஆங்சான் சூகிக்கு அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கு 6 நாட்கள் சுற்றுப் பயணமாக சூகி சென்றுள்ளார். அவருக்கு கான்பெரா நகரிலுள்ள அவுஸ்திரேலிய தேசியப் பல்கலைக் கழகத்தின் சார்பில் சிறப்பான சமூக சேவையில் ஈடுபட்டதற்காக கௌரவ டாக்டர் பட்டம் கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

இந்த டாக்டர் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் சூகி கூறியதாவது,

போராட்டப் பாதையின் இறுதிக்கு நாங்கள் வந்துவிட்டோம் என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாங்கள் இன்னும் போராட்டத்தின் தொடக்கத்தில்தான் இருக்கிறோம். நாங்கள், எங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாதையில் நடக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. உலக நாடுகள் எங்களின் கனவுகளை நனவாக்கு வதற்கு உதவும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது. கடின மான உழைப்பின் மூலம் எங்களது இலக்கை அடைவோம் என்று அவர் கூறினார். (2)

## அமெ.வின் ஜனாதிபதியாக பெண்ணொருவர் தெரிவாகலாம்-ஒபாமா ஆரூடம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக பெண்ணொருவர் வரக் கூடும் என்று தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளதால் அந்நாட்டு மக்களிடையே சுவாரஸ்ய விவாதங்கள் ஏற்பட்டுள்ளன.

ஒபாமா அமெரிக்க ஒளிபரப்பு கழகத்திற்கு பேட்டி அளித்தார். பேட்டியின் போது அவர் பேசியதாவது,


நாட்டிற்கு அடுத்த ஜனாதிபதியாக பெண் ஒருவர் வரக் கூடும் என்று குறிப்பிட்டார். அமெரிக்காவில் திறமையான பல பெண் அரசியல் நிர்வாகிகள் இருப்பதாகவும் இவர்களில் ஒருவர் விரைவில் அமெரிக்க ஜனாதிபதி நாற்காலியில் அமருவார் என்று தெரிவித்தார். அமெரிக்காவில் முதல் முறையாக தேர்ந்தெடுகதுப்பட வுள்ள பெண் ஜனாதிபதியால் மிகவும் சிறப்பாக பணியாற்ற முடியும் என்றும் ஒபாமா கூறினார்.

அதேசமயம் ஒபாமா குறிபபிடும் பெண்மணி முன்னாள் வெளியுறவுத்துறை செயலாளர் ஹிலாரி கிளின்டனைத் தான் குறிப்பிட்டாரா என்பதில் தெளிவில்லை

இந்நிலையில் எதிர்வரும் வரும் 2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதப்தி தேர்தலில் போட்டியிட குடியரசுக் கட்சி ஹிலாரக்கு வாய்ப்பளிக்கும் என எதிர் பார்க் கப்படுகிறது. இதனையடுத்தே ஒபாமா இவ் வாறு கூறியுள்ளதாக வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன. (2)

# வான்காப்பு மண்டலத்திற்கு சீன போர் விமானங்கள் விரைவு

## கிழக்கு சீன கடலில் பதற்றம்



(பீஜிங்)

அமெரிக்கா, ஜப்பான் நாடுகளுக்கு பதிலடியாக சவால் விடும் வகையில் வான் பாதுகாப்பு மண்டலத்துக்கு போர் விமானங்களை சீனா அனுப்பியது. இதனால் கிழக்கு சீன கடல் பகுதியில் பதற்றம் நிலவியுள்ளது.

**வான் பாதுகாப்பு மண்டலம்**

கிழக்கு சீன கடல் பகுதியில் ஏராளமான குட்டித்தீவுகள் அமைந்துள்ளன. இந்த தீவுகளின் உரிமை தொடர்பாக சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே பிரச்சினை இருந்து வருகிறது. இதனால் இரு நாடுகளும் அப்பகுதியில் ஊடுருவல் நடக்கிறதா? என்பதை வேவு பார்த்து வருகின்றன. தென்கொரியா, பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளும் அவ்வழியாக சென்று திரும்ப உரிமை கோருகின்றன. இந்நிலையில் கிழக்கு சீன கடல் பகுதியை வான் பாதுகாப்பு மண்டலமாக சீனா கடந்த வாரம் அறிவித்ததுடன், விமானங்கள் பறக்க முன் கூட்டியே தகவல் தர வேண்டும் என எச்சரிக்கை விடுத்தது.

**அமெரிக்கா, ஜப்பான் எதிர்ப்பு**

சீனாவின் இந்த நடவடிக்கைக்கு ஜப்பான், அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. மேலும் அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் நாடுகளும் விமர்சித்தன.சீனா அறிவிப்பை பொருட்படுத்தாமல் அமெரிக்காவின் 'பி-52' குண்டுவீச்சு போர்விமானம் கடந்த செவ்வாய்க்கிழமை கடல் பகுதி வழியாக சுமார் 2 மணி நேரம் பறந்து சென்றது. ஜப்பான், தென்கொரியாவும் போர்விமானங்களை அனுப்பின.

**சீன போர் விமானங்களும் விரைவு**

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக பிரச்சினைக்குரிய கடல் பகுதிக்கு சீனாவும் போர் விமானங்களை அனுப்பியது.

**பதற்றம் முற்றுகிறது**

இந்த பிரச்சினையில் எல்லையை தாண்டுவதாக சீனாவும், ஜப்பானும் ஒருவர் மீது ஒருவர் குற்றம்சாட்டுகிறார்கள். சீன தரப்பில், அமெரிக்கா, ஜப்பான் மற்றும் 18 நாடுகள் தங்களது கடல் எல்லையை தாண்டி வான் பாதுகாப்பு மண்டலத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஆகவே எங்கள் மீது பழிபோடக்கூடாது' என்கிறது. ஜப்பான் அரசு செய்தித்தொடர்பாளர் யோஷிஹிடே சுகா கூறுகையில், 'நாங்கள் அங்கு தொடர்ந்து கண்காணிப்பு பணியில் ஈடுபடுவோம்.

நாங்கள் அதை நிறுத்த மாட்டோம்' என உறுதியாக கூறுகிறார்.இரு நாடுகளின் வடாப்பிடி போக்கினால் கிழக்கு சீன கடல் பகுதியில் பதற்றம் முற்றுகிறது. (2)

# தாய்லாந்து இராணுவத் தலைமையகம் ஆர்ப்பாட்டக்காரர்களால் முற்றுகை

## பேச்சுவார்த்தை அழைப்பு நிராகரிப்பு

தாய்லாந்தில் ஷினவத்ரா அரசுக்கு எதிராக தொடர்ந்து ஆறாவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக் காரர்கள அந்நாட்டின் இராணுவத் தலைமையகத்தை முற்றுகையிட்டனர்.

ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் இராணுவத் தலைமையக வளாகத்திற்குள் நேற்றுமுன்தினம் நுழைந்ததாக இராணுவ செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

பிரதமர் யிங்லக் ஷினவதரா பதவி விலகக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், அவரது கட்சியான பியூ தாய் கட்சியின் தலைமை அலுவலகத்தையும் முற்றுகையிட்டனர்.



இதனால் பியூ தாய் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு பாதுகாப்பு அதிகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, நம்பிக்கை யில்லா தீர்மானத்தில் வெற்றி பெற்ற பிரதமர் ஷினவத்ரா, போராட்டத்தை கைவிட்டு அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வருமாறு ஆர்ப்பாட்டக் காரர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு தலைமை வகிக்கும் சுதீப் தாக்சுபன், ஷினவத்ராவின் அழைப்பை நிராகரித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண சபை...

ஜனாதிபதி பொருளாதார மற்றும் ஏனைய விடயங்களில் புதிய வட மாகாணசபை நிர்வாகத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட தாம் தயார் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வடக்கில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள வட மாகாண சபையுடன் ஒத்துழைப்புடன் செயற்பட தனது அரசாங்கம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே நாட்டின் தூதுவர் கிரேட் லோச்சன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு நோர்வே தூதுவரிடம் கூறியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கும் நோர்வே தூதுவருக்கும் இடையிலான இந்த குறுகிய நேர சந்திப்பில் இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பில் இரு வரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

யுத்தம் முடிந்த பின்னர் வடக்கில் இயல்பு நிலைமையை ஸ்தாபிப்பதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் தலைமைத்துவத்தின் கீழ் அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து நோர்வே தூதுவர் இந்த சந்திப்பின்போது பாராட்டுக்களை வெளியிட்டதாக ஜனாதிபதி பேச்சாளர் மற்றும் சர்வதேச ஊடக அலகு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் தொடர்பில் நோர்வே அரசாங்கம் மகிழ்ச்சியடைவதாகவும் நோர்வே தூதுவர் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, வடக்கு மக்களின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தை உறுதிபடுத்தும் வகையில் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள வட மாகாண சபையுடன் ஒத்துழைப்புடன் செயற்படத் தயாராக இருப்பதாகக் கூறியுள்ளார். (செ-11)

## இந்தியாவுக்கு கோத்தா...

நடந்துள்ள முதலாவது இருதரப்பு சந்திப்பான இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

13-வது திருத்தச்சட்டத்தை, முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி இந்தியா வலியுறுத்தி வருகின்ற நிலையில், மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வருபவர் கோத்தாபய ராஜபக்ச ஆவார்.

அரசாங்கத்தில் செல்வாக்குமிக்க ஒருவராக உள்ள அவரது இந்தியப் பயணம் முக்கிய மானதொன்றாக புதுடில்லி அதிகார வட்டாரங்களில் கருதப்படுகிறது.

கோத்தபாய ராஜபக்சவின் இந்தியப் பயணம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் எந்த தகவலையும் வெளியிடவில்லை.

பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னதாக கோத்தபாய ராஜபக்ஷ புதுடில்லி செல்லத் திட்டமிட்டிருந்தார். ஆனால் அது தமிழ்நாட்டின் எதிர்ப்புகளை அதிகளவில் ஏற்படுத்தும் என்பதால் அவரது புதுடில்லி வருகையை பிற்போடும்படி இந்தியா கேட்டிருந்தது.

இந்தநிலையில் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் டி.கே.ஜோஷி இலங்கையில் பயணம் மேற்கொண்டுள்ள சூழலில் இலங்கையின் பாதுகாப்புச் செயலரின் புதுடில்லிப் பயணம் இடம்பெற்றுள்ளது. (செ-11)

## இலங்கையில் நடந்...

எதிராக தீர்மானம் நிறைவேற்ற பா.ஜ.க. ஆதரவு தரவில்லை.

இலங்கை தமிழர்கள் குறித்து, பிரதமர் மன்மோகன சிங் விரைவில் யாழ்ப்பாணம் சென்று முதல்வர் விகனேஸ்வரனுடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றார்.

இலங்கையிலே நடைபெற்ற இனப்படுகொலையைப் பற்றி ஒரு விரிவான, உண்மையான விசாரணை நடத்தப்பட வேண்டும். அந்த விசாரணை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு உண்மையான விசாரணையாக இருக்க வேண்டும்.

அந்த இனப்படுகொலைக்கு காரணமானவர்கள் அடையாளம் காட்டப்பட வேண்டும். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். இதுதான் நம்முடைய கோரிக்கை. தொடர்ந்து நாம் அந்த கோரிக்கையை வலியுறுத்தி வருகிறோம்.

நம்முடைய குரல் தொடர்ந்து ஒலிப்பதன் காரணமாகத்தான் பலநாடுகளும் இன்று அந்த குரலை ஒலிக்க தொடங்கியிருக்கிறன. இதுவரை இதைப்பற்றி பேசாத பிரிட்டிஷ் பிரதமர் கமரூன், இப்போது பேசுகிறார் என்றால் அது நம்முடைய இராஜதந்திரத்துக்கு கிடைத்த வெற்றி.

டேவிட் கமரூன் செய்திருக்க வேண்டியதை இந்திய பிரதமர் செய்திருக்க வேண்டும் என்று சிலர் பேசியதை நான் பார்த்தேன். டேவிட் கமரூன் செய்ததை இந்திய பிரதமர் செய்ய வேண்டும் என்றால் இந்திய பிரதமர் இலங்கைக்கு போகக்கூடாது என்று சொன்னவர்கள் அவர்கள்தானே.

இந்திய அரசில் இரண்டு கருத்துக்கள் இருந்தன. நான் இல்லையென்று சொல்லவில்லை. இலங்கைக்கு இந்திய பிரதமர் போக வேண்டும். போகும் வழியிலே யாழ்ப்பாணத்துக்குப் போக வேண்டும். பிறகு கொழும்புக்கு போக வேண்டும். மாநாட்டிலே கலந்து கொள்ள வேண்டும். அங்கே இந்தியாவின் நிலைமையை பிரதமர் தெளிவாக எடுத் துரைக்க வேண்டும் என்பது ஒரு கருத்து. இன்னும் சொல்லப் போனால் எல்லாருக்கும் தெரிந்த இரகசியம்தான். வெளியுறவுத்துறையின் கருத்தும் அதுதான்.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணத்தை இணைக்க இந்திய அரசு தொடர்ந்து பாடுபடும். இலங்கை தமிழர்களின் நல்வாழ்விற்காக எவ்வளவு பணத்தையும் செலவழிக்க தயார் என அமைச்சர் சிதம்பரம் உணர்ச்சிகரமாகப் பேசினார். (செ-11)

## கமரூனின்...

குறிப்பிடுகையில்,

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பொதுநலவாய மாநாட்டு காலப்பகுதியில் இலங்கை குறித்து தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் நாம் பதற்றமடைய வேண்டிய அவசியம் இல்லை என்பதே எனது கருத்தாகும்.

பிரிட்டன் எமது உலகில் உள்ள ஒரு நாடு மட்டுமேயாகும். இலங்கையை பொறுத்த மட்டில் சர்வதேச அரங்கில் எங்களுக்கு அதிகமான நட்பு நாடுகள் இருக்கின்றன.

எனவே ஏதாவது நெருக்கடிகள் ஏற்படும் போது இலங்கையின் நட்பு நாடுகள் தமது ஆதரவினை வழங்கும். குறிப்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையிலும் எமக்கு நட்பு நாடுகள் மிக அதிகமாகவே உள்ளன.

அந்தவகையில் பிரிட்டன் பிரதமர் கமரூன இலங்கைக்கு காலக்கெடு விதித்தமை தொடர்பில் நாம்பதற்றமடைய வேண்டியதில்லை என்றார்(செ-11)

## ஜெனிவா மனித உரிமை...

ரங்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த யோசனையை கொண்டு வருவதற்காக பிரித்தானியா வெளி விவகார அமைச்சர் வில்லியம் ஹேக் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் இணைந்து செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக தெரியவருகிறது.

அதேவேளை இந்த யோசனைக்கு பின்னணியை உருவாக்கும் வகையில் மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளை இலங்கை தொடர்பான தமது எழுத்து மூலமான அறிக்கையை மார்ச் 20ஆம் திகதி தாக்கல் செய்ய உள்ளார்.

அடுத்த வருடம் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் 14 புதிய அங்கத்துவ நாடுகள் இணையவுள்ளதுடன் இதில் பிரித்தானியாவும் அடங்குகிறது.

இலங்கைக்கு ஆதரவான சீனா, கியூபா, ரஷ்யா, சவூதி அரேபியா, வியட்நாம் ஆகிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழுவில் இடம்பெறவிருப்பதால் இலங்கைக்கு எதிரான கூட்டு யோசனைக்கு இந்த நாடுகளின் தூதுவர்கள் பலத்த எதிர்ப்பை வெளியிடுவார்கள் என இலங்கை அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே கொண்டுவரப்படவுள்ள கூட்டு யோசனை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக பிரித்தானியாவை சேர்ந்த 7 அமைப்புகள் பிரதமர் கமரூனை சந்திக்க உள்ளதாக தெரியவருகிறது.

இந்த கூட்டத்தொடர் 2014-ம ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி தொடங்கி 23-ம் திகதி நிறைவடையும். (செ-11)


கஜமுகன் டென்ரல் கிளினிக்

நெல்லியடியில்

Dr.A.செந்தில்குமரன் அவர்களினால்
நிரந்தரமாகப் பல் கட்டுதல், நிரந்தரமான கிளிப் போடுதலும், கர்ப்பிணி தாய்மார்களுக்கான பற் பரிசோதனைகளும்

மற்றும் சகலவிதமான பல் / வாய் சிகிச்சைகளும் இடம்பெறுகின்றன.

கஜமுகன் டென்ரல் கிளினிக்
ம.ம.வீதி, நெல்லியடி. T.P : 021 226 2888
(இலங்கை வங்கிக்கு அருகில்)
(C-5623)

நீங்களும் ஒரு ENGINEER ஆக வேண்டுமா?

- நீங்கள் விஞ்ஞானத்துறையில் B.Sc, M.Sc பட்டதாரியா?
அல்லது
- NCT, NVQ, NAB, Dip in Tech, HND, NDT, HNDE போன்ற தகைமை ஒன்றை ELECTRONICS, ELECTRICAL, COMPUTER, IT & COMMUNICATION துறையில் கொண்டுள்ளீரா?
அல்லது
- இத்துறைகளில் ஆகக்குறைந்தது 2 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் உண்டா?

அப்படியானால்

→ நீங்கள் UK நாட்டின் ROYAL தர பொறியியல் நிறுவனமான IET(UK) இனால் அங்கீகரிக்கப்பட்ட ENGINEER ஆக முடியும்!
→ ENGINEERING COUNCIL (UK) இனால் வழங்கப்படும் C.Eng (UK), I.Eng (UK) போன்ற தகைமைகளைப் பெற முடியும்!
→ உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அங்கீகரிக்கப்பட்ட ENGINEERING ஆக முடியும்!
→ இதன்மூலம் U.K, Canada, Australia மற்றும் America போன்ற நாடுகளுக்கு VISA வினை இலகுவாகப் பெற்று உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாக்க முடியும்!

மேலதிக தொடர்புகளுக்கு
HIONE (Research & Development Centre)
118, GPS வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
Hotline: 071-872-8738, 0777-36 4939 Email: info@hionejaffna.com
Online Contact: www.hionejaffna.com
குறிப்பு: 1.வயதெல்லை கிடையாது.
2.பரீட்சை எழுத வேண்டிய தேவையில்லை.
(4597)

உடனடித் தேவை

யாழ் நகர மத்தியில் உள்ள உயர்தர சைவ உணவகம் ஒன்றிற்கு

Accounting Assistant (உதவிக்கணக்காளர்) (Store Keeping & Computer Word, Excel) அனுபவம் வாய்ந்தவர் விரும்பத்தக்கது.

Care taker (வீடு பராமரிப்பவர்) வயது - 40 க்கு மேல். தங்கியிருந்து வேலை செய்தல் அவசியம்.

(4624)

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் : 077 347 8427

STUDY in ITALY

- EUROPE நாடு ஒன்றில் கல்விகற்க அரியதொரு வாய்ப்பு
- G.C.E O/L தகமை போதும்.
- IELTS தேவை இல்லை.
- வங்கிக்கணக்கு காட்டவேண்டிய கட்டாயமில்லை.



HOT LINE 0779265447

(குறிப்பு: வீசா கிடைத்தபின்னரே கட்டணம் அறவிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்- FULL PACKAGE)

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.

STUDY IN LONDON

- G.C.E O/L சித்தியடைந்திருந்தலே போதும்.
- அரச கல்லூரிகளில் பட்டப்படிப்பு.
- வேலை செய்து படிக்கக்கூடிய அரிய வாய்ப்பு.
- City&Guilds English B1 அல்லது IELTS பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

CITY & GUILDS APPROVED CENTRE

கடந்த 7 மாதங்களில் மட்டும் எமது நிறுவனத்தினூடாக 40 மாணவர்களிற்குமேல் City&Guilds English Diploma (UK) A1,B1 பரீட்சையில் சிறந்த,அதிசிறந்த பெறுபேறுகளை தட்டிச்சென்றுள்ளனர்.

பரீட்சையின் பின்னர் UK நாட்டின் Diploma சான்றிதழை பெற்று லண்டன் கல்லூரிகளில் உயர் கல்வியை தொடரமுடியும் மற்றும் லண்டன் நாட்டில் குடிபெயர முடியும்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற மேல்மாகாண ஆசிரியரின் வழிகாட்டலில் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri
T.P: 0779265447, 0217 200 989
e mail: chec.usr@gmail.com Gov.Reg No:TN/DS/UC/0324
சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகில்


## மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு சச்சிதானந்தன்

(இலங்கை போக்குவரத்துச் சபை, கோண்டாவில் முன்னாள் முகாரி (Foreman)



மல்லாகம் சோடாக் கொம்பனி லேனைப் பிறப்பிடமாகவும், இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு சச்சிதானந்தன் கடந்த (29.11.2013) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு-சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும், ஜெயேந்திரன், நவநீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பெறாமகனும், இந்திராணியின் அன்புத் தம்பியும், சேயோன், பாலமுரளி, முகுந்தன், முரளீதரன், செந்தில்ராஜா மற்றும் கஸ்தூரி, வாசுகி, விதுரன், வானதி, வீஸ்மன், இதபாஷினி, சாருகாசினி, நந்தேஷன் ஆகியோரின் அன்பு மாமனும், சூரியகலா, கலைவேந்தன், தமிழ்வேந்தன், காலஞ்சென்ற காண்டீபன் மற்றும் Dr. கஜேந்திரன், கார்த்திகா, சிந்துஜன் ஆகியோரின் சிறிய தந்தையும், காலஞ்சென்ற தேசவன் மற்றும் கமலேஸ்வரி, சறோஜினிதேவி, திருஞானசம்பந்தர்-மாலினி, ஞானசம்பந்தர்-சிவசக்தி, ஞானசூரியர் -சாந்தினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் யோகராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச.ஜெயேந்திரன் (மகன்) தொ.பே. 0776635942
மஞ்சத்தடி இணுவில்.
(4625)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KANDY HOMES & Construction

நவீன வடிவமைப்புக்களில் உங்களது விருப்பத்திற்கு அமைய எண்ணம் போல அழகிய வீட்டினை வாஸ்துசாஸ்த்திர முறைப்படி நாம் அமைத்துக் கொடுக்கின்றோம்.



- 15 வருட கால அனுபவம் வாய்ந்த சேவைத்துறையில்
- தற்பொழுது எமது நிறுவனத்தால் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளினையும் கட்டிக் கொண்டிருக்கும் வீடுகளையும் நேரில் பார்வையிடலாம்.



81. Pallaly Road,
Ilupaiyadi Junction,
Jaffna.

T.P :- 0777462889, 0777463469, 0217917623

Email :- kandyhomes11@gmail.com

## AUSTRALIA - NEW ZEALAND AMERICA - SWITZERLAND - MALAYSIA
## சிகரம் வழங்கும் புதிய வாய்ப்புக்கள்

விரும்பிய நாடு பொருத்தமான கல்வி
வருமானம்தரும் தொழில் - குடியுரிமை
**உங்களுக்கு வேண்டிய எதுவும் இப்போது எங்களிடமே...**

**Australia:** BlueMountains Hotel Schoolஇல் வருமானத்துடன் பயிற்சிபெற்று தொடர்ந்து அங்கு பணியாற்ற...

**New Zealand:** அரசாங்க Polytechnic Colleges இல் கல்விகற்று தொழில்வாய்ப்புடன் PR பெற...

**America:** 1. Kendall School of Culinary Arts இல் வருமானத்துடன் கல்வி கற்று அங்கேயே தொழில்செய்ய...
2. அமெரிக்க விசாவுடன் உல்லாசப் பயணக் கப்பலில் பணியாற்றி பல இலட்சங்கள் சம்பாதிக்க

**Switzerland:** வருமானத்துடன் ஹொட்டேல் தொழிற்துறைப் பயிற்சி பெற்று சுவிற்சர்லாந்தில் அல்லது விரும்பிய ஐரோப்பிய நாடுகளில் தொழில் பெற்று வருமானமீட்ட...

**Malaysia:** வருமானத்துடன் ஹொட்டேல் முகாமைத்துவப் பயிற்சி பெற்று ஹொட்டேல்கள் மற்றும் உல்லாசப் பயணக் கப்பல்களில் வேலை செய்ய...

விரும்பிய எந்தவொரு நாட்டுப் பல்கலைக்கழகப் பட்டக் கல்வியையும் பெற்று அந்தந்த நாடுகளுக்கே செல்ல

குறிப்பு:
1. விசா கிடைத்த பின்னரே முழுக் கட்டணமும் அறவிடப்படும்.
2. ஆறுதலாக, ஒவ்வொருவருக்கும் விரிவான ஆலோசனை வழங்கி, அவரவருக்குப் பொருத்தமான மிகச்சரியான தெரிவு பெற்றுத்தரப்படும்.

**தொலைபேசி வாயிலான முற்பதிவு மிக அவசியம்**

சிகரம் SIKARAM கல்வி - தொழில் வழிகாட்டி
இல. 153, பலாலி வீதி, கந்தரமடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 222 00 11, நேரடி: 0773 616 798
இணையம்:www.sikaram.lk

(C-5597)

## வேலைவாய்ப்பு

அரச துறை, தனியார் துறை மற்றும் NGOகளில் தற்போது கோரப்பட்டுள்ள வேலைவாய்ப்புகள் பற்றிய வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உதவிகளுக்கு..

**கோலாசிற்றி** தொழில் வங்கி 021 320 2787
224/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (இலுப்பையடி சந்திக்கு அருகில்)
இனி நாம் இருக்கிறோம் நேரில் வரவும்

(4627)

## தேவை

கட்டிட நிர்மாணத்துறையில் பல வெற்றிடம். (யாழ்/ கொழும்பு/உடையார் கட்டு/ கண்டி மற்றும் பல பிரதேசங்களில்) மேசன்/தச்சு/செடலின் பாஸ்/கம்பி பாஸ். (1200/-,1500/-) கையுதவியாளர் (900/-மேல்) மாதச் சம்பளம்/தினமும் கைச் செலவுண்டு. வருகை அன்றே வேலையில் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

**0775561883** (C-5612)

## வேலையாட்கள் தேவை

கொத்து ரொட்டி, பிறைட் ரைஸ், டெவில் சிக்கன் வகையான உணவுகளைத் தயாரிப்பதில் முன் அனுபவம் மற்றும் நிபுணத்துவம் வாய்ந்தவர் தேவை. அத்துடன் யாழ். உணவு வகைகளை சுவைபட தயாரிப்பதில் வல்லுநர்களும் மற்றும் உணவகத்தை துப்புரவு (Cleaning) செய்யக் கூடியவர்களும் உடன் தேவை.

**தொடர்பு : 0766038561**
Rajeethkumar (4596)

## உணவகம் வாடகைக்கு

முல்லைத்தீவு நகரில் சகல வசதிகளும் கொண்ட விசாலமான கடை (உணவகம் தற்போது இயங்கிக் கொண்டிருக்கிறது) உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: **077 5360958** (4626)

## ஆயுதம் மீட்பு!

மஹாஓயா, பூலாவல பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்திலிருந்து கைக்குண்டொன்றும் ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தும் 50 ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன என்று மஹாஓயா பொலிஸார் தெரிவித்தனர். வீட்டுத்தோட்டத்தில் குழியொன்றை தோண்டிக் கொண்டிருந்த போதே இவைகள் வீட்டு உரிமையாளரினால் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(செ-11)

## வெளிநாட்டில் உயர்கல்வி வேலைவாய்ப்புடன்

**UK Collaboration**
- University of East London
- Bedfordshire University
- Glyndwr University
- CRIC - Anglia Ruskin University
- EIC - Edinburgh Napier University
- HIBT - University of Hertforshire
- ICP - University of Portsmouth
- LIBT - Brunel University
- PDIC - Plymouth University

**Australia Collaboration**
- James Cook University
- Curtin University
- MIBT - Deakin University
- ACN - La Trobe University
- PIBT - Edith Cowan University
- SIBT - University of South Australia

**Swiss Collaboration**
- HTMi - Hotel Tourism Management Institute
- European University

**Study Hotel Management in Singapore & Malaysia with part time job**

**Malaysia Collaboration**
- APU (APIIT)
- Taylor's University
- INTI University
- SEGI University
- KDU University

**Singapore Collaboration**
- James Cook University
- AEC Business School

# Entry with G.C.E O/L
# IELTS Not required **
# Free Accommodation **
# Full Scholarships Available **
# Credit Transfer to year 2 / 3 available
# Financial Sponsorships Available
** Conditions Apply

ICS Study Overseas
தொடர்புகளுக்கு
77, Clock Tower Road, Jaffna
021 7306000 , 077 3013060

## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - **Deutsch** (டொச்) மற்றும் நெதர்லாந்து - **Dutch** (டச்) புதிய பிரிவுகள் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

பிரிவுகள இவவாரம ஆரமபமாகினறன.

- French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
- வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
- Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவ[illegible] தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
- Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

**Vivekananda Academy**
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-5529)

## நிரந்தர தொழில்வாய்ப்பு

உங்கள் கனவு கப்பல் விமான நிலையத்தில் வேலை செய்வதா? துறைமுகம்/ விமான நிலையத்தில் (தனியார்)/ கப்பல் புனர்நிர்மாணத்துறையில் வெல்டர்/தச்சு/ பெயின்ரர்/சாதாரண ஊழியர்கள் மற்றும் விமான நிலைய சுத்திகரிப்பாளர்/காகோ/ லொன்றி/கேட்டரீஸ் பிரிவுக்கு 18-45 ஆண் - பெண் தேவை.

உணவு, தங்குமிடம் சகாய விலைகளில். சம்பளம் 18,000/-, 25,000/-, 35,000/-

அழைப்புக்கு முந்துங்கள்: **0775561883**


(C-5611)

## கிளிநொச்சியில்!

IT பட்டப்படிப்பின் முதல் வருடத்திற்கு சமனான சர்வதேசதரம் வாய்ந்த கற்கைநெறிகள்

DiTEC INTERNATIONAL edexcel Assured
- Duration : 4 months
- Free Text Books

With an International Certification (Edexcel - UK)



**Diploma in Information Technology**

DiE — Grammar | Spoken | Comprehension
Duration : 4 months — Free Text Books
edexcel Assured

FREE DVD with Role-play Videos

**Diploma in English**

IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளம்

- DiBM edexcel Assured — Diploma In Business Management
- DiSE edexcel Assured — Diploma In Software Engineering
- DiCA edexcel Assured — Diploma In Computerized Accounting
- DiWE edexcel Assured — Diploma In Web Engineering

Offer of DECEMBER Special DISCOUNT *condition apply

FREE Pendrive

மேலதிக விபரங்களுக்கு
SMS to this Number 077 55 888 95
<Fullname> Space <Course> Space <Address>

**புதிய பிரிவுகள்**
2013.12.04 2013.12.07 காலை 9 : 00 மணி

Most popular IT Diploma in Sri Lanka Over 25,000 enrollments in 2012

**ESOFT COMPUTER STUDIES**
Shaping Lives, Creating Futures.
No.01, Kanagapuram Road, Kilinochchi | Tel : 021 228 5444

(C-5621)

## லைடன் புடவை நிலையம்

புதுவருட விலைக்கழிவு

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு சகலவிதமான துணிவகைகள், ரெடிமேற் ஆடைகள் மற்றும் ஆண், பெண் இருபாலாருக்கும் உரிய பாடசாலை சீருடைத் துணி வகைகள் அனைத்தையும் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...

01.12.2013 தொடக்கம்
31.12.2013 வரை

**லைடன் புடவை நிலையம்**
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ் நிலையத்திற்கு முன்பாக)

(C-5609)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org